R. GUNARATNA RAJAH
PARIS

THAYAGAM

25 . 3 . 94

75¢

உண்ணம்:5
தேடல்:38

# தாயகம்

# தென் மாகாணத்தேர்தலில் ஐ.தே.கட்சி தோல்வி

## சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணி வெற்றி

குதிரை மலை முனையில்
**சிங்கள மீனவர்கள் படுகொலை**
தமிழர்கள் அகதிகளானுர்கள்

**புத்தாண்டின் பின் குடாநாட்டின் மீது தாக்குதல்?**

**சபாநாயகர் யாழ்ப்பாணம் செல்கிறுர்**

வட-கிழக்கு இணைப்பு பற்றிய சர்வசன வாக்கெடுப்புக்கு **கூட்டணி எதிர்ப்பு**

மட்டுநகரில் தேர்தலில் வென்றவர்களை விலைக்கு வாங்க ஐ.தே.முயற்சி

**நகரின் மத்தியில்**
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்

**SENDURAN & CO**
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்
# நிரு பிராண்ட்®
# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

Second class mail Registration No:8435




# தென்மாகாணத்தில் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான மக்கள் முன்னணி பெருவெற்றி

## சபாநாயகர் யாழ்ப்பாணம் செல்வார்

சபாநாயகர் முகமது பேச்சுவார்த்தைகளுக்காக யாழ்ப்பாணம் செல்வார் என்ற செய்திகள் உறுதியாகும் வாய்ப்புகள் தென்படுகின்றன. முன்பு புலிகள் அவரை வருமாறு அழைப்பு விடுத்த போதும், ரம்zான் பண்டிகை நோன்பு காரணமாக அவர் செல்லவில்லை. தற்போது பண்டிகை முடிவடைந்ததால் அவர் செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சித்திரை முதலாம் திகதி இவர் யாழ்ப்பாணம் சென்று அங்கு மூன்று நாட்கள் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை ஏற்படுத்தவதே இவரது விஜயத்தின் நோக்கம் என்றும் இவர் எந்த வித தீர்வு யோசனையையும் கொண்டு செல்ல மாட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவரது விஜயத்திற்கு தொண்டர் நிறுவனம் ஒன்று ஆதரவு அளித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## ஆனையிறவில் மோதல்

கடந்த திங்கட்கிழமை ஆனையிறவு முகாம் மீது புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தாக்குதல் முடிந்ததும் ஒரு இராணுவத்தினரின் உடலும் மூன்று துப்பாக்கிகளும் மீட்கப்பட்டதாகவும் இராணுவம் மேலும் தெரிவித்தது. மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். தாக்குதல் நடத்திய புலிகள் மீது ஹெலிகொப்டர்கள், விமானம், எறிகணை மூலம் தாக்குதல் நடத்தியதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முப்பதுக்கும் மேற்பட்ட புலிகள் குறுங்குண்டுகளும் மோட்டார்களும் கொண்டு தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது. பூனகரி முகாமிற்கு அருகில் உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இராணுவம் கூறியுள்ளது. காவலரண்களுக்கு அப்பால் புலிகள் நீண்ட காலம் தங்கியிருந்து வேவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் மறைந்திருந்து த்ாக்குவதாகவும் இதற்காகவே இந்த உணவுப் பொருட்கள் அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தென் மாகாண சபைத் தேர்தல்களில் ஜனாதிபதி விஜேதுங்கவின் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி அடைந்திருக்கிறது. பதினேழு வருட கால ஆட்சியின் பின்னர் ஐ.தே.கட்சி மாபெரும் தோல்வியைச் சந்தித்திருக்கிறது. சுதந்திரக் கட்சி 53 ஆசனங்களில் 32 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றியீட்டியுள்ளது. ஆளும் கட்சிக்கு மொத்தம் 23 ஆசனங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. மொத்தம் 53 ஆசனங்களுக்கு 228 பேர் போட்டியிட்டிருந்தனர்.

## ஆட்சியைப் பிடிக்க பகீரதப் பிரயத்தனம் செய்த ஐ.தே.க

சென்ற தடவை தேர்தலில் வெற்றி பெற்ற சுதந்திரக்கட்சி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கூட்டணியின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக உறுப்பினர் ஒருவரைக் கடத்திய ஐ.தே.கட்சி தனது கட்சியை அதிகாரத்தில் இருத்தியது. பின்னர் சபை கலைக்கப்பட்டு நடத்தப்பட்ட தேர்தல் ஆளும் கட்சிக்கும் சுதந்திரக்கட்சி தலைமையிலான மக்கள் முன்னணிக்கும் பலப்பரீட்சையாகவே இருந்தது. இந்த தேர்தலில் தனது பலத்தை நிருபிப்பதற்காக ஆளும் கட்சி கடுமையான பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தது. ஜனாதிபதி விஜேதுங்க பல்வேறு இடங்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பஸ்களில் ஊர்வலமாக கிராமம் கிராமமாக சென்று ஆதரவு திரட்டினர். தென் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் அரச இயந்திரம் முடுக்கி விடப்பட்டது. பல பொலிஸ் அதிகாரிகளுக்கு விசேட பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன அரச வாகனங்கள் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்பட்டன. சகல அமைச்சுகளும் தெற்கில் நிலை கொண்டு அபிவிருத்தித் திட்டங்களையும் வாக்குறுதிகளையும் அள்ளி வீசிய வண்ணம் இருந்தன. அரச தொடர்பு சாதனங்களும் ஐ.தே.கட்சியின் பிரசார சாதனங்களாக மாறியிருந்தன. தெற்கில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அவை பிரசாரம் செய்திருந்தன.

கட்சி தாவியவர்களும் தங்கள் திறமையை நிருபிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது போல, காமினி, ஹெனி, அனுரா போன்றவர்களும் முழுமுச்சுடன் செயற்பட்டனர்.

மறுபுறத்தில் சுதந்திரக் கட்சியும் சந்திரிகா தலைமையில் பிரசாரத்தில் இறங்கியது. கிழக்கில் சுதந்திரக் கட்சி பலத்த அடி வாங்கிய போதிலும் கடுமையான பிரசாரத்தில் ஈடுபட்டது.

## படுதோல்விடைந்த ஐ.தே.க

அரசின் பலத்த முயற்சிகளுக்கு மத்தியிலும் ஐ.தே.க தோல்வியைத் தழுவி 23 ஆசனங்களையே கைப்பற்ற

ம.ப.பார்க்க..

## தென் மாகாணத்தில்...

முடிந்தது. பழைய தொகுதி வாரித் தேர்தல் முறை நடந்திருந்தால் ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே ஐ.தே.க வென்றிருக்க முடியும். பலப்பிட்டியத் தொகுதியில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் இளைப்பாறிய தளபதி ரஞ்சன் சில்வாவே போட்டியிட்டிருந்தார். இத்தொகுதியில் கூட ஐ.தே.க 300 வாக்குகளால் மட்டுமே வெல்ல முடிந்தது. முன்பு போட்டியிட்டிருந்த வீரசிங்க டி சில்வா தேர்தலில் குதித்திருந்தால் இத்தொகுதியையும் சுதந்திரக் கட்சி இலகுவாகக் கைப்பற்றியிருக்க முடியும். பலப்பிட்டியத் தொகுதியில் பிரேமதாசாவின் உறவினர்களின் வாக்குகள் ஏழாயிரம் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சிக்கு எட்டு ஆசனங்கள், மாத்தறையில் பத்து ஆசனங்கள், காலியில் 12 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. ஐ.தே.கட்சிக்கு அம்பாந்தோட்டையில் ஆறு, மாத்தறையில் ஏழு, காலியில் பத்து ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. வென்ற கட்சிக்கு மேலதிகமாக இரண்டு ஆசனங்கள் கிடைத்ததில் சுதந்திரக் கட்சி மொத்தம் 32 ஆசனங்கள் பெற்றிருக்கிறது.

காலி மாவட்டத்தில் மொத்த வாக்குகளில் மக்கள் முன்னணி 238770 (53.34 வீதம்) வாக்குகள், ஐ.தே.கட்சிக்கு 200004 (44.69 வீதம்) வாசுதேவவின் நவசமசமாஜக் கட்சிக்கு 7150 (1.6 வீதம்) மண்ணின் மைந்தர்களுக்கு1725 (.39 வீதம்) வாக்குகள் கிடைத்துள்ளன.

மாத்தறையில் மக்கள் முன்னணிக்கு 192853 (56.43 வீதம்), ஐ.தே.கவுக்கு 147301 (43.1 வீதம்) நவசமசமாஜக் கட்சி 1586 (.41 வீதம்) வாக்குகள் பெற்றிருக்கின்றன.

அம்பாந்தோட்டையில் மக்கள் முன்னணி 118889 (53.85 வீதம்), ஐ.தே.க 96118 (43.62 வீதம்), நவசமசமாஜக் கட்சி 2703 (1.23 வீதம்) சுயேச்சை 2650 (1.20 வீதம்) வாக்குகள் பெற்றிருக்கின்றன.

எழுபத்தைந்து வீதத்திற்கும் அதிகமான மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

ஐ.தே.கட்சியின் முதல்வராக இருந்த அமரசிறி பட்டியல் மூலமாக தெரிவு செய்யப்பட்ட போதும் தனது தொகுதியில் தோல்வியுற்றுள்ளார். சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முதல்வர் அமரசிறி தொடங்கொட விருப்பு வாக்குகள் இரண்டு லட்சத்துக்கு மேல் பெற்றிருக்கிறார்.

## தெற்கில் நிராகரிக்கப்பட்ட இனவாத அமைப்பு

இனவாத அமைப்புகளால் ஆதரிக்கப்பட்டதும் ராஜீவ் காந்தியைத் தாக்கியவர் போட்டியிட்டதுமான இனவாத கட்சியான சிங்கள மண்ணின் மைந்தர்கள் அமைப்பு 1725 வாக்குகள் மட்டுமே பெற்று மக்களால் நிராகரிக்கப்பட்டது. இந்தக் கட்சி காலியில் மட்டுமே போட்டியிட்டது. இனவாதம் அதிகமானதாக கருதப்படுகின்ற தென்பகுதியிலேயே இனவாத அமைப்புகளான சிங்கள ஜாதிக சிந்தனய, அரக்ச சந்தவிதானய போன்ற அமைப்புகளின் ஆதரவுடன் போட்டியிட்டும் இந்தக் கட்சி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## குறைந்தளவு வன்முறை

காலியில் எண்பது வீத வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கள்ள வாக்குகள் போட முயன்றவர்களை பொதுமக்களே விரட்டியிருக்கிறார்கள். பலரை மக்கள் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்று சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

ஊக்மனவில் உல்லாசப் பயணத்துறை ராஜாங்க அமைச்சர் காமினி லொக்குகே சாவடிக்கு வெளியே வாக்காளர்களால் தாக்கப்பட்டார். ஆயினும் பொலிசார் தலையிட்டதால் யாரும் காயமடையவில்லை. இவர் சட்டவிரோதமாக சாவடிக்குள் நுழைய முயன்ற போதே இந்த சம்பவம் நடைபெற்றது. தேர்தல் அதிகாரிகளும் கட்சிப் பிரதிநிதிகளுமே சாவடிக்குள் நுழைய அனுமதி உண்டு.

அம்பலாந்தோட்டையில் வாக்காளர் ஒருவர் கத்திக்குத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எதிர்க்கட்சியினர் தங்களை மிரட்டியதாக ஐ.தே.க ஆதரவாளர்கள் கொடுத்த பொய்க் குற்றச்சாட்டில் மூன்று உறுப்பினர்கள் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

எண்ணாயிரம் பொலிசார் தேர்தல் கடமைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். 25 பேர் பயமுறுத்தல் குற்றச்சாட்டுக்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.

தேர்தலுக்கு முன்பாக கருத்து கூறிய சந்திரிகா குமாரணதுங்க, பதினேழு வருட ஐதேக ஆட்சியின் ஊழல், அதிகார துஷ்பிரயோகம், மிரட்டலால் அதிருப்தியடைந்த மக்கள் தங்களை வெல்லச் செய்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்திருந்தார். அனுரா பண்டாரநாயக்க இவரை நேரடியாக விமர்சனம் செய்த போதும் இவர் அனுராவை எந்தக் கட்டத்திலும் நேரடியாக விமர்சிக்கவில்லை. ஒரே நாளில் சுமார் முப்பது கிராமங்கள் வரை சென்று கூட்டங்களில் இவர் கலந்து கொண்டார்.

தேர்தலில் பாரிய அளவில் மோசடிகளோ குற்றச் செயல்களோ நடைபெறவில்லை. இந்த மோசடிகளை எதிர்கொள்வதற்கு மக்கள் முன்னணி தயார் நிலையிலேயே இருந்தது. பாதுகாப்பு படைகளில் முக்கிய பதவிகளில் இருந்து இளைப்பாறிய தளபதிகளே சுதந்திரக் கட்சியின் பாதுகாப்பு அலுவல்களைக் கவனித்திருந்தனர் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. தென்மாகாணத் தேர்தலின் போது ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு காலில் துப்பாக்கியால் சுடப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் வேட்பாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திசநாயக்க ஜயரத்தின என்ற பாராளுமன்ற உறுப்பினரும் ரெஜிசன் எதிரிசூரிய என்ற வேட்பாளருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். அம்பாந்தோட்டைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்சி அலுவலகம் ஒன்று தாக்கப்பட்டதை அடுத்து ஆதரவாளர்களுக்கு இடையில் நடைபெற்ற மோதலில் துப்பாக்கிச் சூடும் இடம் பெற்றது. காயமடைந்த உறுப்பினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் திங்கட்கிழமை இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். இரண்டு இரவுகள் இவர்கள் சிறையில் கழிக்க வேண்டி ஏற்பட்டது.

மே 3ம் திகதி இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டது.

தங்காலையில் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஹரி அபேதீரவும் அவரது பாதுகாவலர்களும் பொலிசாருடன் துப்பாக்கிச் சூட்டு மோதலில் ஈடுபட்டனர். யாரும் காயமடையவில்லை.

பாதுகாப்பு கருதி தேர்தல் முடிந்ததும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது.

# புலிகளுக்கான தடையை நீடிக்க கோரிக்கை

தமிழ் நாட்டில் புலிகளுக்கு எதிரான தடையை நீடிக்க ஜெயலலிதா அரசு முயற்சிக்கிறது. மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்க விரும்புவதாக தமிழக அரசு கூறியுள்ளது. 'வருகின்ற மே மாதத்துடன் புலிகளுக்கு எதிரான தடை நீங்குவதாகவும் அதை மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்க தாம் விரும்புவதாகவும் தொடர்ந்த தமது வேண்டுகோள்களுக்கு மத்திய அரசு பதிலளிக்கவில்லை' என்றும் ஜெயலலிதா சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

புலிகளை நிறுத்துவதில் தனக்கு ஆர்வமில்லை என்று மற்றக் கட்சிகள் குற்றம் சாட்டுவதையும் ஜெயலலிதா மறுத்திருக்கிறார்.

அத்துடன் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வருவோர் மீது கடுமையான விசா கெடுபிடிகள் அமுலாக்கப்பட வேண்டும் என்றும் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

# பணிப்பெண்ணை துன்புறுத்தியவர் குற்றவாளி

இலங்கைப் பெண்ணை கொத்தடிமையாக நடத்திய குவைத் நபரும் அவரது மனைவியும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் பொஸ்டனில் வைத்து வசந்தா கெதர என்ற 27 வயதுப் பணிப்பெண்ணை கொத்தடிமை போன்று நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட குவைத்தியருக்கு பத்து வருடச் சிறையும் ஐந்து லட்சம் டொலர் அபராதமும் விதிக்கப்படலாம். இவருக்கான தண்டனை மே 31ம் திகதி வழங்கப்படும்.

# சந்திரசேகரன் பிணையில் விடுதலை

மலையக மக்கள் முன்னணியின் தலைவரான பெரியசாமி சந்திரசேகரன் கடந்த வெள்ளியன்று பாணந்துறை நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். பதினையாயிரம் ரூபா காசுப் பிணையிலும் ஐந்து லட்சம் ரூபா நம்பிக்கைப் பிணையிலும் இவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

கூட்டுப்படைத் தலைமையகத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட வரதனை ஒளித்து வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். கடந்த வெள்ளியன்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவரது சட்டத்தரணி 'சந்திரசேகரனை விடுவிப்பது நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்காது' என்று தெரிவித்திருந்தார். இதற்கு அரச தரப்புச் சட்டத்தரணி ஆட்சேபம் தெரிவிக்காததால் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# மட்டுநகரில் உறுப்பினர்களை விலைக்கு வாங்க முயற்சி

மட்டக்களப்பில் மாநகர சபைத் தேர்தலில் தோல்வி அடைந்த ஐ.தே.கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சுயேச்சைக் குழுக்களை பண ஆசை காட்டி வலைக்குள் இழுக்க முயல்வதாக செய்திகள் கூறுகின்றன. ஈரோஸ் ஆதரவுடன் போட்டியிட்ட சுயேச்சைக் குழுவினர் பணமும் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளதாக சரிநிகர் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

ரெலோ. புளொட் இயக்கங்களின் ஆதரவுடன் போட்டியிட்ட சுயேச்சைக்குழுவிலிருந்தும் சிலரை இழுக்க ஐ.தே.க முயல்வதாகவும் கூறப்படுகிறது.

ஈரோஸ் சார்பில் போட்டியிட்டவர்களின் மூன்று ஆசனங்களும் மோகன் என்பவரின் குழுவிற்கு கிடைத்த ஒரு ஆசனமும் ஐ.தே.கவிற்கு கிடைத்த ஐந்து ஆசனங்களுமாக மொத்தம் ஒன்பது ஆசனங்கள் ஐ.தே.க வசம் கிடைத்துள்ளன.

செழியன் பேரின்பநாயகம் தலைமையில் வெற்றி பெற்ற ரெலோ புளொட் ஆதரவுக்குழுவினர் கொழும்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. இவர்களையும் விலைக்கு வாங்க ஐ.தே.க முயல்வதாலேயே இந்த பாதுகாப்பு முயற்சி என்று தெரிவிக்கப்படுகிறது.

# புத்தளப் பகுதியில் புலிகளால் சிங்கள மீனவர்கள் கொலை

புத்தளம் பகுதியில் குதிரைமலை முனைப் பகுதியில் சிங்கள மீனவர்கள் 22 பேரைப் புலிகள் கொன்றுள்ளனர். சில மீனவர்களின் உடல்கள் வெட்டித் துண்டாடப்பட்டுள்ளன. தப்பியவர்களின் தகவல்படி புலிகள் மீனவர்களின் கைகளைக் கட்டி அவர்களை வாளாலும் கத்திகளாலும் வெட்டிய பின்னர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைச் சுற்றி வளைத்த புலிகள் இப்படுகொலையை நடத்தினர்.

இந்த படுகொலைகளினால் அப்பகுதியிலிருந்து சுமார் இரண்டாயிரம் பேர் பயம் காரணமாக கொழும்புக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். சுமார் நூறு தமிழ் குடும்பங்கள் ஆலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் சிங்களவர்களுக்கு சொந்தமான வீடுகளில் வாடகைக்கு இருந்தவர்கள் ஆவர். இந்த அகதிகளுக்கு பொது நிறுவனங்கள் அத்தியாவசிய சேவைகளை வழங்குகின்றன.

அப்பகுதியில் உள்ள தமிழ் வைத்தியர் வீட்டுக்கு கல்வீச்சு நடந்ததில் ஒருவர் காயமடைந்ததாகவும் பொலிசார் வந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அகதிகள் தங்கியுள்ள நீர்கொழும்பு முத்துமாரியம்மன் கோவில் மீதும் கல் வீசப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. தற்போது பொலிசாரும் விமானப்படையினரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# மன்னாரில் மோதல்

மன்னாரில் பாலமுனைப் பகுதியிலும் புலிகள் மறைந்திருந்து தாக்கியதாகவும் இராணுவத்தினர் திருப்பித் தாக்கியதில் ஒருவரின் சடலம் கிடைத்ததாகவும் இராணுவம் கூறியது.

## மட்டக்களப்பில் மோதல்

மட்டக்களப்புப் பகுதியில் புலிகளுடனான மோதலில் குறைந்த 25 புலிகளையாவது கொன்று விட்டோம் என்று இராணுவம் கூறியுள்ளது. பத்திரவெளிப் பகுதியில் சுமார் இருபது புலிகளின் உடல்களையும் பத்து ஆயுதங்களையும் கடந்த புதன்கிழமை கைப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பில் இன்னொரு பகுதியில் நடந்த மோதலில் இரண்டு புலிகளைக் கொன்று ரேடியோ, குறுங்குண்டு, சயனைட் போன்றவற்றைக் கைப்பற்றியதாகவும் கூறப்பட்டது.

## பாகிஸ்தானுக்கு விமான விற்பனை இந்தியா ஆட்சேபம்

பாகிஸ்தானுக்கு எப் 16 ரக விமானங்களை அமெரிக்கா விற்பனை செய்ய முயற்சிப்பதற்கு இந்தியா ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இந்திய வெளிநாட்டுச் செயலாளர் சிறிநிவாசன் இது குறித்து இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க பாதுகாப்பு உதவி அமைச்சர் றொபின் ரபேலுக்கு தெரிவித்த போது '36 விமானங்களை விற்க முயற்சிப்பது தென்னாசியாவின் பாதுகாப்பை ஆபத்துக்குள்ளாக்கும்' என்று கூறியுள்ளார்.

ஆனால் பாகிஸ்தான் தனது அணு ஆயுத முயற்சியைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே அந்த விமானங்கள் விற்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க உதவி அமைச்சரான ரபேல் காஷ்மீர் இந்தியாவின் நிரந்தரமான பகுதி என தாம் நினைக்கவில்லை என்று கூறியதை அடுத்து எழுந்த சர்ச்சையைத் தணிக்கவே இந்தியாவிற்கு சென்றிருக்கிறார்.

## பிரபாகரனும் மாத்தயாவும் புலிகளுக்குள் மோதலா?

(நன்றி: இந்தியா டுடே)

தமிழ் ஈழம் பற்றிக் கனவு காணுமிடம் எல்லாம் அவரது வார்த்தை சட்டமாகிறது. அவரது பாதையைப் பின்பற்றுவோர் அவரைச் சக்கரவர்த்தி என்கின்றனர். அவரது ஆணையின் கீழ் கடந்த வருடம் 113 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் இன்று வரை இரும்பு போன்ற கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த தனது இயக்கத்தினுள் சக்தி வாய்ந்த வெறுப்பு விதைகள் வளர்ந்து விட்டதை பிரபாகரன் காண்கிறார். இந்திய உளவு நிறுவனங்களின் கருத்துப்படி, தனது முத்திரையான ஈவிரக்கமற்ற நடவடிக்கைகள் மூலமும் அவரால் அதை அகற்ற முடியவில்லை.

ஒரு வருட காலத்திற்குள் அவர் மூன்று நெருக்கமான தளபதிகளை இழந்து விட்டார். கிட்டு கடந்த தை 16ம் திகதி கொல்லப்பட்டார். ஆத்திரமடைந்த பிரபாகரன் இந்தியாவிற்கு தகவல் கொடுத்ததாக மாத்தயாவையும் வேறு சிலரையும் குற்றம் சாட்டினார். அவர்களை கைது செய்வித்து விசாரணை செய்து மாத்தயாவை அழிக்க தயாரான போது, திடீரென்று பின்வாங்கி விட்டார். அவரது ஆதரவாளர்கள் இதை தந்திரோபாய நடவடிக்கை என்கிறார்கள். ஆனால் மற்றவர்களோ மாத்தயாவின் சக்தியை அறிந்ததால் ஏற்பட்டது என்கிறார்கள்.

சில வழிகளில், புலிகளின் தலைவர் ஆரம்பத்திலிருந்தே மாத்தயாவை சுலபமாக உடைக்கக் கூடியவர் அல்ல என்பதைக் கண்டார். வன்னி மாவட்டத்திலிருந்து இந்தியப் படைகளுடன் மோதியது மாத்தயாவே. புலிகளின் அரசியல் கட்சியை தலைமைப்பதவி ஏற்று நடத்தியதும் அவரே. அவருடன் மோதல் ஏற்பட்ட பின்பே கிட்டு ஐரோப்பாவிற்கு சென்றார். புலிகளின் இயக்கத்தினுள் பிரபாகரனுடன் முரண்படக் கூடிய ஒருவர் மாத்தயாவே.

இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையின் போது மாத்தயா தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்றார். பிரபாகரனோ இராணுவ பலமே ஈழத்தை வென்று கொடுக்கும் என்று நம்பினார். இந்த வேறுபாடுகள் ஆனையிறவுப் போரில் பலமடைந்தன. வெற்றியை தோல்வியாக மாற்றியது மாத்தயாவே என்று பிரபாகரன் குற்றம் சாட்டினார். மே 92 இல் தனது பிரதித் தலைவரின் சகல பதவிகளையும் அகற்றிய பின்னர் புலிகளுக்கு இடையில் எல்லாமே தவறாகப் போயின.

நவம்பர் 92இல் யாழ் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பிரபாகரனின் மறைவிடம் குண்டுவீசித் தாக்கப்பட்டது. தற்போதைய நெருக்கமானவரான பொட்டம்மான் தாக்கப்பட்டு அவரது பாதுகாவலர் கொல்லப்பட்டார். கிட்டு தை மாதம் கொல்லப்பட்டார். இவற்றின் பின்னால் மாத்தயாவின் கரம் இருப்பதை பிரபாகரன் கண்டார்.

மாத்தயாவின் பழைய நண்பரான மாணிக்கவாசகர் பொட்டம்மானால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவரது 'ஒப்புதல் வாக்குமூலத்தின் பின்' மாத்தயாவும் 120 ஆதரவாளர்களும் 93 ஆகஸ்ட் 2ம் திகதி கைது செய்யப்பட்டனர். புலிகளின் நீதிமன்றம் தங்களது பிரதான உறுப்பினர் ஒருவரை விசாரித்தது. கடந்த டிசம்பர் 19ம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின்படி மாத்தயா கிட்டுவின் மரணத்துக்கு மாத்திரமல்ல, பிரபாகரனையும் கொல்ல முயன்றதாகவும் றோவின் கையாளாக இருந்தார் என்றும் கூறப்பட்டது. மாத்தயாவிற்கு கிட்டுவின் மரணத்தன்று மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

ஒரு தடவை, சக்கரவர்த்தியின் கட்டளைக்கு புலிகள் சம்மதிக்க மறுத்தனர். மாத்தயாவின் ஆதரவாளர்கள் தங்கள் முகாமை சாவகச்சேரியில் தை 6ம் திகதி தாக்கினர். தை 16ம் திகதி ஆட்சேப ஊர்வலங்கள் நடைபெற்றன.

மக்கள் அதிருப்தி அடைந்திருக்கலாம். ஆனால் பிரபாகரன் மக்களின் கருத்துப் பற்றி கவலைப்படுவதில்லை என்கிறார் இலங்கையின் உளவு அதிகாரி. இந்த அதிகாரி பிரபாகரன் இன்னமும் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதாகவே நம்புகிறார்.

மாத்தயா மோசமாக சித்திரவதை செய்யப்பட்டதால் அவர் நடைப்பிணமாகி விட்டதாகவும் பிரபாகரனை எதிர்க்க அவரால் இனியும் முடியாது என்றும் இலங்கையில் உள்ள புலி உறுப்பினர் ஒருவர் கூறினார். மாத்தயாவை உயிரோடு வைத்திருப்பது மூலம் தான் நியாயமாக நடந்து கொள்வதாக பிரபாகரன் காட்டுவதாக அந்த உறுப்பினர் கூறுகிறார். ஆனால் மாத்தயாவின் ஆதரவாளர்களோ உள்மோதலை கவனிக்க பிரபாகரன் செய்த நடவடிக்கை என்கிறார்கள்.

# கிளிநொச்சியில் குண்டுவெடிப்பில் பலி

கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற குண்டுவிபத்தொன்றில் புலிகளின் முக்கியஸ்தர்களான ரவி, அலன் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கொழும்பு செய்திகள் கூறுகின்றன. இதில் ரவி வன்னிப் பிராந்தியத்துக்கு பொறுப்பானவர் என்றும் அலன் வவுனியா பகுதிக்கு பொறுப்பானவர் என்றும் கூறப்படுகிறது.

# காமினி பொன்சேகா மீது ஒழுங்கு நடவடிக்கை

உபசபாநாயகர் காமினி பொன்சேகா மீதான விசாரணைகள் மீண்டும் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பகிரங்கமாக அவர் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்திற்கு சிக்கல்களைக் கொடுத்திருந்தன. தெற்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களில் இவர் கலந்து கொள்ளவில்லை. ஐ.தே.கட்சியினரின் ஊழல்கள் குறித்து விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்று காமினி பொன்சேகா வலியுறுத்தி வருகிறார். ஆனால் அரசாங்கமோ லஞ்ச ஆணையாளர்களை நீக்கி வருகிறது.

இதனால் இவரை நீக்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தென்பகுதி காமினியின் சொந்தப் பிரதேசமாக இருந்தும் இவர் பிரசாரத்தில் கலந்து கொள்ளாதது பெரும் அதிருப்தியைக் கொடுத்துள்ளது. தேர்தல் முடிந்ததும் இவர் மீதான கட்சியின் தலைமைப்பீட விசாரணைகள் தொடரலாம்.

# ஜனாதிபதி தேர்தலில் தொண்டமான்

தொண்டமானை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும்படி தமிழ்கட்சிகள் கேட்டுள்ளதாக ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.தே.கட்சியுடனான தொண்டாவின் உறவுகள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. காமினியின் கட்சி மாற்றத்தினாலும் ஜனாதிபதியின் நிலைப்பாட்டினாலும்

*31ம் பக்கம் பார்க்க..*

# சர்வசன வாக்கெடுப்பு முயற்சிக்கு கூட்டணி கண்டனம்

வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி ஜனாதிபதி நடத்தவுள்ளதாக கூறிய சர்வசன வாக்கெடுப்பு யோசனையை கூட்டணி கடுமையாக கண்டித்துள்ளது. இந்த முயற்சி பொறுப்பற்றதும் தவறான நேரத்தில் நடத்தப்படுவதும் நியாயமற்றதும் ஆகும் என்று கூட்டணி கூறியுள்ளது.

இடைக்கால ஜனாதிபதி மக்களிடமிருந்து கட்டளையைப் பெறாமல் இவ்வாறான விடயத்தில் இறங்கக் கூடாது என்றும் இலங்கை இந்திய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ராஜீவ் காந்தி இந்த இணைப்பு பற்றி ஷரத்து சிங்கள தீவிரவாதிகளின் பயத்தை அகற்றவே என்றும், சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட மாட்டாது என்றும் உறுதியளித்ததாகவும் கூட்டணி தெரிவித்துள்ளது.

சமீபத்திய தேர்தல்களில் பொலிசார் வாக்காளர்களை மிரட்டிய சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அரசாங்கம் மாகாணங்களை பிரிப்பதற்கான தீர்ப்பை எதிர்பார்த்தால் இராணுவமும் பொலிஸும் என்ன செய்யும் என்பது விளங்கக் கூடியது. கிழக்கிலிருக்கும் தமிழ், முஸ்லிம்களின் உயிர்களுடன் விளையாட வேண்டாம் என்று ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கிறோம். தமிழர் பிரச்சனையைத் தீர்க்காமல் சர்வசன வாக்கெடுப்பு வைப்பது மேலும் பிரச்சனையை சிக்கலாக்கும்.

ஆயிரக்கணக்கான தமிழர்களும் முஸ்லிம்களும் அங்கிருந்து வெளியேறியிருக்கிறார்கள். தற்போதைய சூழ்நிலையில் அவர்கள் திரும்பவும் முடியாது. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட இவர்களின் பெயர்கள் வாக்காளர் அட்டவணையில் இல்லை. இத்தனை ஆயிரம் வாக்காளர்கள் இல்லாத நிலையில் தேர்தல் வைப்பது ஒரு கேலிக்கூத்து.

தற்போது ஆயிரக்கணக்கில் சிங்களவர்கள் இந்தப் பிரதேசங்களில் குடியிருத்தப்பட்டு காணிகள், வீடுகள் வழங்கப்பட்டதுடன் வாக்காளர் அட்டவணையிலும் பதியப்பட்டுள்ளார்கள். இது கிழக்கில் சிங்கள சனத்தொகையை அதிகரித்துள்ளது. கிழக்கில் இராணுவமும் பொலிசாரும் நிறைந்த நிலையில் தமிழ் மக்களால் சுதந்திரமாக வாக்களிக்க முடியாது.

இவ்வாறு கூட்டணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# காமினியின் கட்சிக்குள் மோதல்

காமினியின் ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணிக்குள் பெரும் பிளவு ஏற்பட்டுள்து. புதிதாக ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்த காமினி தென் மாகாணத்தில் பிரசாரத்தில் ஈடுபட்ட போதும் டி.யு.என்.எஃப் முழுமையாக ஆதரவு தெரிவிக்கவில்லை. ஆனால் தற்போது கட்சியின் முக்கிய தலைவராக இருக்கும் பிரேமச்சந்திர தனது கட்சி எந்தக் கட்சியையும் தேர்தலில் ஆதரிக்காது என்று கூறியது ஐ.தே. கட்சியின் அதிருப்தியைக் கிளப்பியுள்ளது. கட்சி ஆதரவாளர்கள் தாங்களே முடிவு செய்து வாக்களிக்கும்படி பிரேமச்சந்திர கேட்டிருந்தார்.

கட்சியின் உப தலைவர் கலுகல்ல பொதுஜன முன்னணிக்கு ஆதரவளிக்குமாறு கட்சிக்காரர்களை கேட்டுள்ளார். இதற்குள் கட்சி தலைவர் ஏ.சி.குணரத்தினவும் லலித்தின் மனைவி சிறிமாலியும் தெற்கில் பொதுஜன முன்னணிக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இதுவும் காமினிக்கு சிக்கலைக் கொடுத்துள்ளது.

# முக்கிய புலிக்கு மரணதண்டனை

பொட்டம்மானுக்கு நெருக்கமான உளவுப் பிரிவு முக்கியஸ்தர் ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது. இவர் இயக்கத்தை விட்டு வெளியேறும் நோக்கில் விலகிக் கொண்டதாகவும் வன்னியில் மறைந்து வாழ்ந்ததாகவும் இவர் தப்பியோடா வண்ணம் சுமார் நூறு புலிகள் இவரைத் தேடியதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. படையினரின் பங்கர்களுக்கு நெருக்கமான பகுதிக்குள் சென்ற இவரை புலிகள் கொன்றதாகவும் பின்னர் பகிரங்க இடமொன்றில் மரத்தில் கட்டித் தூக்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. தற்போது அவர் புலிகளின் பணத்தில் ஐந்து லட்சத்தை சுருட்டிக் கொண்டு சென்றதாக கதை பரப்பப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி பரமநாதர் தேவகி அம்மா

### (இளைப்பாறிய ஆசிரியை- காரைநகர்)



காரைநகர் வேம்படியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி பரமநாதர் தேவகி அம்மா 23.3.94 புதன்கிழமை அன்று ஸ்காபரோவில் சிவபதமடைந்து விட்டார்.

இவர் இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பரமநாதர் அவர்களின் அன்பு மனைவியும் ரவிமோகன், மாலினி சிறிதரன், ரவிராஜன், ரவிரஞ்சன், சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் த.சிறிதரன் அவர்களின் மாமியும் காலம் சென்ற பாலேந்திரா, இராசேந்திரா, யோகேந்திரா (கொழும்பு), குலேந்திரா (லண்டன்) ஆகியோரின் சகோதரியுமாவர்.

அன்னாரின் பூதவுடல் 4164, Sheppard ave E இல் அமைந்துள்ள Ogden Funeral Home ல் வரும் 27.3.94 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணி முதல் 8 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு 28.3.94 திங்கள் காலை 8 மணி முதல் ஈமக்கிரியைகள் நடைபெற்று 11 மணிக்கு 33, Memory Garden Lane, Don Mills மயானத்தில் தகனம் செய்யப்படும்.

நண்பர்கள், உறவினர்கள் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
பரமநாதர்
261 6585



# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St.Dennis Dr**
(Don Mills/Eglinton)
**(416) 421 3429**

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

தமிழ், ஹிந்தி வீடியோப்
படங்களின் ஒரிஜினல் பிரதிகளை
வாடகைக்கும் விற்பனைக்கும்
பெறலாம்

CD, Audio

மலிவு விலையில்

இந்த
வருடத்திற்கான
வருமானவரிப்
பத்திரங்களை
பூர்த்தி செய்ய
தொடர்பு
கொள்ளுங்கள்.
குறைந்த
செலவில்
விரைவான
சேவை

# A.R.K MARKET

மாத்தயா உயிரோடு இருப்பதாக இப்போது செய்திகள் வருகின்றனவே-
கந்தையா சிவநேசன் ரொரன்ரோ
இந்த மாத்தயா தேசத்துரோக விவகாரம் எமக்குப் பல விளக்கங்களைத் தந்திருக்கிறது. புலிகளுக்குள் புலிகளே புலிகளுக்கு துரோகியாகக்கூடும் என்பது அவற்றில் ஒன்று. புலிகளே துரோகியானாலும் கூட புலிகளால் புலிகளுக்கு மன்னிப்புக் கிடைக்கும் என்பது இன்னொன்று. எல்லாம் பிறந்த மண் செய்யும் வேலையய்யா....!

கிட்டு உயிரோடு திரும்பி வந்தால் என்ன நடக்கும்..?
க. சிவநேசன் ரொன்ரோ
இவ்வளவு காலத்துக்குப் பிறகா? இயக்க நன்மை கருதி ஆளை ரகசியமாக 'டம்ப்' பண்ணி விடுவார்கள்..

ஈழத்திலிருந்தபோது புலிகளை ஆதரித்தவர்கள் இங்கு வந்ததும் புலிகளை எதிர்க்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?
தே.ஜீவன். ஸ்காபரோ
சிலருக்கு அறிவு விசாலப்படுவதாலும் சிலரது அறிவு வித்தியாசப்படுவதாலும்.

தமிழர்கள் வாழும் நாடுகளில் கனடாவில்தான் அதிக வியாபார முயற்சிகள் தென்படுகின்றன. இது ஆரோக்கியமானதல்லவா...?
தே.ஜீவன் ஸ்காபரோ
அதிக வியாபார முயற்சிகள் என்பது சரி. ஆனால் எத்தனை வியாபார முயற்சிகள் என்று எண்ணிப்பாரும் ஒரே தொழிலையே பலர் செய்வது! இந்த சிறு சமுகத்திற்கு ஒத்து வருமா? இது ஆரோக்கியமானதல்ல!

தாயகம் 4.3.94 இதழ் மேலாடையின்றி வந்திருந்ததற்கான காரணத்தை சொல்வாயா முனிவா?
சா.தங்கராஜா ரொரன்ரோ?
கவர்(சி) இன்றிப் போன தாயகத்தை நீங்கள் பார்க்க வேண்டும் என்ற நன்நோக்கில்தான் என்று சொல்லிச் சமாளிக்கலாம். (கவர்ச்சி என்றதும் ஞாபகத்திற்கு வருவபவற்றுள் 'சன்' பத்திரிகையில் வரும் அழகிகளின் படங்களும் ஒன்று. இப்போது 'சூரிய அழகிகள்' தமிழிலும் வருகிறார்களே.. ஈழத்தமிழ் பண்பாட்டிற்கமைய குறுக்குக் கட்டோடும் பார்க்கலாமோ என ஒருவர்



# வருது வருது! விலகு விலகு! முனி வெளியே வருது!

அங்கலாய்த்ததையும் காதில் கேட்கும் பாக்கியம் கிட்டியது.. வதனமே சூர்ய பிம்பமோ...)

எழுத்தாளர்கள் எழுதுவதற்குக் காரணம் சுபமங்களாவில் தமது பெயர் வரவேண்டும் என்பதற்காகவா! முனிவரே?
திருச்செல்வம் ஜெயந்தன் ரொரன்ரோ
ரஷ்யாவின் மாக்ஸிம் கோர்கி ஒரிடத்தில் "அழுத்திக் சொல்லுகின்ற சாரமற்ற வாழ்க்கை என்னை நிர்ப்பந்திப்பதுதான் நான் எழுதத் தொடங்குவதற்கு முதல் காரணம். என்னுள் காட்சிக் கருத்து வடிவங்கள் நிறைந்து பொங்குவதால் என்னால் எழுதாமல் இருக்க முடிவதில்லை..." என்றார். இதுபோன்ற மனநிலையில் எழுதிக்கொண்டு இருப்பவர்கள்தான் இங்கும் அதிகம். ஆனால் சுபமங்களாவில் சிலரது பெயரை எழுதவில்லை என துள்ளிக் குதிப்பவர்கள் பலர் ஜெயந்தீசனின் அகராதிப்படி வரும் சுத்துமாத்து.

தூய காதல் என்பது எது முனிவரே!
வந்தனு, ஸ்காபரோ
பருவமடைந்தவர்களுக்கிடையே எதுவித எதிர்பார்ப்புமின்றி செலுத்தப்படும் அன்புதான் தூயகாதல்.

நீர் கடவுளை நம்புகிறீரா முனிவரா?
வந்தனு ஸ்காபரோ
வெற்றி பெறும் போது கடவுளை மறந்து விடுகிறேன் தோல்வியடையும் போது கடவுளை நம்புகிறேன்.

யாரைக் காதலிக்கலாம், முனிவரே?
வந்தனு ஸ்காபரோ
நீர் காதலிப்பவரை விட உம்மைக் காதலிப்பவரையே காதலியும். இல்லையேல் குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்டு வந்தவர்கள் கதை போலாகிவிடும்.

கனடாவில் குடும்பங்களுக்கிடையே கணவன் மனைவி பிணக்குகளும் கசப்புகளும் விவாகரத்து வரை போவது அதிகரித்து வருவதற்கு காரணம் என்ன முனிவா?
கா. குமரேசன் ரொரன்ரோ
வேலையெடுப்பதும் வெல்ஃபயர் எடுப்பதும் விவாகரத்து எடுப்பதும்

இலங்கையை விட் இங்கு சுலபம் என்பதால் பெண்கள் பிரிவுக்குத் துணிகிறார்கள். கனடாவிலிருப்பதால் வேறு பெண்ணை மணப்பது சுலபமென நினைத்து ஆண்கள் பிரிவுக்குத் துணிகிறார்கள். கசப்புகளுக்கு காரணத்தை கண்டுபிடிக்கத்தான் இருவருக்கும் துணிவில்லை.

✪ ஈழநாடு பத்திரிகையில் எந்த ஈழநாட்டை விரும்பிப் படிப்பீர்?
சுந்தரலிங்கம் நரேஸ் மொன்றியால்
மெல்லிய ஈழநாட்டையா மொத்த ஈழநாட்டையா விரும்பிப் படிப்பேன் எனக் கேட்கிறீரோ? பதில் சொல்ல மாட்டேன்.

✪ முனிவரே இங்கு வேலைதேடிப் பார்க்கிறேன் கிடைக்கவில்லை லொட்டோ வாங்கியும் விழவில்லை. காசு சம்பாதிக்க ஒரு வழி சொல்லவும்.
செல்லத்துரை கருணா. மிசிசாகா
பேசாமல் ஊருக்கு திரும்பிப் போகவும். லொட்டோ என்றதும் ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. வறுமையில் வாடிய நாவிதன் ஒருவன் அடிக்கடி சுவீப் டிக்கட் வாங்குவானாம். ஒரு நாள் அடுத்த ஊருக்குப் போய் தொழில் புரிந்து விட்டு வள்ளத்தில் ஊருக்கு வந்து கொண்டிருக்கும் போது கரையில் நின்ற மனைவி மகிழ்ச்சியில் கத்தினாளாம். "இஞ்சேருங்கோ.... நீங்க வாங்கின சுவீப்புக்கு முதல் பரிசு கிடைத்து விட்டது என்று நம்பரை சொல்லி பேப்பரை காட்டினாளாம். மகிழ்ச்சியில் நாவிதன் தனது சவரப் பெட்டியை தூக்கி ஆற்றுள் கடாசிவிட்டு "இனிமேல் இந்தத் தொழில் தேவையில்லை— " என கத்திக் கொண்டு கரைக்கு வந்தானாம். வந்ததும் மனைவி "எங்கே அந்த சவரப் பெட்டி? "என பரபரத்தாளாம். "முதல் பரிசு கிடைத்த சுவீப் டிக்கட்டை அதுக்குள்ளேதானே வைத்திருந்தேன்... " என மனைவி சொல்லவும் கணவன் மயங்கி விழவும் சரியாக இருந்ததாம். . காத்திராப் பிரகாரமாக நினையாப் பிரகாரமாக வருவதுதான் அதிர்ஸ்டம். . பார்த்துப்பார்த்து சொல்லாது! கேட்டுக் கேட்டுச் செல்லாது....)

✪ இத்தனை பத்திரிகைகள் வந்தும் அவற்றில் எழுத்துப் பிழைகள் கருத்துப்பிழைகள், இலக்கணப் பிழைகள் என பல பிழைகள் நிறைந்திருக்கின்றனவே.. இவைகளை நிராகரித்து ஏன் இன்னுமொரு பத்திரிகை வரக்கூடாது?
க.ராஜேஸ் ரொரன்ரோ
கிழிஞ்சது போ .... வெளி வருகின்ற பத்திரிகைகள் தமது பிழைகளை நிவர்த்தித்தால் போதாதா.... இன்னொன்று வேண்டுமா? பலவாசகர்கள் பிழைதிருத்தங்களை அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள் (முன்பொருமுறை நான் கறுப்பு என எழுதியதை ஒரு வாசகர் திருத்தி கருப்பு (மெல்லின ரு) எனப் போடவேண்டும், என்றும் கறுப்பு (வல்லின று) என எழுதினால் அது தவறு. கோபம் எனும் அர்த்தம் தரும் என்றெல்லாம் திருத்தியிருந்தார். 'அசை ' சிவதாசன் எழுதியதுபோல் இங்குள்ள பத்திரிகைகளும் எமது இயக்கங்கள் போலத்தான் சிலவேளைகளில் சில தவறுகளை செய்துவிடுகின்றன. அதை திருத்தும் மனப்பக்குவம் பத்திரிகைக்கு இருந்தால் போதுமே.. அதைவிட்டு புதிதாக இன்னோர் பத்திரிகை (இயக்கம்) தொடங்கினால் எல்லாம் வீங்கி வெடிக்கும் ஐயா...! (மண்டை உட்பட)


✪ கனடாவில் வாழும் இளந்தலைமுறை போகும் போக்கினைப் பார்த்தால் கவலை வரவில்லையா? எமது காலத்திலிருந்து பணிவு, பண்பு என்பனவற்றை துறந்து ஒருவிதமான கனேடியத் தமிழர்களாக மாறிவரும் இவர்களையிட்டு கவலைப்படுபவர்கள் யார்?
திருமதி கோமதி பாலசுப்பரமணியம் ஸ்காபரோ
அலுத்துக்கொள்ளாதீர்கள். எல்லாம் வயதுதான் காரணம். உங்களுக்கும்தான். . அவர்களுக்கும்தான் ஆனந்த பிரசாத் எழுதிய ஒரு கவிதையின் பகுதி..
உணர்ந்து கொள்வதிலிருந்து
ஆரம்பிக்கிறது வாழ்க்கை
தெரிந்து கொள்வதிலிருந்து
ஆரம்பமாகிறது தெளிவு
புரிந்து கொள்வதிலிருந்து
ஆரம்பிக்கிறது நட்பு
பகிர்ந்து கொள்வதிலிருந்து
ஆரம்பிக்கிறது பாசம்
இழந்து போவதிலிருந்து
ஆரம்பிக்கிறது இல்லறம்
முதிர்ந்து போவதிலிருந்து
ஆரம்பிக்கிறது கனிவு
அலுத்துக் கொள்வதிலிருந்து
ஆரம்பிக்கிறது முதுமை.

✪ யுத்த முனை சஞ்சயன் ஊரில் இருந்து தகவல் அனுப்பும் போது, நக்கீரன் நிருபர் போய் மாத்தயாவைப் பேட்டி கண்டிருக்கிறரே..
எம்.துரைசிங்கம். ரொறன்ரோ
நக்கீரனே கட்டுரை பற்றிய தனது சந்தேகத்தை வெளியிட மறுபிரசுரித்தவர் அதைப் பற்றி வாயே திறக்காமல் விட்டு விட்டார். நக்கீரனின் 'அதிரடிச் செய்திகளின்' உண்மை யாம் அறிந்ததே. எதற்கும் யாழ்ப்ப(ா)யணம் போய் வந்த விமர்சகரைக் கேட்டுப் பார்ப்போமே? இவ்வளவு தூரம் போய் வந்தவர் மாத்தயாவைக் கண்டு உண்மை நிலை காணாமலா வந்திருப்பார்?

✪ இதுவரையும் நான் அனுப்பிய வாசகர் கடிதங்கள் ஏன் தாயகத்தில் பிரசுரமாகவில்லை?
எம்.சில்வெஸ்டர். டொன் மில்ஸ்
தாயகத்தை விமர்சிக்கும் கடிதங்கள் தயக்கமின்றி பிரசுரிக்கப்படும். புகழ்ந்து எழுதப்படும் கடிதங்கள் தன்னடக்கம் கருதி தவிர்க்கப்படும். 'மொட்டையாக' வரும் அனாமதேயக் கடிதங்கள் சேமித்து வைக்கப்படும். அது சரி, மாதக் கணக்கில் வாசகர் கடிதம் அனுப்புமாறு பத்திரிகை ஒன்று கேட்டுக் கொண்டிருக்கிறது. யாரும் கேள்வியோ, கடிதமோ அனுப்பாமல் இருப்பதால் அதற்கு அனுப்பி கொஞ்சம் உதவி புரியலாமே!

ஒவ்வொரு வாரமும்
முக்கியமான விடயங்கள்
பற்றிய வாசகர்களின்
கருத்துக்களை அறிந்து
பிரசுரிக்க விரும்புகிறோம்.
இந்த வாரம் கனடாவில்
நடைபெறவிருக்கும்
'உலகத்தமிழர் பண்பாட்டு
மாநாடு' பற்றிய உங்கள்
கருத்துக்களை தொலைபேசி
பதிவு கருவியில்
சுருக்கமாக பதிவு
செய்யுங்கள். உங்கள்
பெயர், தொலைபேசி
இலக்கங்களையும்
குறிப்பிடவும்.
**963 5738**
(வெள்ளி இரவு முதல்
ஞாயிறு இரவு வரை)

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

**ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது**

**பரீட்சித்துப் பாருங்கள்**

**Try First**

**பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்**

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

**சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!**

## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றவையும் கிடைக்கும்




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தொடர் நாடகம்

# கறை படிந்த கைகள்

ஜான் போல் சாத்ரே
தமிழில்;நேசன்

ஒல்கா: இரவு 12 மணிபோல் மீண்டும் வா. அதே வேளை அவன் ஏன் ஹெடேரரை ஏன் கொலைசெய்தான் எனவும், அவனது தற்போதய நிலைபாடு என்ன என்பதையும் அறிந்து வைக்கின்றேன். அவன் எங்களுக்கு மீண்டும் வேலை செய்ய முடியும் என்றால், நான் அதை உனக்கு இரவில் வந்து சொல்கிறேன். நீ அவனை நிம்மதியாக தூங்கவிடு. காலையில் அவனுக்கு ஓர் வேலை கொடுக்கலாம்...

லூயிஸ்: அவன் சரிபடுத்த முடியாதவனாக இருந்தால்

ஒல்கா: நான் உன்னை உள்ளே வரவிடுகின்றேன்.

லூயிஸ்: இந்த முடிவில் நிறைய ஆபத்தும், சிறிதளவு லாபமும் உண்டு.

ஒல்கா: என்ன ஆபத்து இதில்? வீட்டைச் சுற்றி வெளியே எத்தனை ஆட்கள் இருக்கின்றார்கள்?

அவர்கள் நடுநிசி வரை நிற்கட்டும் (லூயிஸ் நகரவில்லை) லூயிஸ். அவன் எங்களுக்காக வேலை செய்தவன் நாங்கள் அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்

லூயிஸ்: சரி, நான் உன்னை நடு இரவில் சந்திக்கின்றேன். (வெளியே போகிறான்)

★ ★ ★

(ஒல்கா, தனது படுக்கை அறையருகே சென்று கதவைத் திறக்கின்றாள் ஹிகோ அறையை விட்டு வெளியே வருகின்றான்)

ஹிகோ: அது உனது சகோதரி தானே?

ஒல்கா: யார்?

ஹிகோ:சுவரில் முன்பு தொங்கும் உனது சகோதரியின் படம். (மௌனம்) நீ அதை எடுத்துவிட்டாய் (ஒல்கா பதிலளிக்கவில்லை. அவன் அவளை நோக்குகின்றான்) உனது முகம் வித்தியாசமாக தோற்றமளிக்கிறன்றது. அவர்கள் என்ன சொன்னார்கள்.

ஒல்கா: அவர்கள் உன்னை தேடுகின்றார்கள்

ஹிகோ: ஆகா, நான் இங்கிருப்பதை நீ அவர்களுக்குச் சொன்னாய்?

ஒல்கா: ஆம்

ஹிகோ: நல்லது ( ஹிகோ வெளியே செல்ல முற்படுகின்றான்)

நிலா வெளிச்சத்தை கூடிய ஓர் இரவு, வீட்டை சுற்றி தோழர்கள் நிற்கின்றார்கள்.

ஹிகோ: ஹம் (ஹிகோ மேசையில் அமர்கிறான்) எனக்கு சாப்பிட ஏதேனும் (ஒல்கா சாப்பாட்டை பரிமாறுகின்றாள்) எனக்கு எல்லாமே ஞாபகம் இருக்கின்றது. நான் சிறையில் இருக்கும் போது நான் எனக்குள்ளே சொல்லிக்கொள்வேன். இது வெறுமனே ஓர் நினைவு. உண்மையான அறை வெளியே இந்த சுவருக்கு மறுபுறம் இருக்கின்றது.' உனது அறையை நான் பார்க்கும் போது அது வேறு எதுவுமே இல்லை. வெறுமனே ஓர் நினைவு. சிறை கூட ஓர் கனவுதான் நான் ஹொடேரரை சுட்டபோது அவனது கண்களும் அப்படித்தான். இந்த கனவுலகத்தில் இருந்து எப்போதாவது விழிப்பேன் என நீ நினைக்கின்றாயா? சில வேளைகளின் உனது ஆட்கள் தங்கள் வேலையை செய்யும் போது நான் விழிக்கலாம்.

ஒல்கா: நீ இங்கு இருக்கும் வரை ஒருவரும் உன்னைச் தொட முடியாது.

ஹிகோ: நீ அதை ஒரு மாதிரி சமாளித்தாய் என்ன? (தனத கிளாஸில் வைனை ஊற்றிக் கொள்கிறான்) எப்படியோ ஒரு நாள் நான் வெளியே போகவேண்டிவரும்.

ஒல்கா: பொறுமையாக இரு. உனக்கு குறைந்த பட்சம் ஒரு இரவு உண்டு. ஓர் இரவில் எவ்வளவோ விடயங்கள் நடக்கலாம்.

ஹிகோ: என்ன நடக்கவேண்டும் என நினைக்கிறாய்

ஒல்கா: விஷயங்கள் மாறலாம்.

ஹிகோ: என்ன?

ஒல்கா: நீ, நான்

ஹிகோ: நீ

ஒல்கா: அது உன்னைப் பொறுத்தது

ஹிகோ: அப்ப நான் உன்னை மாற்றவேண்டும் (அவன் பலமாகசிரித்தபடி அவளை நோக்கி நகர்கின்றான் அவள் அவதானத்தோடு அவனில் நின்றும் நகர்கின்றாள்)

ஒல்கா: அந்த மாதிரியான மாற்றம் அல்ல, நீ எனக்கு வேண்டும் என்றால் மட்டுமே அவ்வாறு நான் மாறலாம்.

(ஹிகோ, தோளை ● லுக்கியபடி பின் நகர்ந்து மீண்டும் அமர்கிறான்)

ஹிகோ: வேறு என்ன?

ஒல்கா: நீ எங்களுடன் மறுபடியும் சேர்ந்தால் என்ன?

ஹிகோ: (வெடித்துச் சிரித்தபடி) இக்கேள்வியைக் கேட்க சரியான நேரத்தைத் தெரிந்தெடுத்தாய்.

ஒல்கா: ஆனால் அவ்வாறான ஓர் சந்தர்ப்பம் இருந்தால்? இந்த கடந்தகால சம்பவம் ஓர் தப்புணர்விலே எழுந்தது என ஏன் நாம் நம்பக்கூடாது? நீ வெளியே வரும் போது நீ என்ன செய்ய வேண்டும் என ஒரு போதும் நீ

*அது எல்லாக் கதைகள் போலுமே ஓர் முட்டாள் தனமான ஓர் கதை. அக் கதையை தூரத்தில் இருந்து நோக்கின் எல்லாச் சம்பவங்களும் ஒன்றோடு ஒன்று பிணைந்ததாக அர்த்தமுள்ள ஓர் கதையாக தோன்றும் ஆனால் நெருங்கிச் சென்று விளங்கிக்கொள்ள முயலின் அது ஓர் தொடர்பற்ற ஓர் கதை. சுட்டதாகிய அக்காரியம் அதி விரைவாக நடந்து முடிந்த ஓர் சம்பவம். அது எதேச்சையாக நடந்தது. அதை நான் விரும்பித்தான் செய்தேனா, அவ்வாறு என் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட முறையில் அது நடந்ததா என எனக்குத் தெரியாது. எதுவாயினும் நான் துப்பாக்கி வில்லை இழுத்தது என்பதுதான் உண்மை.*

25ம் பக்கம் பார்க்க..

# வளர்முக நாடுகளும் 5 குடிமனைப் பிரச்சனைகளும்

**வ.ந.கிரிதரன்**

## மண்ணும் மனிதரும்...

மண்ணைக் குழைத்து மனைகளை அமைக்கும் போது இவ்விதம் அமைக்கப்பட்ட மனைகளை எதிர் நோக்கும் முக்கியமான பிரச்சனைகளிலொன்று---- அவற்றின் நீரெதிர்க்கும் தன்மையை (Waterproofing) அதிகரிப்பது பற்றியது. இது பற்றியும் பல்வேறு வகையான ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. இந்தியாவில் இவ்விதம் அமைக்கப்பட்ட வீடுகளின் சுவர்களை. 1:3 என்ற விதத்தில். கலந்துருவாக்கப்பட்ட சீமெந்து. நீர்க் கலவையால் பூசி, அதன்மேல் 1:15 என்ற விகிதத்தில் சீமெந்து. மணல் கலந்துருவான கலவையைப் பூசியபொழுது. அவை நன்கு செயல்பட்டன. ரொடீசியாவின் தென்பகுதியில் இவ்விதம் அமைக்கப்படும் வீடுகளின் சுவர்களின் மேல் முதலில் பிட்டுமன் (bituman) கலவையைத் தெளிக்கின்றார்கள். அதன்மேல் மணலைத் தூவி பின்பு அதன்மேல் சீமெந்து நீர்க்கலவையால் பூசுகின்றார்கள். ஆபிரிக்காவின் சில பகுதிகளில் இவ்விதமான மண்வீடுகளின் சுவர்களை. 1:12 என்ற விகிதத்தில் சீமெந்தும் மணலும் கலந்துருவாக்கிய கலவையில் 5% இலிருந்து 10% வரையில் சுண்ணாம்பையும் கலந்து பெறப்படும் சாந்தால் (plaster) பூசி மெழுகுவது பயனைத் தருவதை அறிந்திருக்கின்றார்கள். அஸ்பால்ட் கலந்துருவாக்கப்பட்ட மண்ணைக் கொண்டு அமைக்கப்பட்ட வீடுகளின் சுவர்களிற்கு. அஸ்பால்ட்டை அடியாகக் கொண்ட (asphalt– based) அலுமினியம் பெயிண்ட்டைப் பாவிக்கும் போது. மண்சுவருடனான பிணைப்பு நன்கு உறுதியாக இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள். இது தவிர ஆளி விதையிலிருந்து பெறப்படும் எண்ணெய் (Linseed oil) இவ்விதமான மண்சுவர்களை நன்கு பாதுகாப்பதை பல்வேறு நாடுகளிலிருந்தும் பெறப்பட்ட அனுபவங்கள் புலப்படுத்துகின்றன. அமெரிக்க ஆய்வுகள் மூலம் பின்வருவன வெளியாகியுள்ளன.

1) சுட்ட சுண்ணாம்பையும், cottaque cheese ஐயும் 1:6 என்ற விகிதத்தில் கலந்து. அவற்றுடன் தகுந்த அளவு நீரைச் சேர்த்து உருவாக்கப்படும் கலவையை மண்சுவரின் உட்புறத்தே (interior) நீரெதிர்க்கும் பசையாகப் பாவிக்கலாம்.

2) ஒரு கலன் மோரையும் 4 1/2 றுத்தல் சீமெந்தையும் (வெண்சீமெந்து White cement) கலந்து உருவாக்கப்பட்ட கலவையை பெயிண்ட்டாகப் பாவிக்கலாம்.

3) 30 றுத்தல் மாவையும், 50 கலன்கள் நீரையும் கலந்து சூடாக்கிப் பெறப்பட்ட கலவைக்கு. மண்ணைத் தகுந்தளவு சேர்ப்பதன் மூலம் பெறப்படும் கலவையைக் கொண்டு மண் சுவர்களைப் பூசலாம்.

கேட்பதற்குச் சிரிப்பாகயிருக்கின்றதல்லவா? ஆனால் ஆய்வுகள் இவற்றை நிருபித்துள்ளன. அவற்றை மறுப்பதற்கில்லை. வளர்முகநாடுகளிலும் இது போன்ற ஆய்வுகள் தொடரப்படவேண்டும். பொருத்தமானவை பாவிக்கப்பட வேண்டும். குறைந்த செலவில் நிறைந்த பயனை அடைவதென்ற குறிக்கோளையும் ஆய்வாளர்கள் மறந்து விடக்கூடாது.

## 'சுண்ணச் வெண் சாந்தும்....'

சீமெந்து கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்பிருந்தே மனிதரால் பாவிக்கப்பட்டு வரும் கட்டடப் பொருட்களில் சுண்ணாம்பும் முக்கியமானது. சுண்ணாம்பும், மணலும் கலந்து உருவாக்கப்படும் கற்களை (ஞand–Lime blocks) வீடுகளை அமைப்பதற்குப் பாவிக்கலாம். இத்தகைய கற்களைப் பல்வேறு வர்ணங்களிற்குரிய வஸ்துகளைச் சேர்ப்பதன் மூலம் (piqments) பல்வேறு வர்ணங்களில் உருவாக்கலாம். இத்தகைய கட்டிகளின் தாங்கும் சக்தி 200 இலிருந்து 500 கிலோகிராம் cm2 வரையிலிருக்கும். இத்தகைய சுண்ணாம்புக் கட்டிகளாலேற்படும் முக்கியமான நன்மைகள்: சீமெந்து குறைவாகயிருக்கும் இடங்களில், சுண்ணாம்பு பெருமளவு கிடைக்குமிடங்களில் இவற்றை வீடுகளை அமைக்கப் பாவிக்கலாம். மேலும் பல்வேறு வர்ணங்களில் இவற்றை உருவாக்கக் கூடியதாகயிருப்பதால் இவற்றை வீடுகளிற்கு அழகான தோற்றத்தைக் கொடுப்பதற்குரிய கட்டடப் பொருளாகவும் பாவிக்கலாம்.

உலகம் முழுவதிலுமே பரவலாக சுண்ணாம்பு, சீமெந்து, மணல் கலந்த கலவையிலிருந்து உருவாக்கப்படும் காரை (mortar) பாவிக்கப்படுகின்றது. சுண்ணாம்புக் காரை (Lime plaster) ஆகியன சீமெந்தை விட சிறந்து விளங்குகின்றன. தண்ணீர் உட்புகுவதை தடுப்பதில் சிறந்து விளங்குகின்றன. சீமெந்திலிருந்து உருவாக்கப்படும் காரை, சாந்தை விட, சுண்ணாம்பிலிருந்து உருவாக்கப்படும் காரை, சாந்து ஆகியன கையாள்வதற்கு இலேசானவை (work-able).

சுண்ணாம்பு இன்னுமொரு வழியிலும் சீமெந்தைவிட நன்மையானது. சீமெந்தைக் குடிசைத் தொழிலாக (cottague industry) உருவாக்க முடியாது. ஆனால் சுண்ணாம்பை அவ்விதம் உருவாக்கலாம். பல்வேறு அளவுகளில் உருவாக்கப்பட்ட சூளைகள் பல நாடுகளில் பாவனையிலுள்ளன. இவ்விதம் சூளைகளிலிருந்து உருவாக்கப்படும் சுண்ணாம்பை நீருடன் கலப்பதற்கு (slaking) உரிய இயந்திரங்களும் பாவனையிலுள்ளன.

சீமெந்துடன் ஒப்பிடும் பொழுது சுண்ணாம்பின் முக்கியமான குறைபாடு: சீமெந்து விரைவாக உறுதியடைந்து விடும். இதற்குரிய நேரம் (SETTING TIME) சுண்ணாம்பை விட்டு குறைவானது. சுண்ணாம்பையும் சீமெந்தைப் போல விரைவாக உறுதியடையச் செய்ய முடியும், தகுந்த ஊக்கியொன்றைச் சேர்ப்பதன் மூலம். சுண்ணாம்பை உறுதியாக்குவதற்காகப் பாவிக்கப்படும் பொருட்களில் முக்கியமானது 'பொசல்லோனா' (Pozzolana) இதனைக்கூட இலகுவான முறையில், குறைந்த செலவில் உருவாக்குவதற்குரிய வழிமுறைகள் பல ஆராயப்பட்டுள்ளன, கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் களிமண்ணையும், உமியையும் கலந்து கைகளால் உருவாக்கப்படும் சிறு கட்டிகளை எரிப்பதன் மூலம் பெறப்படும்

15ம் பக்கம் பார்க்க..

# போல் தூவியர்: இருத்தலும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களும்.

"Paul Touvier became the first frenchman to be tried for crimes against humanity in a trial expected to shed light on French collaboration with the Nazis. Toubier was Lyon area intelligence chief for the Vichy regime and worked with Gestapo chief Klaus Barbie. He is charged with complicity in the killings of seven jews."
(THE WALL STREET JORNAI EUROPE,
Friday– Saturday. March 18–19,1994)

தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்த வேளையிலேயே போல் தூவியருக்கு (Paul Touier) இரண்டு தடவைகள் மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஜனாதிபதியாகவிருந்த ஜோர்ஜ் பொம்பிது (Georges Pompidou) இவருக்கு மன்னிப்பு வழங்கிய வேளையில் "பிரெஞ்சுக்காரர்கள் தங்களைத் தாங்களே விரும்பாதிருந்த இந்தக் காலங்களை (இரண்டாம் உலகப்போர் காலகட்டம்) மறக்கவேண்டும்" எனக் குறிப்பிட்டிருந்தார். காலங்களை மறப்பதா அல்லது அரசியல் லாபங்களுக்காக அவ்வவற்றைப் பயன்படுத்துவதா? பிரான்ஸிலே, தூவியர் மீதான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள இந்த வேளையில் இப்படியொரு கேள்வியைக் கேட்டல் எனக்கு அவசியமானதாகப்படுகின்றது.

40 களிலே யூதர்கள் லட்சக்கணக்கில் மிகவும் கொடூரமான முறைகளிலே கொல்லப்பட்டனர் என்பது ஓர் வரலாறு. இன்றைய யூத சந்ததியை இந்தக் கொடூரத்தின் நிழல் இன்னமும் துன்புறுத்துகின்றது என்பது ஓர் உண்மை. கொலைகள் யாவுமே மனிதாபிமானத்திற்கு எதிரானவை என்றிருக்கையில், 40 களில் நடந்த யூதர்களின் கொலைகள் மட்டுமே "மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள்" (CRIME CONTRE L'HUMANITE / CRIMES AGAINST HUMANITY) என்ற தனித்த வரைபின் கீழ் ஐரோப்பிய நீதிபரிபாலனத்தால் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, 40 களின் பின்னர் இடம் பெற்ற இன அழிப்புகள் இன்னமும் ஐரோப்பிய நீதிபரிபாலனத்திற்கு, மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் எனப்படவில்லையா? இந்த இன அழிப்புகளை இவர்கள் எந்த வரைவின் மீது நிறுத்துகின்றனர்?

ஆரிய ரத்தமே உலகின் தூய்மையான ரத்தம் என வாதாடி கம்யூனிஸ்ட்டுகளையும், யூதர்களையும் கொன்ற ஹிட்லருடன் ஐரோப்பிய அரசுகள் ஒத்துழைத்தன என்பதும் ஓர் வரலாறுதான். மறேசெல் பேத்தானின் (MARACEL PETAIN) பொறுப்பிலிருந்த பிரான்ஸின் விச்சி (VICHY) அரசு யூதர்களைப் பிடித்து, ரயில்களில் ஏற்றி ஹிட்லரின் சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பியது. ஸ்டாலின் ஹிட்லருடன் ரகஸிய ஒப்பந்தம் செய்து கொண்டார். 40 களிலே இடம் பெற்ற இக் கொடூரங்களின் தொடர்ச்சியை ஐரோப்பியர் இன்னும் வேறு வடிவங்களில் நடத்தி வருகின்றனர். யூதர்களைக் கொன்ற ஹிட்லரின் சர்வாதிகாரத்தை அழித்துவிட்டோம் என ஐரோப்பியர்கள் இன்று மார்தட்டிக் கொள்ளலாம். தாமே உலகின் மிகப்பெரும் மனிதாபிமானிகள் என முழங்கவும் செய்யலாம். உலகின் வறுமை நாடுகளினது பலவீனங்களை பயன்படுத்தி, அரசியல் நெருக்கடிகளை உருவாக்கி, ஆயுதங்களை விற்று லட்சக்கணக்கில் மனிதர்களைக் கொன்று வரும் ஐரோப்பிய அரசுகளினது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களின் மீது விசாரணை எப்போது நடக்கும்?

தூவியருக்கு முன்னர், பிரான்ஸிலே கிளவ்ஸ் பார்பி (Klaus Barbie) "மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களுக்காக" விசாரிக்கப்பட்டு ஆயுள் தண்டனைக்கு உள்ளானர். இந்தத் விசாரணையின்போது, பார்பிக்காக வாதாடிய பிரான்ஸின் சர்ச்சைக்குரிய சட்டத்தரணியான ஜாக் வேர்ஜேஸ் (Jacques Verges) ஐரோப்பிய பாசாங்குத்தனத்தை மிகவும் காரசாரமாகவே விமர்சித்தார். குற்றங்கள் விசாரிக்கப்படக் கூடாதன என்பதல்ல என் அபிப்பிராயம். ஆனல், யார் குற்றங்களை விசாரிக்கின்றனர் என்பதே முக்கியம். வளைகுடா யுத்தத்தின்போது 200,000 ஈராக்கியர்களைக் கொன்ற (வளைகுடா யுத்தத்தின் பின்னர் அமெரிக்க மனிதாபிமானிகள் பலர் சேர்ந்து உருவாக்கிய சர்வதேச நீதிமன்றத்தினல் வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்து இந்தத் தரவு எடுக்கப்பட்டது) அமெரிக்க ஐரோப்பிய கூட்டுத்தான் இன்று தூவியரை விசாரிக்கின்றது. இது சற்றே விசித்திரமானது. மனிதாபிமானத்தினது நிறம் எதுவென்பதை எமக்கு மறைப்பது போல் தூவியரை விசாரிக்க பிரெஞ்சு நீதிபாலனத்துக்குக் கிடைத்த ஒரேயொரு தரவு இதுதான். அதாவது 29 ஜூன் 1944 இல், 7 யூதர்களைக் கொல்லுமாறு அவர் கட்டளையிட்டியிருந்தார் என்பதுதான் அது. "மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றத்திற்காக" விசாரிக்கப்படும் முதலாவது பிரெஞ்சுக்காரர் இவர். இன்று முதுமையின் கடைசிக்கட்டத்தில் உள்ள இவர், 40 களின் பின்னர் தலை மறைவு வாழக்கையையே நடத்தியவர். தேவாலயம் ஒன்றினுள் ஒளித்திருந்த இவர் சில ஆண்டுகளின் முன்னர்தான், L'EXPRESS சஞ்சிகையினது பத்திரிகையாளர் ஒருவர் கொடுத்த தகவலின்படி கைது செய்யப்பட்டார் (24. மே. 1989)

உலகின் மிகப்பெரும் சர்வாதிகாரிகளுக்குப் புகலிடம் கொடுத்த பெருமை பிரான்ஸிற்கு உண்டு. மன்னர் ஷா ஈரானிலே ஆட்சியிலிருந்தபோது, அயதொல்லா கொமேய்னிக்குப் புகலிடம் கொடுத்து இஸ்லாமியப் புரட்சி நடத்த அங்கே பவுத்திரமாகத் திருப்பியனுப்பியது பிரான்ஸ்தான். ஹயித்தி தீவின் பொருளாதாரத்தைச் சுரண்டி, பலரைக் கொன்று, கிளர்ச்சியின் பின்னர் கோடிக்கணக்கான பணத்துடன் தப்பிய டுவாலியர் பிரான்ஸில்தான் கோட்டையும் கொத்தளமுமாக இருக்கின்றார். இன்னும் பல உதாரணங்கள் உள்ளன. பிரான்ஸின் லாபத்துக்கு குந்தகம் விளைவிக்காத எதுவும் பிரான்ஸினது விழிகளின் முன்னே குற்றங்களாகப் படுவதில்லை. சில ஆண்டுகளின் முன்னர் நியூ கலிடோனியாவின் சுதந்திரப்போராளிகள், அப்போதைய பிரெஞ்சுப் பிரதமரான

15ம் பக்கம் பார்க்க..

**கௌந்தியின்**
**இருத்தலியல் விசாரணைகள்**

# ஒரு சிம்மாசனத்தின் சூட்சுமம்; பாலசந்தரின் சினிமா யுகம்

**அருணன்**

காதல், பாசம், பக்தி, பிரிவு, கடமை, வீரம் எனும் உள்ளத்து உணர்ச்சிகளை கிளறித் தணிப்பதிலேயே திரைப்படங்கள் பெரும்பங்கேற்று இருந்த கால கட்டத்தில் புதிய பரிமாணத்துடன் கால் வைத்தவர் கே. பாலசந்தர். தமிழ்த்திரை வரலாற்றின் புதிய பரிணுமத்தின் தந்தை எனலாம் இவரை. மரணத்திற்காக தன் நிமிடங்களை எண்ணிக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியின் உணர்ச்சிகளை இறக்கி வைத்ததுதான் இவரின் முதலாம் படைப்பான நீர்க்குமிழி. இப்படத்திலேயே பல புதிய அணுகு முறைகளை அறிமுகஞ் செய்தார். நகைச்சுவைக்கென தனியொரு பாத்திரமில்லாமல் கதையை நகர்த்தியிருந்தார். விறுவிறுப்புடன் ஊகித்தறிய முடியாத திருப்பங்களுடன் கருத்துச் செறிவான வார்த்தைகளை குறு வசனத்தில் தந்திருந்தார். இம்முறைகள் இவரது பிற படங்களிலும் தொடர்ந்தது. காட்சிகளை புதிய கோணத்தில் ரசிகர்களுக்கு அறிமுகஞ் செய்தார். உதாரணத்திற்கு நீர்க்குமிழியில் தலைமை வைத்தியரின் வருகையை நகரும் கமராப் பார்வையில் தாதிகள் பிற வைத்தியர்கள் வணக்கம் சொல்வது போல் அமைத்திருந்தார். இப்படி இவரது ஆரம்ப விதை வீரியமானதாய் அமைந்தது. இவரது புத்திசாலித்தனமே இன்றுவரை இவரது பலமாக இருந்து வருகிறது 27 வருடங்களாகியும் இன்றுவரை தனியான இடம் இவருக்கு இருக்கிறதென்றல் இவரது கடின உழைப்பே இதன் காரணம். இவரது படத்துக்குப் படம் புதுமை செய்ய வேண்டுமென்ற துடிப்பு தமிழ்த்திரையுலகில் இருந்து வந்த சிந்தனை வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டது. கதையில் கதாபாத்திரத்தில் உச்ச கட்டங்களில் பல பரீட்சாத்தங்களைச் செய்தார். பல வெற்றியடைந்தன. சில சறுக்கின. பாடல்களில் கூட பல புதுமைகளைச் செய்தார் எனும் போது அதில் கூட அவரது கவனம் எவ்வளவு நுண்மையாய் இருந்தது என்பது சொல்லத் தேவையில்லை. கே.பாலசந்தரின் படைப்புகளில் பெண் பாத்திரம் புத்தி சாலித்தனமானதாய்த் தான் அமையும். தானே தன் முடிவுகளை எடுக்கும் கதாநாயகிகளையே உலவ விட்டார். பெண்ணை உயர்வாய்க் காட்டவேண்டும் என்பதற்காக ஆண்களை தாழ்த்தி விட்டதாக அவரது "அவள் ஒரு தொடர்கதை" எனும் படத்தின் மேல் கண்டனமும் உண்டு. ஆனல் அப்படத்தில் தர்க்க ரீதியில் அவர் அமைத்துக் கொண்ட காட்சிகளினுல் அக் கண்டனம் பலமிழந்து போனது. கிராமத்துப் பெண்ணெனினும் புத்திசாலியாய் காட்டும் பாலசந்கர் இரு/பல பெண்கள் (விலக்கு 47 நாட்கள்) முக்கிய பாத்திரமேற்கும் படங்களில் ஒரு பெண்ணை உயர்வாய்க் காட்ட படிப்பறிவையே காரணமாக்கிக் கொண்டார். இது "சிந்துபைரவி" ஒருவீடு இருவாசல் வரையும் தொடர்ந்தது. (இதில் இரு கோடுகள் விலக்கு) படங்களில் பொதுவாய் பெண்களுக்காகவே வாதாடும் பாலசந்தர் முற்றுமுழுதாய் பெண்கள் வாதாடுவதாய் எடுத்த படம் "கல்யாண அகதிகள்" இப்படத்தில் எவ்வளவோ சிறப்பிருந்தும் படம் எடுபடாது போனது கவலைக்குரியதே. அப்படத்தில் ஆண்பாத்திரம் வலு குன்றி இருந்ததே காரணமென்றனர் சினிமா விமர்சகர்கள். அதே நேரம் ஆண் பாத்திரம் வலுவாய் அமைந்த நான் அவனில்லையும் தோல்வியை தழுவியது. பெண்கள் போராடுவதையும் அவர்கள் துணிச்சலையும் காட்டி வந்த பாலசந்தர் ஒரு மாறுதலுக்காக பாமரப் பெண்ணின் பரிதாபங்களை "47 நாட்களில்" தந்தார் அதே படத்தில் அவர் இன்னெரு புதுமையையும் செய்தார். அதாவது பாமரத்தனமான வசனத்தில் படத்தை முடித்தார். அது யாதெனில், கதாநாயகியிடம் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. "உன்னைக் காப்பாத்தின இவரை ஏன் மறு கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?" அதற்கு அவள் "என்னைக் காப்பாத்தின படியால் இவர் கடவுள் மாதிரி. கடவுளை யாரும் கல்யாணம் பண்ணிப்பாளா?" என்கிறுள்.

பாத்திரங்களில் வசனத்தில் காட்சி அமைப்பில் மட்டுமல்லாது கதையிலும் புதுமை செய்தார். இதற்கு சாட்சியாக அபூர்வராகங்கள். மூன்றுமுடிச்சு. அவர்கள் படங்களைச் சொல்லலாம். பாலசந்தர் படங்களில் ஒவ்வொரு காட்சியும் ரசிகர்கள் எதிர்பாராத திருப்பங்களுடன் நகர்த்தப்படும் இதனுல் பாலசந்தரால் ரசிகர்கள் புத்திசாலித்தனமாய் ஏமாற்றப்பட்டார்கள். இதனுல்தான் ரசிகர்கள் அவரது படங்களை சுவாரஸ்யமாக ரசித்தனர். புதியவற்றை அறியும் அவா கொண்டோருக்கு இம்முறை தீனியாக அமைந்தது.

பொதுவாக பாலசந்தர் படங்கள் ரசிகர்களை சிந்திக்கத் தூண்டுவனவாக இருந்தது. பல கருத்துகள் சொல்லப்பட்டது இவரது படங்களில்.. இதனுல் தான் பாலசந்தர் படம் பார்த்து வெளிவருபவர்கள் தலை கனத்திருப்பதை உணர்ந்து கொண்டனர். படம் பார்த்து முடிந்த பின்பும் இவர் படங்களில் சொல்லியிருந்தவை ரசிகர் மனங்களில் விவாதங்களை. ஆய்வுகளை தூண்டுவனவாய் இருந்தன. ஒவ்வொரு படத்தையும் அளந்து செறிவுபடுத்தியதால் தான் இவரது படங்களின் பாடல்கள் கூட அவசியத்துடன் சேர்க்கப்பட்டது. அத்துடன் பாடல்களின் கருத்துக்கமையவே காட்சிகளும் அமைக்கப்பட்டது. இதற்கு உதாரணமாக அபூர்வராகங்கள் படத்தில் வரும் "அதிசய ராகம்" எனும் பாடலில் வரும் பின்னிய கூந்தல் கருநிற நாகம் எனும் வசனம் வரும் இடம் நிர்வாணச்சிலை ஒன்றை பார்த்ததும் நாணத்துடன் நாயகி திரும்பும் போது தெரியும் அவள் பின்புறத்தில் கூந்தலுக்கான வர்ணனையாகும் அவ் வசனத்திற்கமைய காட்சி அமைக்கப்பட்டது.

பாடல்கள் ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமானதாயும் அமைந்தது.

"மெல்லப் பேசுங்கள்" என ஒரு பாடலும் "நான் சத்தம் போட்டுத்தான் பாடுவேன்" என்றெரு பாடலும் ஒரே படத்தின் இரு நாயகிகளின் முரண்பாடுகளை மனதில் பதிய வைக்க நுணுக்கமாகச் கையாளப் பட்டது. படம் தாமரை நெஞ்சம்.

"ஆடிவெள்ளி தேடி உன்னை" என அந்தாதியாய் அமையும் பாடலும் "வசந்தகால நதிகளிலே" என்ற பிறிதொரு அந்தாதிப் பாடலும் (இது படம் முடியும்

வரை இடையிடையே தொடரும்) அமைக்கப்பட்டது. படம் முன்று முடிச்சு.

பாடல்களே நிறைந்த படத்தையும் எடுத்தார் படம் நினைத்தாலே இனிக்கும். பாடல் காட்சியை உச்ச கட்டமாய் அமைத்தார் அபூர்வ ராகங்களில் பாடல் கேள்வியின் நாயகனே இப்பாடலில் வரும் சரணத்திற்காக 64 சரணங்களை எழுதி நீரே விரும்பினதை தெரிவு செய்யும் என கண்ணதாசன் விட்டுவிட்டார்.

பின்னணியில் தாளமே இல்லாமல் பாடல் சிந்து பைரவியில் அப்படத்தில் ஆரோகணத்தில் மட்டுமே அமையும் ஒரு பாடலும் வருகிறது.

சாத்ரீக சங்கீதத்தில் பெரு விருப்புக் கொண்ட பாலசந்தர் கீர்த்தனைகள் சமஷ்கிருத்தில் இருந்து தமிழாய் மாறவேண்டும் என்றார். சங்கீதம் ஜனரஞ்சகமாக வேண்டும் என்றால் தமிழில் வேண்டும் என்றார். படம் சிந்து பைரவி.

தமிழில் அவருக்கு அளவுக்கதிகமான மதிப்பு இருந்தது. விருப்பு இருந்தது.

இதனால் தான் தமிழின் உயர்வு பற்றி ஹிந்தியில் சொல்லமுடிந்தது ஏக் துஜே கேலியே. மலையாளத்தில் சொல்ல முடிந்தது அவள் ஒரு தமிழிச்சி.

ஆனாலும் பாலசந்தர் படங்களில் ஆங்கிலம் கூடுதலாகப் பாவிக்கப்படுவதாய் குற்றச் சாட்டும் உண்டு. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழையே அவர்கள் ஆங்கிலத்திலேயே கற்பதால் தமிழ் நாட்டு படித்த ரசிகர்களுக்கு அது பெரும் அதிர்ச்சியாகவோ பாதிப்பானதாயோ இருக்க நியாயமில்லை. எனினும் பாமரர்களும் இலங்கைத் தமிழர்களுக்கும் பாலசந்தர் படங்களில் பூரணமாய் மூழ்க முடிவதில்லை எனும் வாதம் தர்க்க ரீதியில் சரி எனினும இலங்கைத் தமிழர்கள் இக் கருத்துக்குள் அகப்படவில்லை. இதற்கு பாலசந்தர் படங்கள் ஈழத்தில் வெற்றி பெற்றதே சான்று. தமிழ் நாட்டில் தோல்வி கண்ட "புன்னகை" படம் கூட யாழ்ப்பாணத்தில் வரவேற்பைப் பெற்றது.

தொடரும்

## போல் தூவியர்...

ஜாக் கிராக் (Jacque Chirac) இனது கட்டளையின் பேரில் கொல்லப்பட்டனர். இவைகள் குற்றங்கள் இல்லையா?

ஐரோப்பிய நாடுகளில் என்ன. உலகம் முழுவதிலும் வாழுகின்ற யூத சமுகங்கள். தமது "கடந்த காலங்களை" க் கும்பிடுவதிலும், அவைகளை வைத்து. உலகில் சித்திரவதைக்குள்ளான ஒரேயொரு இனம் தான்தான் என்ற மாயையின் நிழலில் குளிர் காய்வதையும் ஓர் இலட்சியமாகக் கொண்டுள்ளன. யூத கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு ஊடகங்கள் (உலகின் மிகப் பெரும் தொடர்பு ஊடகங்கள் யூத கட்டுப்பாட்டில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது) இதற்குப் பேருதவி செய்து வருகின்றன. யூதர்களினது வன் முறைத்தனங்களை விமர்சித்து ஒரு வரி எழுதுதல் கூடக் குற்றமெனும் நிலை பிரான்ஸில் . யூத சமுகத்திலிருந்து தோன்றிய பல புத்திஜீவிகள் இன உணர்வுக்கே முன்னுரிமை கொடுத்து, மனித உணர்வுக்கு அந்நியமாகவே உள்ளனர் என்பதை இவர்கள் சர்வதேசப் பிரச்சனைகளின் மீது வெளிப்படுத்தும் அபிப்பிராயங்களுக்கூடாக அறிந்து கொள்ளலாம். யூதர்களினது, அதி தீவித யூத இன வெறி, மறைமுகமான யூத எதிர்ப்பு வாதத்துக்கே துணை போகின்றது. இஸ்ரேலிய அரசின் பயங்கரவாதத்தின் மீது கண் முடியிருக்கும் யூதப் புத்திஜீவிகள் பலர்.

போல் தூவியர் இன்று விசாரிக்கப்படுகின்றார். இவருக்கு மரண தண்டனை (பிரான்ஸில் இது இல்லை) விதிக்கப்பட்டால் கூட, யூதர்கள் திருப்தியடைய மாட்டார்கள். ஐரோப்பாவும் "மனிதாபிமானதிற்கு எதிரான குற்றவாளி" களைத் தேடுவதை நிறுத்தாது.

குற்றம் செய்தவன், அல்லது செய்பவன் தான் செய்த, அல்லது செய்கின்ற குற்றங்களை மறைக்க இன்னொரு குற்றவாளியைப் பிடித்துத் தலையை அறுக்கும் இந்த உலகில் – . நிரந்தரக் கைதியாக இருப்பது இருத்தல் மட்டுமே....

ஆர்ப்பாட்டங்களும். தண்டனைகளும் தீர்வின் குறியீடுகள் அல்ல. அரசியல் அதிகாரங்களினது சூழ்ச்சிகள் மீதான தேடல்களுக்குள்ளேயே அனைத்து உண்மைகளும் ஒழிந்து கிடக்கின்றன.

## வளர்முக நாடுகளும்..

பொசல்லானைவைத் தகுந்த அளவில் சுண்ணாம்புடன் கலந்து பாவிக்கின்றார்கள். இவ்விதம் ஏற்கனவே உருவாக்கப்பட்ட சுண்ணாம்பு 'பொசல்லான'க் கலவையும், பைகளில் அடைக்கப்பட்டு இந்தியாவின் மத்தியக் கட்டட ஆய்வு நிலையத்தால் (Central Building Search Institute– CBRI) விற்கப்படுகின்றது. இவ்விதம் பொசல்லானைவை' உருவாக்கும் போது, அதற்குரிய எரிபொருளைக் கூட உமியை எரிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கழிவாகப் கொட்டப்படும் உமியிலிருந்து எவ்விதம் பயனை அடையலாம் பார்த்தீர்களா? இவ்விதம் உமியை எரிபொருளாகப் பாவிப்பது, எரிபொருட் செலவை மிச்சப்படுத்தி விடுகின்றது.

சுண்ணாம்பை சுண்ணாம்புக் கற்களைவிட இன்னுமொரு வழியிலும் பெறலாம். சீனித்தொழிற்சாலையில், கழிவுப் பொருளாக சுண்ணாம்புக் கலவையொன்று வெளியாகின்றது. இந்தக் கழிவுச் சுண்ணாம்புக் கலவையை உமியுடன் சேர்த்து எரிக்கும் போது பெறப்படும் விளைபொருளை சிறந்த 'காரை'யாகத் (Mortar) தொழிற்படுவதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. தொடரும்

கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
மாஜி 796 2672

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய
வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்
Net, Colorful Flower Bouquet,
Flower Basket

# ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# கவிஞர் கீர்த்தியின் கீர்த்தியும் திருகுதாளங்களும்

(எனது குட்டிக்கதை தொடரோடு தொடராக சில இலக்கியப் பாத்திரங்களை உள்ளடக்கிய சித்திரமும் கீறப்பட்டு வருவதை வாசகப் பெருமக்களான நீங்கள் அறிவீர்கள். கவிஞர் கீர்த்தி, விமர்சகர் கார்த்திக், திரு. ஒட்டகச் சிவிங்கி, திருமதி ஒட்டகச் சிவிங்கி (OC.நந்தினி), நுயா சீடப்பிள்ளை, புதிதாக வந்து புகுந்த பூங்கொடி எனப் பலர் ... கீர்த்தி பற்றி ஏற்கனவே எழுதியுள்ளேன். இவ்வாரம் மீண்டும் அவர் கவனத்துக்கு எடுக்கப்படுகின்றார்)

கவிஞர் கீர்த்தியின் கலியாணம் இன்னமும் சரிவரவில்லை. கொழும்பு வரை வந்ததையும் குழப்பி, பாரிஸில் பார்த்ததையும் குழப்பி, ஜேர்மனியிலும் போய்ப் பார்த்ததைக் கூடக் குழப்பிச் சாதனைச் செய்தவர் இவர். இவரிடம் ஒரு வியாதியுள்ளது. முற்போக்குப் பேசுவதுதான் அது. எனக்கு அது பிடிப்பதில்லை. முற்போக்குப் பிடிப்பதில்லை என்று எண்ணிவிடாதீர்கள். அதாவது, இவர் போன்ற போக்கிரிகள் முற்போக்குப் பேசுவது படிப்பதில்லை என்பதையே குறிப்பிடுகின்றேன். இவரைப் போன்ற பலர் புகலிடத்திலும் போல தாயகத்திலும் உள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். முற்போக்கு. பேசுவதற்குச் சுவையான சமாச்சாரம் என்பது இவர்களின் நினைப்பு. சரி, காதல் தான் செய்ய முடியவில்லை. பேசி வரும் பெண்களில் ஒருத்தியையாவது கட்டி முற்போக்குச் செய்து துலையுங்களேன்டா. பேசுங்கள் என்பார். போய்ப் பார்ப்பார்... பிறகு றியெக்ற் பண்ணி விட்டு ..... புதிய அப்பிளிக்கேஷன் போடுவார்.. பெண்கள் வடிவானவர்களாகவும், குணமானவர்களாகவும் இருந்தால் கூட இவர்கள் " பொன் மனம்" உருகாது.. சாதி, சீதனம், குறிப்பு இவைகள்து வடிவே இவர்கட்கு முக்கியம்... பேனவை மட்டும் தூக்கினால், "சாதியே தகர்ந்து போ, சீதனமே சிதைந்து போ, குறிப்பே குலைந்து போ" என்றுதான் இவர்களுக்கு எழுத வரும்....

பூங்கொடியை அண்மையிலே சந்தித்தபோது, கீர்த்தியின் கவிதைப் புத்தகம் வெளிவந்துவிட்டதாம், வெளியீட்டு விழாவும் நடக்கப் போகின்றதாம் எனச் சொல்லி வைத்தாள். மூன்று மணித்தியால பீரோக் கிளீனிங் வேலை ஒன்று எடுத்துக் கொடுத்ததன் பின்னர் அவள் என்னைப் பேர்ஸனலாக விமர்சிப்பதைத் தவிர்த்து விட்டாள். அன்றைய சந்திப்பின் போது, கவிஞர் கீர்த்தி பற்றிய இன்னொரு திடுக்கிடும் தகவலையும் சொன்னாள்.

"அவர் ஒரு புறோக்கரைப் பிடிச்சு எனக்கும் ஒரு தூது விட்டவர்"

"என்ன உமக்குமோ?" எனது நெஞ்சில் இடி விழுந்தது போலிருந்தது. நானும் பூங்கொடியும் சோஸியலாகப் பழகுகின்றவர்கள். அவளுக்கு என் மேல் ஓர் ஈர்ப்பு இருந்திருக்கலாம். ஆனால், அவளுக்கு ஓர் போய் பிறண்ட் இருப்பதும், அவனை அவள் உயிருக்கு உயிராக நேசிப்பதும் எனக்குத் தெரியும். போய் பிறண்ட் வேறு சாதி என்றபடியால் அவளின் பெற்றோர் அவளை மிரட்டிக் காதலைக் கரை என அச்சுறுத்தியபோதும்.... அடைந்தால் காதல், அடையாது விட்டால் கல்லறை எனச் சத்தியம் செய்துள்ளாள். ... இவளுக்கு ஒரு போய் பிறண்ட் இருப்பது எனக்கு மட்டுமல்ல... எமது இலக்கிய வட்டம் முழுவதுக்குமே தெரியும்... கீர்த்திக்கும் தெரியும்... அப்படியிருந்தும் புறோக்கருக்கூடாக கீர்த்தி இவளையும் றை பண்ணி றியெக்ற் பண்ண (நிச்சயமாக றியெக்ற்றில் தான் இது முடியும். பூங்கொடி சாதி, குறிப்பு, சீதனம் இவைகளுக்கு எதிரானவள்... இவள் பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்....) நினைத்ததை எண்ணிய போது மனது கொந்தளித்தது.

"சரி, புறோக்கர் வந்தார்... கேட்டார்.. நீர் என்ன சொன்னனீர்?!!"

"காதல் எண்ட தலைப்பிலை எழுதின கவிதையை புறோக்கரிட்டைக் குடுத்தன்.. புள்ளை வீடு மாறி வந்திட்டன் எண்டிட்டு புறோக்கர் ஓடிட்டார்.."

பூங்கொடி எழுதிய "காதல்" எனும் கவிதை இன்னமும் பிரசுரமாகவில்லை. நான் அதனை வாசித்துள்ளேன். அதிலிருந்து சில வரிகள்.

"எனது மென்னுணர்வுகளை
நீ வாசித்தாய்
உனது மென்னுணர்வுகளை
நான் வாசித்தேன்...
உனது முத்தத் தீயில்
காலம், தேசம் உலகம்
அனைத்துமே பொசுங்குகின்றன.
அன்பே!
உனது முகநிலா
எனது வானில் மட்டுமே
ஒளி சிந்தட்டும்....."

"கவிதைப் புத்தகத்தை வாசிச்சனீரோ? " எனப் பூங்கொடியிடம் கேட்டேன்.

"எனக்கெண்டாத் துண்டாப் பிடிக்கேல்லை... பக்கம் பக்கமாப் புரட்சி செய்யவேண்டும் என எழுதியிருக்கிறார்...."

"உங்கடை பெண்கள் வட்டத்திலை புத்தகத்தை விமர்சனத்துக்கு எடுத்து ஒரு சாத்துச் சாத்தி விடலாமே!"

"பெண்கள் வட்டத்திலை தரமான புத்தகங்களைத்தான் நாங்கள் விமர்சனத்துக்கு எடுக்கிறனுங்கள்" என்றபடி பூங்கொடி போய்விட்டாள்.

இது நடந்து மூன்று வாரங்களின் பின்னர் சாமத்தியச் சடங்கு ஒன்றில் என்னைக் கண்ட கீர்த்தி ஓடி வந்தார்.

"புத்தகம் வாசிச்சனீரே?" இதுதான் அவர் கேட்ட முதல் கேள்வி. உண்மையைச் சொல்வதாயின் நான் புத்தகத்தையும் வாசிக்கவில்லை, வெளியீட்டு விழாவுக்கும் போகவில்லை.

"புத்தகம் வாசிக்கேல்லை.. வெளியீட்டு விழாவுக்கும் வரேல்லை" என்றேன்.

"என்ன ஐஸே, முக்கியமான இலக்கிய நிகழ்ச்சி ஒண்டை மிஸ் பண்ணி விட்டிட்டீர்." என்றபடி என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

82 புத்தகம் அன்றே விற்கப்பட்டதாம். ஏன் விற்காது? மாமன், மச்சான், ஒண்டு விட்ட அண்ணன் தம்பியர் என்றும் ..."ஐயா, நீங்களே இலக்கிய உலகின் காவலர்" என்று ஐஸ் வைத்து 20 அல்லது 30 முதலாளிமாரையும் கூட்டிக்கொண்டு வந்தால் புத்தகம் ஏன் விற்காமல் விடப்போகின்றது. நாங்கள் நடத்தும் இலக்கியப்

பணியின் இலட்சியம் வெளியீட்டு விழாவில் எவ்வளவைச் சுருட்டிக் கொண்டோம் என்று கணக்குப் பார்ப்பதன்றே... இவர்களை வீதிகளில் காணும் போது கும்பிடும் வேறு போடுவார்கள்... பிறகென்ன ஆன்ம திருப்தியில் அவர் தனது சுயசரிதத்தை எழுத வெளிக்கிட்டு விடுவார்.
ஐயாவும் வந்து பேசியவராம். தான் அவருக்குப் பொன்னுடை வேறு போர்த்தியதாம். ஐயா பேசிவிட்டார் என்பதை வைத்து ஏதோ அதிசயம் நடந்து விட்டதெனக் கருதாதீர்கள்.. யார் கூப்பிட்டாலும் ஓடிப்போய் மேடையில் ஏறிப் பேசி விடுவார். . எப்படியும் பேசுவார்.. தான் இன்னமும் முற்போக்கு என்பதைக் காட்ட வர்க்கப் புரட்சியையும் ஒருக்கால் இடையிலே இழுத்துவிடுவார்... என்னைப் பொறுத்த மட்டில் "ஐயாவைக் காண்பதுவும் தீதே. உரைப்பதுவும் தீதே. அவரோடு இணங்கி இருப்பதும் தீதே" என்றுதான் புதிதாக மிகவும் தரமாக எழுதுபவர்கள் நலன் கருதிச் சொல்ல முடியும்.

கவிதைப்புத்தகத்தின் விற்பனையினால் ஏற்பட்ட Inspiration ஆல். ஒரு வாரத்தில் மீண்டும் ஒரு கவிதைத் தொகுப்பைத் தான் எழுதி விட்டாராம்.. அதற்குக் கார்த்திக் முன்னுரை எழுத "ஓம்" சொன்னதாகவும் வேறு துள்ளிக் குதித்தார் எமது கவிஞர் கீர்த்தி. பேய்க்குப் போய்ப் பேன் பார்க்க வேண்டிய கார்த்திக் ஏன் விமர்சனத்துக்குள் இறங்கினார் என்பது எனக்கு ஒருபோதுமே விளங்கியதில்லை.
"என்ரை மற்றப் புத்தகத்தையும் உடனே விடப்போறன்" என்றார் கீர்த்தி.
"ஏன்?" எனக் கேட்டேன்.
"முதல் புத்தகமே நல்ல லாபம். அடுத்த புத்தகத்தையும் விட்டனெண்டா பிறகு ஒரு வீக்லிப் பேப்பரை விடலாம் எண்டு யோசனை என்றார்...
அட, பேப்பர் விடும் வியாதி யாரைதான் விட்டது.. அது கீர்த்தியை மட்டும் எப்படி விடாமல் இருக்கும்...

"பேப்பர் விடுறதெண்டா எக்கசக்கமான காசு தேவை.. அலுவலகம் தேவை.. கொம்பியூட்டர் தேவை.. கொம்பியூட்டரிலை அடிக்க ஒரு ஆள் தேவை.. பேப்பரைக் கொண்டு போய்ப் போடவும் ஆக்கள் தேவை....
"அதிலையொண்டும் பிரச்சனையில்லை.. என்ரை மனிசி கொம்பியூட்டரிலை நல்லா அடிப்பா.." என்றவுடன் நான் எனது விழிகளையுயர்த்தி "நீர் மரி பண்ணிட்டீரோ?" எனக் கேட்டேன்.
"இல்லை. ஒஸ்லோவிலை ஒண்டை பார்த்திருக்கிறன். அது கட்டாயம் சரி வரும்.. பெட்டை என்ரை இனம்தான். சீதனம் கூட என்ரை கற்பனைக்குத் தோதாக இருக்குது.. அவவை நினைச்சு நான் எழுதின காதல் கவிதைகளையும் என்ரை இரண்டாவது கவிதைத் தொகுப்பாலை சேர்த்திருக்கிறன்... சிலோன்.... பாரிஸ்... ஜேர்மனி........ முடிவில் ஒஸ்லோ..........
அதுவும் இலக்கியவியாதியோ?" நான் கேட்டேன்.
"அவ ஓர் இலக்கியத் தேவதை..." எனக் கீர்த்தி சொன்ன வேளையில் ...தூரத்திலே திருமதி OC இன் தலை தெரிந்தது. . அவவும் சாமத்தியச் சடங்குக்கு வந்திருந்தா... கீர்த்திக்குக் காய் வெட்டிவிட்டு அவவின் பக்கம் சென்றேன்.
"அவரும் வந்தவரோ?" கேட்டேன்.
"வந்தவர்..... 'சமாதான நீதவான்' டிப்பாட்மெண்டிற்கை மதிமயங்கிக் கிடக்கிறார்.. என்னைக் கண்டிட்டு 'பூங்கொடி, I LOVE YOU எண்டவர்" என்றா. பின் அவ எதுவுமே பேசவில்லை. என்னையே பார்த்தா. நானும் அவவையே பார்த்தேன்.
எங்களது பார்வைகள் மொழிகளாகி பேசும் மொழிகளை அழித்து இலக்கியம் எழுதின.
"நேற்றுத்தான் இந்தியாவிலிருந்து வந்தது- இது ஜானகிராமனின் "உயிர்த்தேன்" வாசியுங்கள்..." என்று அவவின் பாய்க்கைத் திறந்து அதற்குள் வைத்துவிட்டு "சமாதான நீதவான்" டிப்பாட்மென்றுக்குள் என்ன நடக்கின்றதாம் என்பதை அறியச் சென்றேன்......

# மாமா! மனசு இன்னிக்கு நல்லாஸ்லே!

சிங்கராசருக்கு கை குறுகுறுத்தது. இன்றைக்கு சிங்கராசரின் மருமகன் ராசசிங்கம் தன் வீட்டில் பார்ட்டி. மாமன்காரனை மரியாதை நிமித்தம் 'தண்ணிப் பார்ட்டிக்கு' அழைத்திருந்தான். சிங்கராசரும் உந்த வயது வேறுபாடில்லாமல் தண்ணி போட வந்திருந்தார். ஊரில் என்றால் மாமனும் மருமோனும் தண்ணியடிக்கிறது பிரச்சனை. திஸ் இஸ் கனடா பாருங்கோ. உந்த தலைமுறை இடைவெளி நெருக்கம்.

பார்ட்டி உச்சம் பிடித்த போது கோஷ்டி கானம் தொடங்க... சிங்கராசருக்கும் கொஞ்சம் ஏறியிருந்தது. தண்ணி உள்ளே போனதும் தான் அந்தக் காலத்தில் லவ் அடித்து கலியாணம் புரிந்த தங்கம்மா கொழும்பில் இருப்பது நினைவுக்கு வந்தது. 'இல்லாளுடன் காதல் மொழி பேச வேண்டும்' என்பதற்காகத் தான் சிங்கராசருக்கு கை குறுத்தது.

பொடியள் எல்லாம் வெளியில் தண்ணியடிக்க... சிங்கராசர் மெதுவாகப் போய் உள்ளே நின்று இலங்கைக்கு கோல் அடித்து தங்கம்மாவுடன் ஒரு இரண்டு மணித்தியாலம் விளாசி விட்டார். வயதான மனிசன் என்ற மரியாதை நிமித்தம் எதுவும் 'பாவிக்காமல்' இருந்த பெடியள் ஆளைக் காணேலை என்றதும் மனத்திருப்தியுடன் தங்கள் பாடு.. ஒரு ஒண்டரை மணித்தியாலம் தங்கம்மாவுடன் சல்லாபம் புரிந்த திருப்தியுடன் சிங்கராசர் வெளியில் வந்தார்.

மாதம் முடிந்ததும் பெல் கனடா பில் அனுப்பியதும் ராசசிங்கனுக்கு ஹார்ட் அட்டாக் வந்து விட்டது. வந்த எளியவங்கள் ஆரோ தான் அடிச்சுப் போட்டான் என்று திட்டிக் கொண்டவன். போனால் போகிறது என்று இலங்கைக்கு அடித்து விசாரித்தால் அது மாமி நின்ற வீடு...

மருமகனுக்கோ மாமனை என்ன செய்வது என்றே தெரியவில்லை. உமக்கு குடுக்கிறன் வேலை என்று கறுவிக் கொண்டான். நரி கொக்குக்கு பார்ட்டி வைத்த மாதிரி.. மாமாவும் ஒரு நாள் பார்ட்டி வைத்து எல்லாரையும் அழைத்தார். மாமா கொஞ்சம் வெறி ஏறியதும் தங்கம்மாவை நினைந்து புலம்பத் தொடங்க... ராசசிங்கன் சரியான தருணம் பார்த்து கொழும்பில் நிற்கும் தனது வருங்கால மனைவி வடிவுக்கரசியுடன் மாமாவின் புண்ணியத்தில் ஒரு மூன்று மணித்தியாலம் கனிமொழி பேசி தன் கணக்கைத் தீர்த்துக் கொண்டான். இப்போது மாமனும் மருமகனும் தங்கள் வீடுகளில் பார்ட்டி நடத்தினால் மற்றவரைக் கூப்பிடுவதில்லை என்று கேள்வி.

பென் சூரியன்

# பிறந்த நாள் வாழ்த்து

அன்பு மகளே!...
ஆண்டு ஒன்றை நீ
அவசரமாகக் கடந்துள்ளாய்!
முட்டிய வயிறும், முனகல் சத்தமுமாய்
கட்டிலில் கிடந்து உன் அம்மா
கதறிய காட்சியெல்லாம்
நேற்றுப் போல் எந்தன் நினைவில் இருக்கிறது...
உன் அப்பன்
உலகத்தை இன்னமும் படிக்காதவன்
நெஞ்சக் கருத்துக்களை
நேருக்கு நேர் சொல்லியதால்
சொந்தத்தில் சிலரையும்
சுற்றிவர நட்புக் கொண்ட பந்தத்தில் பலரையும்
பகையாக்கிக் கொண்டவன்!
எந்தக் கருத்தானாலும்
எதிர்க்கருத்தை முன்னெடுத்து
சொந்தக் கருத்தென்று சொல்லியதால்
சுகத்தைவிட
சோகத்தையே அதிகம் சுமந்து நிற்பவன்!
என் மகளே!
இளமை கடந்து நீ எழுகின்ற போதினிலே
இங்கு கனடாவில் எதுவும் நடக்கலாம்!
கறுப்புமல்லாத வெள்ளையுமல்லாத
ஒரு கலப்பு நிறத்தில் நீ கருத்தரித்த காரணத்தால்
உன் கலரைப் பார்த்தே
பல கதவுகள் மூடிடலாம்
நிறமும், இனமும் உன்னை நெருப்பாகச் சுடலாம்!
எந்த நெருப்பையும் நீ
எதிர்த்துச் சுட்டெரி!
எங்கு பெண்மைக்கு இன்னல் நடந்தாலும்
பொங்கி எழு
புதிய சூரியனைச் சுடர்விடு!

உன் அப்பன்
நிலா குகதாசன்

# குகதாசன் நிருஷி



நிலா குகதாசன் சிவசாந்தினி தம்பதிகளின் அன்புமகள் நிருஷி தனது
முதலாவது பிறந்த தினத்தை நாளை 26ம் திகதி
இலக்கம் 3440 பார்மசி அவனியூ, யுனிட் 17ல் உள்ள
ரேடியோ ஏசியா மண்டபத்தில் வெகுவிஞ்சையாகக் கொண்டாடுகிறுர்.

நிருஷியை அப்பா, அம்மா, கனடாவிலிருக்கும் அப்பம்மா, பெரியப்பா,
சித்தப்பாமார், அத்தைமார், மாமாமார், அனுஜன் அத்தான், சித்திமார், மாமிமார்,
அன்ரிமார், அங்கிள்மார், மற்றும் இலங்கையிலிருக்கும் அம்மம்மா, மாமா, மாமி,
சித்தி, டினேசன் அத்தான், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் ஒரு தமிழ்
மகளாகப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறுர்கள்.

# ஜேர்மனி

## தோல்விகளை எதிர்நோக்கும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி!

1994ம் ஆண்டு ஜேர்மனியை பொறுத்தவரை ஒரு தேர்தல் ஆண்டாகவே கருதப்படுகிறது. இந்த ஆண்டு ஜேர்மனியில் 18 தேர்தல்கள் நடக்க இருக்கின்றன. இவை அனைத்தின் உச்சக்கட்டமாகவே அக்ரோபர் மாதம் 16ம் திகதி ஜேர்மனியின் பொதுத்தேர்தல்களும் நடக்க இருக்கிறது. இந்தத் தேர்தல் தொடர்களின் ஆரம்பமாக ஜேர்மனியின் இரண்டாவது பெரிய மாநிலமான LOWER SAXONY யில் நடைபெற்ற தேர்தலில் ஜேர்மனியின் அதிபரான ஹெல்மட் கோலின் கட்சியாகிய கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சி தோல்வியடைந்து மாநில ஆட்சிப் பொறுப்பையும் இழந்துள்ளது. இந்தத் தோல்வி கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கு மட்டுமல்ல ஹெல்மட் கோலுக்குக் கிடைத்த தனிப்பட்ட தோல்வியாகவும் கருதப்படுகிறது. காரணம் சமீபத்தில் திரு.கோல் அளித்த பத்திரிகைப் பேட்டியொன்றில் கடந்த பல மாதங்களாக தமது கட்சி குறித்து ஜேர்மன் மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர் என்றும் அதனை அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் வெளிப்படுத்தின எனவும் குறிப்பிட்ட அவர், "ஆனல் சமீப வாரங்களாக மக்களின் அபிப்பிராயங்கள் கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கு சாதகமாகிக் கொண்டு வருகின்றன" எனவும் குறிப்பிட்டிருந்தார். இதுமட்டுமல்ல இந்த வடபகுதி மாநிலத்தில் வெற்றியை எப்படியாவது அடைந்து விடவேண்டும் என்பதற்காக கடுமையான பிரச்சாரத்திலும் ஈடுபட்டார். ஆனல் தேர்தல் முடிவுகள் அவரது கணிப்பீட்டையும் பொய்யாக்கியுள்ளது. பிரச்சாரத்தையும் தோல்வியடைய செய்துள்ளது.

கடுமையான மழையையும், சுழல்காற்றையும் மீறி இந்த மாநிலத்தின் மக்கள் தொகையான 5.9 மில்லியன் வாக்காளர்களில் 75% மானோர் இந்தத் தேர்தலில் வாக்களித்தனர். கிறீஸதவ ஜனநாயகக்கட்சிக்கு 37% மான வாக்குகளே கிடைத்தன. 1990ம் ஆண்டில் இம்மாநிலத்தில் கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சி 42% வாக்குகளைப் பெற்று மாநில ஆட்சியைக் கைப்பற்றியது. இம்முறை பெற்றிருக்கும் 37% மான வாக்குகள் கடந்த 35 வருடங்களில் இந்த கைத்தொழில் நகரத்தில் கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சி பெற்றிருக்கும் குறைந்த வாக்கு வீதமாகும்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் சமூக ஜனநாயகக் கட்சி 12 வருடகாலம் மாநில ஆட்சிப்பொறுப்பில் இருந்து 1990ம் ஆண்டு தோல்வியடைந்தது. முதல்வர் ஜெர்ஹார்ட் ஸ்குரோடரின் சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக்கட்சியும் இணைந்து ஆட்சியை முன்னர் அமைத்திருந்தனர். மனித உரிமைகள், மற்றும் சுற்றுப் புறச் சூழ்நிலைத் தூய்மையை வலியுறுத்தும் அமைப்பான பசுமைக்கட்சி இம்முறைத் தேர்தலில் 7% வாக்குகளைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இக்கட்சி முன்னரைவிட அதிக ஆசனங்களை பெற்றுள்ளது. திரு. ஸ்குரோடர் தலைமையிலான சமூக ஜனநாயகக் கட்சி 44% மான வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் தனித்து ஆட்சியமைக்கக் கூடிய நிலையையும் பெற்றுள்ளது. ஜேர்மன் அரசில் கிறீஸ்தவ ஜனநாயக கட்சியின் கூட்டுக் கட்சியாகிய சுதந்திர ஜனநாயகக் கட்சியும் சென்ற முறையை விட குறைவான வாக்குகளையே பெற்றுள்ளது. நான்கு வருடங்களுக்கு முன்னர் 6% வாக்குகளைப் பெற்ற இக்கட்சி இம்முறை 5% க்கும் குறைவான வாக்குகளைப் பெற்று மாநில சபையில் ஆசனங்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இக்கட்சியின் நீண்டகாலத்தலைவரும் முன்னள் வெளிவிவகார அமைச்சருமான ஹன்ஸ் டிரிச் ஹென்சர் தமது பதவியிலிருந்து 1991 ம் ஆண்டு விலகியும் கூட மக்களின் பார்வையில் கட்சி குறித்து எந்த மாற்றமும் இல்லை.

இந்தத் தேர்தல் சாதாரண ஒரு மாநிலத் தேர்தலாக கருதப்படவில்லை. இரண்டாவது பெரிய மாநிலத்தில் நடந்த தேர்தல் என்பது ஒரு காரணம். தொடர் தேர்தல்களில் முதலாவதாக நடந்தது என்பது அடுத்தக்காரணம். இந்தத் தேர்தல் முடிவுகள் 1982ம் ஆண்டிலிருந்து ஜேர்மனியை ஆட்சி செய்யும் கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சியையும் அதன் கூட்டுக் கட்சியான சுதந்திர ஜனநாயக கட்சியையும் தோல்வியை நோக் கியே நகர்த்தியுள்ளன. மீண்டும் மக்களாதரவைப் பெற்றுவரும் சமூக ஜனநாயகக் கட்சியுடன் கடுமையாகப் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. அனைத்துத் தரப்பினருக்குமே இந்தத் தேர்தலில் திருப்தியளிக்கக் கூடியது ஒரு விடயமே. தீவிர வலதுசாரிக் கட்சியான குடியரசுக்கட்சிக்கு 3.8% வாக்குகள் மட்டுமே கிடைத்து ஹனோவரில் அமைந்திருக்கும் இந்த மாநிலத்தின் பாராளுமன்றத்தில் எந்த ஒரு ஆசனத்தையும் பெறும் தகுதியை இழந்ததே.

இந்தத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் இம்மாநில முதல்வர் பதவியை ஏற்க இருக்கும் திரு.ஸ்குரோடர் ஒரு சட்டத்தரணியாவர். எதிர்வரும் அக்டோபர் பொதுத் தேர்தலில் ஜேர்மனியின் அதிபர் பதவிக்கு சமூக ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட முயன்றவர் ஆனல் அந்தமுயற்சியில் றைன்லாண்ட் பலற்றினேற் மாநிலத்தின் முதல்வரான திரு.ருடோல்வ் ஸ்கார்பிங்கிடம் தோல்வியடைந்தவர். இந்தத் தேர்தல்களில் திரு ருடோல்வ் ஸ்கார்பிங்கும் மிகக் கடுமையாக பிரச்சாரம் செய்தது குறிப்பிடத்தக்கது. Lower Saxony மாநிலத்தேர்தல் முடிவுகளையடுத்து திரு.ஸ்குரோடர் விடுத்திருக்கும் அறிக்கையில் ஸ்கார்பிங் ஜேர்மனியின் அதிபராக வருவதையே நான் விரும்புகிறேன். அதற்கான என் தரப்பு ஆதரவு அவருக்கு பூரணமாகக் கிடைக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதேசமயம் தோல்விக்கான பொறுப்புக்களை தாம் ஏற்றுக் கொள்வதாக கிறீஸ்தவ ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த 34 வயதுடைய வழக்கறிஞரான கிறிஸ்ரியன் வுல்வ் கூறியுள்ளார்.

இந்தத் தேர்தல் பிரச்சாரங்களின் போது அதிபர் ஹெல்மட் கோல் சமூக

**சுழலும் உலகம்**



தி. உமாகாந்தன்

ஜனநாயகக்கட்சி மற்றும் பசுமைக் கட்சிக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டாம் என மக்களைக் கோரினார். இதற்கு இவர் கூறிய காரணம் இந்தக் கூட்டணி இடதுசாரித்தன்மை வாய்ந்தது என்றும், நடைமுறைச் சாத்தியமற்ற கொள்கைகளைக் கொண்டது என்றும் கூறிய திரு. கோல் LOWERSAXONY யில் இந்தக் கூட்டணி பெறும் வெற்றி எதிர் வரும் பொதுத் தேர்தலிலும் வெற்றிபெற வழிசெய்யும் என எச்சரிக்கை விடுத்தார். ஆனால் வாக்காளர்கள் ஹெல்மட் கோலின் பிரச்சாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அதேசமயம் பசுமைக்கட்சிக்கும் சமூக ஜனநாயகக் கட்சிக்குமிடையிலான உறவு கூட சுமுகமாக இல்லை. முன்னாள் மேற்கு ஜேர்மனின் பசுமைக்கட்சி சமீபத்தில் கிழக்கு ஜேர்மனியின் கூட்டணி 90 கட்சியுடன் இணைந்து கொண்டது. கடந்த மாதம் இக்கட்சி நடத்திய தேசிய மகாநாட்டில் நேட்டோ என்றழைக்கப்படும் வடக்கு அத்திலாந்திக் கூட்டமைப்பு ஒப்பந்தத்திலிருந்து தாம் பதவிக்கு வந்தால் ஜேர்மன் இராணுவம் வெளியேறும் என அறிவித்துள்ளனர். அபிப்பிராய வாக்கெடுப்புக்களில் திரு. கோலை விட அதிக புள்ளிகளில் முன்னணியிலிருக்கும் சமூக ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஸ்கார்பிங் தேர்தலுக்கு முன்னர் பசுமைக்கட்சியுடனான ஒரு கூட்டணி பற்றி பேச மறுத்துள்ளார். அதுமட்டுமல்ல தமது கட்சி 'ஒரு அரசை நடத்த விரும்புகிறதேயொழிய ஒரு அரசின் பங்காக இருக்க விரும்பவில்லை' எனவும் கூறியுள்ளார். ஜேர்மனியில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை இப்போது 4 மில்லியனை அண்மித்துள்ளது. இது ஜேர்மனியின் பல்வேறுபட்ட சமூகப்பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணமாகியுள்ளது. ஆனால் ஜேர்மனியின் பொருளாதார நிபுணரும் கீழ் உலகப் பொருளாதாரக் கல்லூரியில் தலைவருமான ஹோரஸ்ற் சியேற் சமீபத்தில் வெளியிட்ட நூலின்படி ஜேர்மனியில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 6 மில்லியன். அதுமட்டுமல்ல எதிர்வரும் வருடங்களில் ஏற்படும் உற்பத்தி வளர்ச்சியோ அல்லது பொருளாதாரச் சீரடைவோ இந்தப் பிரச்சனையை தீர்க்காது எனவும் குறிப்பிடுகிறார். இந்நிலையில் இந்தத் தேர்தல் வருடம் ஆளும் கிறீஸ்தவ ஜனநாயகக்கட்சிக்கு ஒரு தோல்வி வருடமாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆஸ்கார் விருது: விளம்பரமா? சமாளிப்பா?

## பட்டாபி

ஒஸ்கார் விருதுகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. வழமை போல எதிர்பார்த்தபடியும் எதிர்பார்க்காதபடியும் இன்ப அதிர்ச்சிகள்— நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த இயக்குனர் ஸ்டீவன் ஸ்பீல்பேர்க்கிற்கு தற்போது சிறந்த இயக்குனருக்கான பரிசு கிடைத்திருக்கிறது. முன்பு The Color Purple என்ற நிறவெறி பற்றிய படத்திற்கு (அதில் நாயகியாக நடித்த வூப்பி கோல்பேர்க் தான் இம்முறை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியிருந்தார்) இவருக்கு பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் நீண்ட காலத்தின் பின்னர் தான் தற்போது இவருக்கு Schindler's list என்ற நாஜிகளின் கொலைகளுக்கு மத்தியில் ஆயிரம் யூதர்களைக் காப்பாற்றிய ஜேர்மானியர் பற்றி படத்திற்கு பரிசு கிடைத்திருக்கிறது. இந்தப் படமே சிறந்த படமாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இயக்குனர் ஸ்பீல்பேர்க்கின் படங்கள் வசூலில் சாதனை புரிந்திருக்கின்றன. E.T, Indiana Jones, இந்த வருடம் வெளிவந்த ஜுராஸிக் பார்க், சுறு பற்றிய ஜோஸ் போன்ற படங்கள் ஒவ்வொன்றும் மற்றதின் சாதனையை முறியடித்திருந்தன. ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் மொத்தம் 12 விருதுகளுக்கு பிரேரிக்கப்பட்டிருந்தது. நான்கு விருதுகளைப் பெற்றது. ஜுராசிக் பார்க் கூட 3 விருதுகளைப் பெற்றுள்ளது.

சிறந்த நடிகராக பிலடெல்பியா என்ற படத்தில் எய்ட்ஸ் நோயாளியாக நடித்த ரொம் ஹான்க்ஸிற்கு கிடைத்திருக்கிறது. சிறந்த நடிகையாக த பியானோ படத்தில் நடித்த ஹோலி ஹன்ரருக்கு கிடைத்திருக்கிறது. ஒளிப்பதிவுக்கான பரிசு ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் படத்திற்கே கிடைத்திருக்கிறது. சிறந்த வெளிநாட்டுப் படமாக ஸ்பானியப் படமான பெல் எப்போக் என்ற படத்திற்கு கிடைத்திருக்கிறது.

சிறந்த குணசித்திர நடிகைக்கான பரிசு அன்னா பாக்கின் என்ற பதினொரு வயதுக் கனடியச் சிறுமிக்கு த பியானோ படத்திற்காக கிடைத்திருக்கிறது. முன்பு டாட்டும் ஓ நீல் என்ற நடிகை பத்து வயதில் 1973ல் பரிசு பெற்றதன் பின்னர் ஆஸ்கார் பரிசு பெற்ற வயது குறைந்த நடிகை இவரே. நடிப்பில் முன் அனுபவம் எதுவும் இல்லாத இவர் இனிமேலும் நடிப்பதற்கான நோக்கம் இல்லை என்கிறார். தன்னுடைய தாயாரையும் பாடசாலை சினேகிதிகளையும் பிரிந்து இருக்க முடிவதில்லை. அத்துடன் வளர்ந்த பின்பும் நடிப்பதாயிருந்தால் மயிரை பச்சை நிறச் சாயமுட்ட வேண்டும், குட்டையாக வெட்ட வேண்டும் என்கிறார்.

★ ★ ★

ஆனால் ஆஸ்கார் விருதுகள் திறமைக்காக என்பதை விளம்பரத்துக்காக என்பது கூட ஒரு வகையில் உண்மை தான். பல திறமைசாலிகள் விருது கிடைக்காமலேயே மறைந்து போனார்கள். இயக்குனர் அல்பிரட் ஹிச்கொக், நடிகர் கரி கிரான்ட், நடிகை கிரேட்டா கார்போ போன்றோர் பரிசு பெறவேயில்லை. பலர் தங்கள் திறமையை வெளிப்படுத்திய படங்களுக்கு அல்லாமல் மற்றப் படங்களுக்கு பெற்றிருக்கிறார்கள்.

சிறந்த படமான சிற்றிசன் கேன் படம் 1941 இல் பரிசு வழங்கலின் போது கூச்சலிட்டு கேலிக்குள்ளாக்கப்பட்டது.

ஆஸ்கார் விருதுகள் அங்கவீனர்களாக நடித்தவர்களுக்கு கொடுக்கப்படுவது வழமை. சென்ற வருடம் அல் பசினோ கண் தெரியாதவராக நடித்ததற்காக பரிசு கொடுக்கப்பட்டது. ஆனால் பல தடவைகள் இவர் பரிசு பெறமல் ஏமாந்ததற்கான சமாளிப்பு இது. இம்முறையும் சிறந்த நடிகையாகப் பரிசு பெற்ற ஹோலி ஹண்டர் ஊமையாக நடித்த படத்திற்கே கிடைத்திருக்கிறது. கிளின்ட் ஈஸ்வூட்டிற்கு சென்ற வருடம் Unforgiven படத்திற்காக கொடுக்கப்பட்டது கூட ஒரு வகை சமாளிப்பு தான். இதுவரையும் அவர் புறக்கணிக்கப்பட்டிருந்தார். இப்படி சமாளிக்கப்பட்டவர்களில் மாலன் பிராண்டோ, ஹம்ப்றி போகாட், போல் நியூமன், ஹென்றி பொன்டா, டஸ்ரின் ஹொப்மான் போன்றோரின் சிறந்த படங்களுக்கு வழங்காமல் பின்னர் வழங்கிச் சமாளிக்கப்பட்டது.

உண்மையில் அக்கடமியின் உறுப்பினர்களான சிலரே இந்தப் படங்களைத் தெரிவு செய்பவர்கள். அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப தெரிவு செய்யப்படும் படங்களை கோடிக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் பார்க்கக் காரணம் இதற்கு வழங்கப்படுகின்ற விளம்பரமே.

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னுன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார
தமிழாக்கம்: செ. லோகநாதன்

(தொடர்ச்சி)
உண்மையிலேயே எமது சமுதாயத்தில் வெடித்துக்கொண்டிருந்தது இச் சக்தியேயாகும். கூடுதலாக எதிர்பார்ப்புக்கள் தகர்ந்து போயிருந்ததும் இவர்களேயாகும். தமது படிப்புக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காத போது இளைஞர்கள் மத்தியிலே கோபத்தீ பற்றி எரிவதற்கு அந்நிலமை பெரும் துணையாக அமைந்தது.

வேலை இல்லாத் திண்டாட்டத்தில் மேலும் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில் 85/86 புள்ளிவிபரங்களின்படி வேலை அற்றோரில் 67.5% வீதமானோர் கிராமப் புறத்தையும் 28.1% வீதமனோர் நகர்புறத்தையும் 4.4% வீதமானோர் தோட்டப் பகுதியையும் சார்ந்தவர்கள் என்பதாகும். வேலை இல்லாத் திண்டாட்டம் காரணமாக கூடுதலாக அமுக்கங்களுக்கு உள்ளாகியிருந்தது கிராமப்புற இளைஞர்களே என்பதை இப் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுகின்றது.

உண்மையான தொழில் பிரச்சனை புள்ளிவிபரங்களில் காட்டப்படுவதையும் விட மிகவும் ஆழமானது. சேவையில் ஈடுபட்டுள்ளோரைப் பற்றிப் பேசும் போது தொழில்களில் சேர்ந்துகொள்வோர் கூட்டப்படுகின்றனரே தவிர தொழில்களை இழப்போர் கழிக்கப்படுவதில்லை. தொழில் அற்றோர் பற்றி சரியான முறையில் கணக்கெடுப்பதாயின் தொழிலில் இருந்து விலக்கப்படுபவர்களது தொகையையும் அதனுடன் சேர்க்க வேண்டும்.

1977 87 காலகட்டத்தில் சுமார் 2500 தொழில் அலகுகளை மூட நேரிட்டது. கைத்தறி நெசவுத் தொழிற்சாலை ஏறத்தாழ முற்றுகவே மூடப்பட்டுள்ளது. அரசாங்க துறையிலும் பல நிறுவனங்கள், திணைக்களங்கள் கருத் திட்டங்கள் மூடப்பட்டுள்ளன. வெள்ளவத்தை நெசவு ஆலையும் சுமார் 1200 அரசாங்க நெசவாலைகளும் மூடப்பட்டுள்ளன. தனியார் துறையைச் சார்ந்த பல தொழிற்சாலைகள் மூடப்பட்டதோடு சுதந்திர வர்த்தக வலயத்திலும் 10 தொழிற்சாலைகளை மூட நேர்ந்தது. இவை அனைத்தும் காரணமாக இக்காலகட்டத்தில் தொழில் செய்தவர்களில் மூன்று நான்கு இலட்சம் பேர் தொழிலை இழந்தனர்.

கைத்தொழில் துறைகளைப் போன்றே விவசாயத்துறையிலும் வீழ்ச்சியையே காண முடிந்தது. திறந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக கிராமப்புறங்களில் தாக்கு பிடித்து வந்த விவசாயத்திற்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. விவசாயிகளை அழித்தொழிக்கும் செயல்கள் ஆழமாக இடம் பெற்றன. அழிவுறும் விவசாயிகளை இணைத்துக் கொள்ளத் தக்க அளவில் தொழில் துறைகளும் வளரவில்லை. இதனுல் புள்ளிவிபரங்களில் உள்ளடக்கப்படாத தொழிலை இழந்த பெருந்தொகையானோர் கிராமப் புறங்களிலும் உருவாகினர் எனக் கூற முடியும்.

இவ் அனைத்தினதும் பெறுபேறாக வேலை அற்றோர் தொகை உத்தியோக பூர்வ புள்ளிவிபரங்களில் காண்பிக்கப்படுவதையும் விட வெகுவாக அதிகரித்தது. பொதுவாக கணக்கு பார்த்தால் வேலை அற்றோர் தொகை குறைந்த பட்சம் உழைப்புப் படையில் 25% வீதத்திற்கும் அதிகமாக இருக்கும் எனக் கூறலாம்.

ஒருபுறம் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் போது மறுபுறம் நாட்டின் பணவீக்க நிலமையும் அதிகரித்ததால் வாழ்க்கை என்பது ஒரு பெரும் பிரச்சனையாக மாறியது. 1977 க்குப் பின்னரான காலத்தில் மக்களின் கைகளில் பணப்புழக்கம் அதற்கு முன்னைய காலத்தையும் விட மிக அதிகமான போதிலும் அதன் மூலம் விலைக்கு வாங்கக் கூடிய பண்டங்களின் அளவு அக் காலத்துடன் ஒப்பிடும் போது மிகவும் சொற்பமாகும். கைக்கு கிடைத்த பணம் கூடியது என்பதற்காக அப்பணத்தால் வாங்கக் கூடிய பண்டங்களின் அளவு அதிகரிக்கவில்லை. இதனுல் வருமானத்துக்கும் செலவுக்கும் இடையே பாரதூரமான வேறுபாடே நிலவியது. கடந்த 10 15 வருட காலத்துள் கூலி உழைப்பாளிகளும் விவசாயிகளும் தமது வருமானத்தை அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக செலவு செய்த பின்னர் கையில் எதுவுமே மிஞ்சவில்லை. சில சந்தர்ப்பங்களில் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பதற்குக் கூட கிடைக்கும் சம்பளம் போதியதாக இருக்கவில்லை.

நிலவும் பொருளாதர அபிவிருத்தி வேகத்தையும் விட கூடுதலான வேகத்தில் பணம் வழங்கல் அதிகரிக்குமாயின் நாட்டில் உள்ள பணத்தின் அளவு பண்டங்களின் அளவையும் விட அதிகரிக்கும். பணத்தின் தொகை அதிகரிக்கும் போது தேசிய பண்டங்களுக்கான கேள்வி அதிகரிப்பதோடு கேள்விக்கு ஏற்ப பண்ட உற்பத்தி இடம் பெறுவிடின் பண்டங்களின் விலை துரிதமாக அதிகரிக்கும். இவ்வாறு தொடர்ச்சியாக இடம் பெறும் விலை அதிகரிப்பே பணவீக்கமாகும். உத்தியோக பூர்வ புள்ளிவிபரங்களுக்கு ஏற்ப நாட்டின் பணவீக்க நிலமையை எட்டாவது அட்டவணையில் காணலாம்.

*அட்டவணை ;8*

| 60-69 | 70-76 | 77-81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2.0 | 5.9 | 14.0 | 11.0 | 14.0 | 16.0 | 2.0 | 8.0 | 7.9 | 14.0 |

*தரவை: இலங்கையில் சமூக பொருளாதார போக்கும் முறையும் என்னும் அறிக்கையிலிருந்து*

இப்புள்ளிவிபர அட்டவணையின்படி 1977ம் ஆண்டுக்குப் பின்னரே பணவீக்கம் மிகவும் அதிகரித்துள்ளது. ஆயினும் 85 முதல் 87 வரையான காலகட்டத்தில் வீழ்ச்சியை காட்டுகின்றது. ஆனுல் இப்புள்ளிவிபரங்கள் தவறற்றவை அல்ல என்பதே அனேக பொருளியல் விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

தரவைகளின்படி இலங்கையில் பணவீக்கம் 20% க்கும் இடையே அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருந்தது.

பணவீக்க நிலைமையை நிர்ணயிப்பதற்கு இன்றுள்ள மிகச் சிறந்த அளவு கோல் கொழும்பு நுகர்வோர் விலை அட்டவணையாகும்.

1952 ஐ அடிப்படை ஆண்டாக கருதி தயாரிக்கப்பட்டுள்ள இவ் அட்டவணை இன்றைய உண்மையான நிலைமையை சரியான முறையில் பிரதிபலிக்காவிட்டாலும் 1952 விலைகளின்படி கூட பணவீக்க வேகம் அதிகரித்துள்ள முறையை இவ் அட்டவணையை பரிசீலனை செய்வதன் மூலம் நாம் காணலாம். இது தொடர்பாக

**அட்டவணை ;9**

| | |
|---|---|
| 1952 | 100.0 |
| 1960 | 103.5 |
| 1970 | 138.2 |
| 1980 | 318.2 |
| 1989 | 820.2 |
| 1990 | 1008.2 |

தரவை; இலங்கை மத்திய வங்கி அறிக்கைகளில் இருந்து

அட்டவணை 9 ஐப் பார்க்கவும்.

இவ் அட்டவணையில் உள்ள தரவையின்படி கூட வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1952 முதல் 1960 வரை 3.5 வீதத்தாலும் 1970 முதல் 1980 வரை 130.2 வீதத்தாலும் 1980 தொடக்கம் 1989 வரை வரை 160.9 வீதத்தாலும் அதிகரித்துள்ளதை நாம் காணலாம். வருடாந்த பொது அதிகரிப்பு வேகத்தை கவனத்தில் கொண்டால் 1952 முதல் 60 வரை 0.4%. 1960 முதல் 70 வரை 16. 1% 89 முதல் 90 வரை 21.4% ஆகும். இவ் அட்டவணையின் தரவை இவ் வாறாயினும் உண்மையான அதிகரிப்பு இதை விட அதிகம் என்பதை நிச்சயமாக கூறமுடியும்.

இவ்வாறாக வாழ்க்கைச் செலவு வேகமாக உயர்ந்து பண வீக்க நிலைமை அதிகரிக்கும் போது மறு புறம் மெய்மை வருமானம் மிகவும் மெதுவாகவே அதிகரித்தது. இதனை இங்கு 10 வது அட்டவணையில் காணலாம்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதை விட மிகக் குறைந்த அதிகரிப்பு வேகத்திலேயே தலா வீத வருமானம் கூடியுள்ளது என்பதை இப் புள்ளி

**அட்டவணை;10**

| | |
|---|---|
| 77-80 | 41.1 |
| 80-82 | 6.3 |
| 82-89 | 4.3 |
| 89-90 | 3.4 |

புள்ளிவிபர தரவை; இலங்கை மத்திய வங்கி அறிக்கை

விபர தரவை காட்டுகிறது. வருமானத்தைவிட செலவு மிகவும் மட்டத்தில் இருக்கும் போது பொருளாதார அழுக்கம் எத்தகையாக இருக்கும் என்பதை ஒருவரால் எண்ணிக்கொள்ள முடியும். ஒரு புறம் உழைப்பாளிகளில் மிகப் பெரும்பான்மையினருக்கு குடும்பத்தின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வது பெரும் பிரச்சினையாக இருந்தது. பகுதி நேர தொழிலில் ஈடுபட்டவர்களதும் வேலை அற்றவர்களதும் நிலைமை மிகவும் பாரதூரமான தாகவிருந்தது. வருமான வேறுபாடு உக்கிரமடையும்போது நிலைமை மேலும் மோசமாக மாறியது. 1973 க்கு பின்னரான காலம் வருமான வேறுபாடு கூர்மை அடைந்ததையே காட்டுகிறது. வருமானம் பெறுபவர்களை 10% வீது குழுக்களாக பகுத்து ஒவ்வொரு குழுக்களும் பெற்ற வருமானத்தை 11 வது அட்டவணையில் காணலாம்.

11 வது அட்டவணை

இப்புள்ளிவிபர தரவைகளை பரிசீலனை செய்வதன் மூலம் ஆகக் கூடுதலான வருமானத்தைப் பெறும் 10% குழுவினருக்குத் தவிர ஏனைய அனைத்துக் குழுக்களதும் வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளதை விளங்கிக் கொள்ளமுடியும். செல்வந்தர்கள் வரவர செல்வத்தை அடைந்ததோடு வறியவர்கள் மென்மேலும் வறுமை

**அட்டவணை ;11**

| குழு | | 1973 | 78/79 | 81/82 | 85/86 |
|---|---|---|---|---|---|
| 1 ஆகக்குறைந்த வருமானம் பெறும் 10% | | 1.8 | 1.2 | 1.0 | 0.4 |
| 2 | 10% | 3.8 | 2.7 | 2.5 | 1.1 |
| 3 | 10% | 4.4 | 3.6 | 3.5 | 2.0 |
| 4 | 10% | 5.7 | 4.8 | 4.6 | 3.6 |
| 5 | 10% | 7.1 | 5.9 | 5.8 | 4.9 |
| 6 | 10% | 8.6 | 7.3 | 6.9 | 6.8 |
| 7 | 10% | 10.6 | 9.1 | 8.6 | 8.1 |
| 8 | 10% | 12.7 | 11.2 | 10.6 | 10.1 |
| 9 | 10% | 15.9 | 15.3 | 14.8 | 12.7 |
| 10 (ஆக கூடுதலான வருமானம் பெறும் 10% | | 30.0 | 39.1 | 41.7 | 49.3 |

புள்ளி விபர தரவை இலங்கை மத்திய வங்கியின் நுகர்வு நிதி அறிக்கை உழைப்புப்படையும் சமூக பொருளாதார ஆய்வும் 1985/86

அடைந்ததே இதன் மூலம் தெளிவாகின்றது. 85/86 காலத்தில் நாட்டு வருமானத்தின் 49.3% த்தை தமதாக்கிக்கொண்டது ஆகக் கூடுதலான வருமானத்தை பெறும் செல்வந்தர் 10% வீதத்தினராகும். ஏனைய வருமானம் பெறும் 90 வீதத்தினர் நாட்டு வருமானத்தில் 50.7 வீதத்தையே பெற்றனர். இதனை மேலும் அட்டவணை 12 ல் காட்டப்பட்டவாறு பகுத்தால் வருமான வேறுபாட்டை இவ்வாறு காணலாம்.

**அட்டவணை 12**

| வருமானம் பெறுபவர்களில் | 1981 | 1985/86 |
|---|---|---|
| வறியவர்கள் 40% | 16.3 | 7.11 |
| கீழ்தட்டு மத்தியதரம் 20% | 13.9 | 11.7 |
| மேல்தட்டு மத்திய தரம் 20% | 22.3 | 19.2 |
| கீழ்தட்டு செல்வந்தர் 10% | 13.7 | 12.7 |
| மேல்தட்டு செல்வந்தர் 10% | 33.8 | 49.3 |

புள்ளிவிபரம்; உழைப்பும் படையும் சமூக பொருளாதார ஆய்வும் 85/86

# மாறுதல் பெறுவதே மரபு

## சுபைர் இளங்கீரன்

பண்டிதர் குழுவைச் சேர்ந்த அன்பர் ஒருவர் மரபு பற்றிய தமது விவாதக் கட்டுரையில் பின்வரும் தோரணையில் எழுதினார். "இன்னும் சிறிது காலஞ் செல்ல, பசுக்கள் புல்லைத் தின்றார்கள். அவர்கள் நடந்து சென்றன. கோழி கூவின. ஆந்தைகள் அலறியது. அவள் உணவருந்தினான். அவன் ஓடினாள். ஆட்டுக் கன்று பசு குட்டி என்றெல்லாம் வியப்படையத் தேவையில்லை."

இது கிறுக்குத்தனமானதாகும் எழுத்தாளர்களை மிகவும் மோசமாக வேண்டுமென்றே இழிவுபடுத்துவதாகும். வருங்கால இலக்கியத்தின் மீது வேண்டுமென்றே களங்கத்தைக் கற்பிக்க முயற்சிக்கும் குருட்டுத்தனமான அபிப்பிராயமாகும். வரட்டுத்தனமான கற்பனையாகும்.

தமிழ் இலக்கணத்தின் அடிப்படை விதிகளையும் அதன் மரபுகளையும் சிருஷ்டி எழுத்தாளர்கள் என்றுமே மீறியதில்லை. மீறவும் மாட்டார்கள். மீறவும் கூடாது. இந்த எண்ணமே அவர்களுக்கு இல்லை. எழுத்தாளர்கள் மட்டுமென்ன, எழுதப் படிக்கத் தெரிந்த சாதாரணமானவர்கள் கூட இலக்கணத்தின் அடிப்படை விதிகளையும் அதன் மரபுகளையும் ஒட்டித்தான் எழுத வேண்டும். இதில் கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. எனவே, அன்பரின் அர்த்தமற்ற, குருட்டுத்தனமான, மலடு தட்டிய "தீர்க்கதரிசனம்" எதிர்காலத்தில் நிச்சயம் நடைபெறப் போவதில்லை.

ஓரிரு எழுத்தாளர்கள் சில பொழுதில் பிழைபட எழுதுகின்றனர் என்பதை மறுக்கவில்லை. மறைக்கவுமில்லை. இப்பிழைகள் பாரதூரமானவையல்ல, கவனக் குறைவினால் ஏற்படும் பிழைகள். இதனால் எழுத்தாளர் அனைவருமே பிழைபட எழுதுகின்றனர் என்றும், இவர்களின் படைப்புக்கள் இலக்கியங்களல்ல என்றும் கூறுவது சரியல்ல. பாராமுகப்படுத்தக் கூடிய இவ்வழுவுக்காகப் படைப்பு இலக்கியம், இலக்கியம் அல்ல என்று வாதாடுவது, குழந்தை காலில் உள்ள சிரங்குக்காக அது குழந்தையே அல்ல என்று வாதாடுவதை ஒக்கும். சிரங்கை மாற்றுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, குழந்தையை குப்பைத் தொட்டிக்குள் எறிந்து விட வேண்டுமென்று சொல்வோரை என்ன பெயரிட்டு அழைப்பது?

சொற்கள் என்பன உணர்ச்சிகளையும், கருத்துக்களையும், பொருள்களையும் வெளியிடும் சாதனமாகும். ஓர் இலக்கியத்தில் ஆசிரியரின் உணர்ச்சிகளும், கருத்துக்களும் அவர் கூறும் பொருள்களும் மயக்கமோ, சிதைவோ இன்றி தெளிவாகவும், முழுமையாகவும் வெளியிட வேண்டுமானால், சாதாரண மக்களும் எளிதில் விளங்கிக் கொள்ளத்தக்க முறையில் இருக்க வேண்டுமானால் சொற்களும் அம்முறையில் அமைதல் வேண்டும். இதைப் பற்றிப் பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்:

"தமிழ் வசனநடை இப்போதுதான் பிறந்து பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். அதனால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எழுதினாலும் வார்த்தை, சொல்கிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது– கம்பர் கவிதைக்கு சொல்லியது போலவே தெளிவு, ஒளி தன்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாயிருக்க வேண்டும்." (பாரதி நூல்கள் பக்கம் 392)

பாரதியார் சொல்லியது போலவே எழுதியும் காட்டினார். தம் கருத்தை மக்களிடத்தில் பரவச் செய்வதிலும், அவர்கள் மனதில் பதியச் செய்வதிலும் உணர்ச்சியைத் தூண்டுவதிலும் பாரதியார் கண்ட வெற்றியின் ரகசியம் இதுதான். ஆனால் பாரதியாருக்கு முன்பே வேதநாயகம் பிள்ளையும், ராஜமய்யரும், மாதவய்யாவும் தமது நாவல்களில் பேச்சுவழக்கை ஒட்டிய நடையைக் கையாண்டு வெற்றியும் பெற்றனர். உரைநடையிலான சிருஷ்டி இலக்கியத்தில் அந்நாவல்களும், அவற்றின் நடையும் ஒரு சகாப்பத்தைத் தொடங்கி வைத்தன என்பதை இலக்கிய வரலாறு தெரிந்தவர்கள் ஒப்புக்கொள்வர்.

இவர்களையும் பாரதியாரையும் தொடர்ந்து திரு. வி.க பண்டித வடிவத்துள் பேச்சு வழக்கைப் புகுத்தித் தமிழிற் புதுமை செய்தார் அக்காலத்து பண்டிதர்களின் கடினமான நடையை படித்துச் சுவைக்கவும், பொருளறிந்து கொள்ளவும் வில்லங்கப்பட்ட சாதாரண மக்கள் திரு.வி.க.வின் எழுத்தைப் படித்துச் சுவைத்தனர். பொருளறிந்து உணர்ச்சி கொண்டனர் தமிழுக்கு பெருந்தொண்டாற்றிய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் ஆரம்பத்தில் பண்டித நடையைக் கையாண்டார். ஆனால் அந்நடையின் மூலம் தான் சொல்ல நினைத்ததை மக்களுக்கு விளங்க வைக்க முடியாது போய்விட்டது என்பதை அனுபவத்தினால் தெரிந்து, பின்னர் பேச்சு வழக்கை ஒட்டிய எளிய நடையில்

*முதுபெரும் எழுத்தாளரான சுபைர் இளங்கீரன் அவர்களால் 1962ம் ஆண்டு ஜனவரி மாதம் 19,21,23,25ம் திகதிகளில் தினகரன் பத்திரிகையில் எழுதப்பட்ட இக்கட்டுரை 1993 மே மாதம் வெளியிடப்பட்ட சுபைர் இளங்கீரனின் "தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும்" என்னும் தொகுப்பு நூலில் மறு பிரசுரம் செய்யப்பட்டது. இந்நூலுக்கு தான் எழுதிய முன்னுரையில் சுபைர் இளங்கீரன் இவ்வாறு கூறுகிறார் "இந் நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் அனைத்தும் முப்பது வருடங்களுக்கு முன் ஈழத்து தமிழ் இலக்கிய அரங்கில் சர்ச்சைக்குள்ளான விஷயங்களையும் படைப்பிலக்கியங்களைப் பற்றிய சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் எடுத்துக் காட்டுவன இன்றைய தலை முறை எழுத்தாளர்களுக்கு இவை ஒரு வகையில் ஆதர்சமாகவும் அமையலாம்."*

*இளம் எழுத்தாளர்களுக்கும் இவ்விடயங்கள் பரவலாகச் சென்றடைய வேண்டும் என்னும் நோக்குடனேயே தாயகமும் இதனை மறுபிரசுரம் செய்கிறது.*

எழுதினுர். அதில் வெற்றியும் கண்டார்.

இவர்களைப் போலவே, வ.ரா. கல்கி, புதுமைப்பித்தன் ஆகியோரும் பேச்சு வழக்கை ஒட்டிய நடையைக் கையாண்டு பிரமிக்கத்தக்க வெற்றியைக் கண்டனர். இவர்களின் எழுதுகோலில் பேச்சு வழக்குப் புதிய அழகும், பொலிவும், சுவையும் கம்பீரமும் பெற்று மிளிர்ந்தது. சிறப்பாகப் புதுமைப்பித்தன் வியத்தகுமுறையில் இதைச் சாதித்தார். இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.வி.செல்வநாயகம் புதுமைப் பித்தனின் நடையைப் பற்றிய பின்வருமாறு குறிப்பிடுகிறுர்.

"தமிழிலுள்ள சிறுகதை எழுததாளர்களுள்ளே தன்னிகரில்லாத தலைவனுக விளங்கிய புதுமைப்பித்தன் கையாண்ட உரைநடை தமிழ் மொழியில் முன் காணப்படாத ஒரு புதிய நடையாகும். சாதாரண சொற்களைக் கொண்டு தம்முடைய விசித்திரமான மனேபாவங்களையும், புதிய கருத்துக்களையும் இலகுவாகவும், படிப்போர் மனதிலே தெளிவாகப் பதியக்கூடியதாகவும் கூறிவிடுகின்றுர். அவருடைய எண்ணக் கருத்துக்களுக்கு ஏற்பத் தமிழ் மொழி "நெளிந்து வளைந்து" கொடுப்பதைப் பார்க்கும்போது தமிழ் மொழிக்கு உள்ள ஆற்றல் எத்தகையது என்பதை நாம் காண முடிகிறது." (தமிழிலக்கிய வரலாறு பக்கம் 222)

எனவே, தமிழின் ஆற்றலைப் புதுமைப்பித்தன் போன்ற சிருஷ்டி எழுத்தாளர்கள்தான் காட்டுகின்றனரே தவிர "சொல் மரபு" என்று கூறி ஒரு வரம்புக்குள் நின்று "அம்மானை ஆடிய, ஆடுகிற" பண்டிதர்களல்ல.

இன்றைய எழுத்தாளர்கள் மட்டுமல்ல, இவர்களின் முந்திய தலைமுறையினரே பேச்சு வழக்கை பழகு தமிழை எழுத்தில் கொண்டுவந்து விட்டனர். இவ்வாறு கொண்டு வந்துவிட்டதன் மூலம் தமிழும், அதன் இலக்கியமும் மேலும் வளர்ந்திருக்கின்றனவே தவிர, மலடு தட்டிப் போகவில்லை. பாரதியார் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் பேச்சு வழக்கை ஒட்டிய உரைநடை மேலும் எளிமையும், புதுமையும், அழகும் பெற்று வருகின்றன. இனி பாரதியார் காலத்திற்கு முன்னர் தோன்றிய இலக்கியங்களும் பேச்சுவழக்கை புறக்கணிக்கவில்லை என்பது நினைவில் கொள்ளத் தக்கது.

பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் எழுந்த பக்தி இலக்கியங்களில் அன்றிருந்த பேச்சுவழக்கை ஒட்டிய சொற்பிரயோகங்கள் மலிந்து கிடைப்பதைப் பரக்கக் காணலாம். சங்ககாலத் தமிழ் நடைக்கும் இவ்விலக்கியங்களில் ஆளப்பட்டிருக்கும் தமிழ் நடைக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டுணர்ந்தாலே இவ்வுண்மை தெரிந்துவிடும். பொதுமக்களிடத்தில் தமது கருத்தையும், உணர்வையும், குறிக்கோளையும் பரவச் செய்வதற்கும், பதியச் செய்வதற்கும் அவர்களின் மொழியை நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது பக்தி இலக்கியங்களில் கையாண்டனர்.

இலக்கியம் என்பது இதயத்தின் குரல் என்கிறபொழுதில் அலக்குரல் வாழ்க்கையினின்றும் தோன்றுவது. அது வாழ்க்கையின் குரல் என்பதையும் அதனைக் கலைப் பண்புடன் காட்டும் எழுத்தோவியம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. இலக்கியம் நாவலாக, சிறுகதையாக, நாடகமாக இருந்தால் அதில் வரும் பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் எல்லாம் இயற்கையாகவும், யதார்த்தத்திற்கு முரணில்லாமலும் அமைதல் வேண்டும். எனவே, பாத்திரங்களின் குணப்போக்குகளையும், இயல்புகளையும், அவற்றின் அப்பாத்திரங்களை உயிர்த்துடிப்புடன் உலவவிட வேண்டுமானுல் அவற்றின் சொந்த மொழியை உபயோகிப்பது இன்றியமையாதாகும். இதன்முதலம் அப்பாத்திரங்கள் எப்பகுதியைச் சேர்ந்தன, எவ்வித சூழலில் வளர்ந்தன, வாழ்கின்றன என்பதையும் துல்லியமாகக் கண்டு கொள்ளமுடியும்.

இன்றைய சிருஷ்டி எழுத்தாளர்கள் பாத்திரங்களின் உரையாடலில் கொச்சையை உபயோகித்த போதிலும்,அதன் சாட்டில், பேசுவன எல்லாவற்றையுமோ அல்லது நாகரிகத்திற்குப் புறம்பான அநாகரிகமான, உச்சரிக்கப் கூசுகின்ற, ஆபாசமான கொச்சையையோ உபயோகிப்பதில்லை. மேலும் தமது சொந்த நடையில் கொச்சையைப் புகுத்துவதில்லை.

## கறை படிந்த கைகள்..

நினைக்கவில்லையா?
ஹிகோ: இல்லை
ஒல்கா: அப்ப நீ என்ன நினைத்தாய்
ஹிகோ: எனது கடந்த காலத்தில் நான் என்ன செய்தேன் என நான் நினைத்தேன். நான் ஏன் அதை செய்தேன் என விளங்கிக் கொள்ள முயன்றேன்.
ஒல்கா: உன்னுல் விளங்கிக் கொள்ள முடிந்ததா? (ஹிகோ மீண்டும் தனது தோளை உலுக்கிக் கொள்கின்றுன்) எப்படி அந்த சம்பவம் நடந்தது? யசீகாதான் அச்சம்பவத்திற்கு அடிப்படைக் காரணம் என்பது உண்மையா?
ஹிகோ: ஆம்
ஒல்கா: அப்படியானுல் அதற்குக் காரணம் பொறுமை
ஹிகோ: எனக்குத் தெரியாது . அதுதான் என நான் நினைக்கவில்லை.
ஒல்கா: அப்படியானுல் சொல்லு
ஹிகோ: என்ன?
ஒல்கா: எல்லாவற்றையும் ஆரம்பத்தில் இருந்து சொல்லு.
ஹிகோ: அக்கதையை சொல்வது அவ்வளவு கஷ்டம் இல்லை. அது எனது அடிமனதில் எப்போதும் தெளிவாக இருந்தது. நான் சிறையில் இருக்கும் போது அதனை மீண்டும் மீண்டும் எனக்குள்ளேயே சொல்லிக்கொள்வேன். அது எல்லாக் கதைகள் போலுமே ஓர் முட்டாள் தனமான ஓர் கதை. அக் கதையை தூரத்தில் இருந்து நோக்கின் எல்லாச் சம்பவங்களும் ஒன்றேடு ஒன்று பிணைந்ததாக அர்த்தமுள்ள ஓர் கதையாக தோன்றும் ஆனுல் நெருங்கிச் சென்று விளங்கிக்கொள்ள முயலின் அது ஓர் தொடர்பற்ற ஓர் கதை. சுட்டதாகிய அக்காரியம் அதி விரைவாக நடந்து முடிந்த ஓர் சம்பவம். அது எதேச்சையாக நடந்தது. அதை நான் விரும்பித்தான் செய்தேனே. அவ்வாறு என் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட முறையில் அது நடந்ததா என எனக்குத் தெரியாது. எதுவாயினும் நான் துப்பாக்கி வில்லை இழுத்தது என்பதுதான் உண்மை.
ஒல்கா: ஆரம்பத்தில் இருந்து சொல்லு.
ஹிகோ: இந்த கதைக்கு ஆரம்பம்தான் இருக்கின்றதா? இக் கதையை யூயில் மார்ச் 1943 இல் ஆள்விட்டு என்னை கூப்பிட்ட நாளில் இருந்தது தொடங்கலாம். அவ்வாறு ஒருவருடத்திற்கு முன் தான் கட்சியில் சேர்ந்ததில் இருந்து தொடங்கலாம். ஏன் நான் பிறந்ததில் இருந்தே சொல்லலாம் எதுவாயினும் பரவாயில்லை. 1943 மார்ச்சில் இருந்தே தான் தொடங்கலாம்.

தொடரும்

# மருத்துவ சிகிச்சையில் சோதிடம்

சில கீழைத்தேச மேலைத்தேச மருத்துவர்களினதும் சத்திர சிகிச்சை நிபுணர்களினதும் சோதிட வல்லுனர்களினதும் ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு இது எழுதப்படுகிறது. அந்த ஆய்வுகளும் எமது புராதன சோதிட நூல்களும் பலவகைகளில் ஒத்திருப்பதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வருமுன் காத்தல் என்பதை மையமாகக் கொண்ட சோதிடத்தை 'PREVENTIVE ASTROLOGY" என அழைப்பர். நோய் ஏற்பட்ட பின்னர் அதை ஆராய்ந்து அது என்ன நோய் என படிப்படியாக கண்டுபிடித்து மருத்துவம் செய்வது சாதாரண மருத்துவம். ஆனால் நோய் ஏற்படு முன்பே இன்ன நோய் இந்தக்காலத்தில் ஏற்படலாம் என அறிந்து தடுப்பதற்கான முறையைக் கடைப்பிடிப்பதுவும் நோய் ஏற்பட்டபின் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய சரியான நேரத்தை கூறுவதும் இந்த PREVENTIVE ASTROLOGY . என்ன ஏதோ "சுத்து" வதற்கு கால்கோள் இடுகிறேன் என நினைக்கிறீர்கள். அப்படித்தானே! நம்ப முடியவில்லை ஆனால் ....... (உள்ளியின் மகத்துவத்தை நம்ம முன்னோர்கள் சொன்னால் .... பப்பாசிப்பழம் கரு கலைக்க உதவும் என்று அவர்கள் சொன்னால் .......அப்போது அதை நம்ப மறுத்த நாம் அதையே இன்று விஞ்ஞானிகள் சொலல பல்லைக் காட்டிப் பாராட்டுகிறோம் !)

இலக்கிய வரலாற்றில் ஒரு உதாரணம். கோச்செங்கட்சோழன் என்ற புகழ் பெற்ற அரசனைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த அரசன் தாயின் வயிற்றில் இருந்து பிறக்கப் போகிற சமயம் அரண்மனைக் கணித வல்லுனர் சொன்னார் "இந்தக்குழந்தை இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறக்கின் பல நாடுகளையும் வெற்றி கொண்டு பேரும் புகழும் அடைவான்" என்று. அரசி கமலவதியாரின் காதில் இது விழுந்துவிட்டது. "ஒரு நாழிகை (24 நிமிடம்) கழித்து பிறக்கும் வண்ணம் எனது கால்களை மேலே தூக்கிக் கட்டுங்கள். அது வரை நான் நோவைத் தாங்கி உலகம் புகழ் கோவைத் தருவேன்" எனறாள். ஆழ்வார்களாலும் நாயன்மாா களாலும் போற்றிப் புகழப்பட்ட அரசன் இவன்தான். இங்கே ஜாதகத்தை முன்னரே கணித்து வைத்து அதற்கு தக்கபடி குழந்தை பிறப்பிக்கப்பட்டதை காண்கிறோம்.

இன்னுமொரு உதாரணம். இந்திய சோதிடம் அனைத்துக்கும் மூலமாக விளங்கும் நூல்களை எழுதிய பாஸ்கரசாரியா என்பவர் சோதிட மேதைமட்டுமன்றி ஒரு தபோதகரும் கூட. அவர் வாழ்ந்தது எண்ணூறு வருடங்களின் முன். அவருக்கு ஒரே ஒரு மகள் லீலாவதி. அவளுக்கு மாங்கல்ய தோஷம் இருப்பதை அவதானித்த தந்தை அந்தத் தோஷத்தையும் வெல்லக்கூடியதான ஒரு மிகச்சிறந்த முகூர்த்தத்தைக் கணித்தார். திருமணநாளும் வந்துவிட்டது. லீலாவதி பதின்மூன்று வயதுடைய விளையாட்டுப் பெண். அப்போது வழக்கத்தில் இருந்த கடிகாரத்தினை (hour-glass ) அவள் எட்டிப்பார்த்த போது அவளின் மூக்குத்தியில் இருந்த சிறு முத்து ஒன்று அதில் விழுந்து துவாரத்தின் ஒரு பகுதியை அடைக்க கடிகாரம் கொஞ்சம் slow ஆகியது. எனவே திருமண முகூர்த்தம் பிசகி விட்டது. தாலி கட்டப்பட்ட நேரம் கெட்ட முகூர்த்தம். அதை இனி மாற்ற எந்த வழியும் இல்லை என்பதை பாஸ்கரச்சாரியா புரிந்து கொண்டார். தனது புத்திசாலித்தனத்தால் அவளுக்கு நிகழப்போகும் கெடுதியை அகற்ற முயன்றும் விதி அதைத்தடுத்து விட்டது. லீலாவதியின் கணவர் அவளுடைய மாங்கல்ய தோஷத்தினால் சில மாதங்களிலேயே இறந்து போனார். இதனால் நொந்துபோன பாஸ்கரசாரியா தான் எழுதிய மிகச்சிறந்த சோதிட நூலுக்கு லீலாவதி என்று பெயரிட்டார். அதுவே இன்று பல பஞ்சாங்கங்களுக்கு மூலமாயும் விளங்குகிறது. இங்கே சோதிடத்தின் மூலம் எடுக்கப்பட்ட PRECAUTION விதிவசத்தால தவறிவிட்டது.

இந்த இரண்டு உதாரணத்தையும் நான் காரணத்துடனேயே குறிப்பிட்டேன். நடக்கப் போவதை அறிந்து PRECAUTION , PREVENTION எடுத்தலை விளங்கப்படுத்தவே. அன்றைய காலத்திலே மருத்துவர்கள் நோய்களை DIAGNOSIS பண்ணும் போது சோதிடத்தையும் உபயோகித்தனர் என்பதறகு சான்றுகள் உண்டு. ஆனால் நவீன காலமாகிய இன்று இது ஏற்கப்படாமல் இருக்கலாம். அண்மையில் மேலைத்தேச வைத்திய நிபுணர்கள் சிலர் WESTERN ASTROLOGY ஐ உபயோகித்து பல நோய்களை PROGNOSIS செய்துள்ளனர். எமது இந்து சோதிட நூல்களில் பல நோய்கள் பற்றிய தகவல் காணப்படுகிறது. கண் தெரியாது போதல், குஷ்ட நோய் , வாதம் , சலரோகம், மனநோய் , சமிபாடின்மை , மாதவிலக்குப் பிரச்சனைகள் போன்ற பல நோய்கள் தெளிவாக ஆராயப்பட்டுள்ளன.

நவீன காலத்தைய நோய்கள் பற்றிய குறிப்புகள் எமது புராதன நூல்களில் காணப்படாவிடினும் அவற்றிற்கான காரணங்களை (சோதிட ரீதியில்) சில இந்திய சோதிட ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் HIPPOCRATES சோதிடத்தை மருத்துவர்கள் உபயோகிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார்.

உதாரணமாக மூளையின் கலங்களில் எற்படும் அதிர்வுகளை பதியும் ENCEPHALOGRAM ஐ கவனித்துப்பாருங்கள். ஏதோ அதிர் கோடுகள் போன்று காணப்படுகின்றதல்லவா. இவை அதிர்வால் ஏற்படுவதாய் விஞ்ஞானிகளும் சிந்தனைகளின் வரைகோடு என உளவியல் மருத்துவர்களும் , இவை வெளியே உள்ள கிரகங்களின் கதிர்களினால் ஏற்படுவது என சோதிட ஆய்வாளர்களும் கூறுகின்றனர்.

இந்த அதிர்வுகள் மாற்றம்

**சிவப்பிரகாசம்**

உறுவதால் மனிதர்களின் இயல்புகள்கூட மாற்றம் அடையும் என கருதப்படுகிறது
இந்த கிரகங்களின் கதிர்வீச்சுகள் பற்றி அறிந்திருந்த ரிஷிகள் அதன் தாக்கங்களை குறைக்கக் கூடிய மூலிகைகளையும் சில கற்கள் பற்றியும் எழுதியுள்ளனர். ஆனால் அந்த கற்களை தெரிவுசெய்யமுன கிரக நிலைகள் பற்றி முழுமையான ஆய்வுகள் தேவை. பிழையான கற்கள் அணிவதனால் சிலவேளைகளில் தாக்கம் அதிகரித்து விளைவுகள் விபரீதமாகலாம் என இக்காரணத்தை முன்னிட்டே கூறியுள்ளார்கள்ஃ

மந்திரம் ஓதும் போது ஏற்படும் குறிப்பிட்ட ஒலி அதிர்வுதான் சில சக்திகளை ஏற்படுத்துவதாக வேதம் கூறுகிறது. கோவிலில் ஒலிக்கப்படும் மணிகளில் இருந்து வரும் எல்லைகடந்த ஒலி அலைகள் நோய்களை குணமாக்க உபயோகிக்கப்படக் கூடியது எனவும் விஞ்ஞான ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
அதிர்வுகள் ஒலி , ஒளி , மின்காந்தம் போன்ற எந்த ரூபமாக இருப்பினும் அவை மனிதனில் மாற்றம் ஏற்படுத்துவதை காண்கிறோம். MESMERISM உதவியுடன் மனிதனின் ஆழ்ந்த மனத்தில் ஊடுருவக்கூடியதாக உள்ளதும் ஒருவகைச் சக்தியின் உருவமே. எனவே கிரகங்களில் இருந்து வரும் கதிர்வீச்சுகள் மனிதனில் மாற்றத்தை ஏற்படுத்துவது அதிசயமானது அல்ல.

பெயர்களை மாற்றுவதால் எழுதும் போதும் பேசும் போதும் ஏற்படுகின்ற வித்தியாசமான பொருத்தமான அதிர்வுகள் பல நல்விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் நோய்களை மாற்றுவதாகவும் சில NUMEROL-OGY ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். பிறந்த திகதிக்கும் பெயருக்கும் சம்பந்தம் ஏற்படுத்தி செய்யும் இந்த ஆய்வில் எனக்கு நம்பிக்கை இல்லை. எண் சோதிடம் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே மேலைத்தேச கீழைத் தேசங்களில் பயன்படுத்தப்பட்டது என ஆய்வுநூல் ஒன்றில் கண்டேன். இந்த ஆய்வாளர்களிடம் ஒரு கேள்வி. 1752ம் ஆண்டு செப்டம்பர் 2ம் திகதிக்கு மறுநாள் ஒரு பிள்ளை பிறந்திருப்பின் அது மூன்றாம் நம்பர் என சோதிடமும் சொல்வீர்கள். ஆனால் அந்த திகதி 14 என்று பிரித்தானிய அரசாங்கம் சட்டம் இயற்றியது உங்களுக்கு தெரியுமா? கனடாவில் பிறந்த குழந்தைக்கும்
அதே நேரம் இலங்கையில் பிறக்கும் குழந்தைக்கும் வேறுவேறு நம்பரா?

ஒவ்வொரு நோயும் ஏற்படக்கூடிய கிரக நிலைகளும் கோசர திசா நிலைகளும் சோதிடத்தில கூறப்பட்டுள்ளன. அந்த நேரங்களில் அதற்காக தடுப்புகளை உபயோகித்து தப்பித்துக் கொள்ள முடியும் என கருதுகிறார்கள். காண்டங்களில் (நாடி ஜோதிடம்) நோய் வரும் காலங்களைக் குறிப்பிடுகிறார்களே. அதுவும் சோதிடத்தின் ஒரு பகுதிதான்.

சோதிடத்தில் பாலராரிஷ்டம் என ஒரு பகுதி உண்டு. அதில் குழந்தைப்பிராயத்தில் இறப்பதறகான சாத்தியக்கூறுகள் ( கிரக நிலைகள் ) கூறப்பட்டுள்ளன. குழந்தை பிறப்பதை சற்றுத்தாமதிக்கச் செய்து அல்லது முன்னரே நல்ல நேரத்தில் பிறப்பித்து பின் வரப்போகும் கெடுதல்களுக்கு மாற்றீடு செய்ய முடியுமா என்பது இன்றைய ஆய்வாளர்களின் முன் உள்ள கேள்வி.

# விபசாரமே குலத்தொழில் ராஜஸ்தானில் அவலம்

மத்தியப் பிரதேசத்தில் உள்ள பேதிய இனத்தவர்கள் பரம்பரை பரம்பரையாகவே விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. பெண் ஒருத்தி பருவமடையும் போது அவளுக்கு முக்குத்தி குத்தப்படுகிறது. இதுவே அவளை விபசாரத்தில் ஈடுபடுத்தும் முதலாவது சடங்குமுறை. பின்னர் இவளை கன்னியாகவே அனுபவிக்க விரும்புபவர் அதிக பணம் செலுத்தும் போது இவளது முக்குத்தி கழற்றப்படுகிறது. இது ஒரு பெரிய வைபவமாகவே நடைபெறும். பின்னர் இந்தப் பெண்கள் பம்பாய். கல்கத்தா போன்ற இடங்களுக்கு தொழில் செய்ய அனுப்பப்படுகிறார்கள்.

பின்னர் இந்தப் பெண் கர்ப்பமாகும் போது அவளுக்கு திருமணம் நடக்கிறது. அங்கே ஒரு ரூபா நாணயமே அவளது கணவனாக வைக்கப்பட்டு திருமணம் நடக்கும். மத்தியப் பிரதேசத்தில் வாழுகின்ற சில இனங்கள் விபசாரத்திலேயே தங்கி வாழ்கின்றன. ராஜஸ்தானிலும் இவ்வாறான இனங்கள் உண்டு. பெண்களுக்கு ஆள் பிடித்துக் கொடுப்பதே இந்த இன ஆண்களின் வேலை.

இருநூறு வருடங்களுக்கு முன் இந்த இனத்தவர்கள் பெருந்தெருக்களில் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களாக இருந்தனர். பின்னர் வெள்ளையர்கள் வந்த போது இவர்களை குற்றவாளிகள் இனமாகப் பிரகடனப்படுத்தி அவர்களை வேட்டையாடி வந்தனர்.

பாதுகாப்பு தேடி இவர்கள் பணக்காரர்களிடம் அவர்களின் நிலங்களில் வாழ அனுமதி கேட்டனர். இதற்கு பிரதியுபகாரமாக தங்கள் மகள்மாரை அந்த பணக்காரர்களுக்கு பரிசளித்தனர்.

கடந்த 45 வருடங்களாக தனது இனத்தை சீர்திருத்த முயலும் ராம் சனேசி 'தங்கள் குடும்பத்தைக் காக்கவே பெண்கள் இந்த தொழிலில் நுழைகிறார்கள்' என்கிறார். இந்தப் பகுதியில் உள்ள பெரிய வீடுகள் இந்தப் பெண்களின் சம்பாத்தியத்தில் கட்டப்பட்டவையே. இவரது தாய் வேறு இனத்தைச் சேர்ந்தராயிருந்ததால் இவரது தந்தையை கோபம் வரும் போது 'பெண்ணின் வருமானத்தில் வாழ்பவர்' என்று திட்டுவதாக ராம் கூறுகிறார்.

இதைப் போன்றே நத்தலால்புரம் என்ற இடத்திலும் ராஜ்நட் என்ற இனத்தவர்களும் விபசாரத்திலேயே ஈடுபடுகிறார்கள். ஒன்றில் எய்ட்ஸில் இறக்க வேண்டும் அல்லது பட்டினியால் இறக்க வேண்டும், எங்களுக்கு வேறு வழியில்லை என்கிறார் சியாமா என்ற பெண். இவளது இரு சகோதரிகளும் விபசாரிகளே. கடந்த பதினைந்து வருடங்களாக தனது கிராமத்திலும் பம்பாயிலும் விபசாரியாக இருந்தவர் இவர். தனக்கு ஆறு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருப்பதாகவும் முன்னர் தான் அவர்களைப் பராமரித்ததாகவும் இப்போது அவர்கள் தன்னைப் பராமரிப்பதாகவும் அவர் கூறுகிறார்.

மற்ற இந்தியர்கள் போலன்றி இந்த இனங்களில் ஆண் பிள்ளைகள் கவனிக்கப்படுவதேயில்லை. பெண் பிள்ளைகளுக்கே சரியான உணவும் உடைகளும் வழங்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் பெண்கள் மாதம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபா வரை சம்பாதிக்கிறார்கள். சில குடும்பங்கள் நிலங்கள் வாங்கி விவசாயமும் செய்கிறார்கள்.

ராஜஸ்தானில் ஐந்து இனத்தவர்கள் 144 இரவு விடுதிகளை வைத்திருப்பதாக கணிப்புகள் கூறுகின்றன.

# ஒடிந்த இதயங்கள்



மொனிக்கா

அந்த காலை இனிமையானது... இதமான வெயில். எறும்பைப் போல் சுறுசுறுப்பாய் ஓடித்திரியும் சீனர், மலாயர், தமிழர். அவர்களுக்குள் நானும் ஒருத்தியாய் அந்த பஸ் தரிப்பிலே பஸ்ஸுக்காய் காத்திருக்கின்றேன்... 8 மணிக்கு வேலை ஆரம்பம். இன்னும் பஸ்ஸை காணவில்லை. பெண்கள் இந்த நாட்டில் குருவிகள் கத்துவது போல் சீன பாஷையிலே கதைத்துக் கொண்டிருந்தார்கள். பஸ் வந்து நின்றது. அதன் மேல் பெரிய எழுத்துகளில் பணிவன்பு எம் வழி என அழகாக தமிழில் எழுதப்பட்டிருந்தது. மனதுக்கு இதமாகயிருந்தது.

நான் வேலைக்கு சேர்ந்து ஆறு வருடங்களாகிவிட்டன. அந்த பெரிய தொழிற்சாலையில் நிறைய சீனர்கள் தான் தொழில் புரிகின்றார்கள். மலேசியாவைச் சேர்ந்த ராம் எனும் இளைஞனும், நானும், திவ்யாவும் மூன்று பேரும் தான் தமிழர்கள்.

பஸ்ஸை விட்டு இறங்கி வேகமாய் ஓட்டமும் நடையுமாய் உள்ளே நுழைகின்றேன்.

சிரிப்பே வராத சுப்பவைசரின் முகத்தில் என்னைக் கண்டால் ஒரு மெல்லிய சிரிப்பு வரும்.

"மைக். குட்மோனிங்" என்றேன். அவன் கைகடிகாரத்தை காட்டினன் பிந்தி விட்டது என சொல்லாமல் சொல்கிறன்.

திவ்யா நான்கு சங்கிலி போட்டிருந்தாள். அழகான கருப்பு சட்டையின் மேல் யூனிபோமை மாட்டிக்கொண்டிருந்தாள். அவளும் பிந்தித்தான் வந்திருக்க வேண்டும். அவளைப் பார்த்து சந்தே என்றேன். சந்தே என்றால் மலாய் மொழியில் அழகு என அர்த்தம். அவள் உண்மையிலே மிகவும் அழகானவள், அவளது மனது மிகவும் மென்மையானது. இந்த குறுகிய காலத்தில் என் மனம் அவளை நிறைய நேசிக்க தொடங்கியிருந்தது. எதற்கெடுத்தாலும் எனக்கு திவ்யாவின் ஆலோசனை வேண்டும்.

அவளை என்னால் இவ்வளவு தூரம் எப்படி நேசிக்க முடிந்தது? என் இளைய சகோதரி பிரியங்கா மீது நான் இப்படித்தான் அளவுக்கு அதிகமான நேசம். அவள் மீதுள்ள பாசத்தை போலவா இது? அல்லது அதை விட மேலானதா? என எனக்கு தெரியாது. சில நேரங்களில் என் அம்மா போலவும் இவள் எனக்கு தெரிந்தாள். அன்னிய நாட்டில் உறவுகள் என சொல்லிக் கொள்ள எனக்கு யாருமில்லை ஆனல் திவ்யா என்றொரு உயிர் எனக்கு உயிருக்குயிராய் இருந்தது. அன்பு என்பதில் இப்படியான இதயங்களும் இந்த உலகில் இருக்கின்றதோ என நான் அடிக்கடி என்னைக் கேட்டுக் கொள்வேன். திவ்யாவை நான் அளவுக்கு அதிகமாக நேசிக்க காரணம், அவள் குடும்பத்தில் ஐந்து சகோதரிகள், தந்தை இறந்து விட்டார். இவள் ஒருத்தி சம்பாதித்து எப்படிய அந்த ஐந்து பேரையும் படிக்க வைக்கின்றாள். இங்கு மாதிரி அங்கு அராசங்க உதவிப் பணம் எல்லாம் கிடையாதே ? திவ்யாவுடன் சேர்ந்து தான் நானும் தினமும் ஓவர் டைம் செய்ய பழகிக் கொண்டேன். சாப்பாட்டு நேரம் அவளது கதையை ஒன்று விடாமல் சொல்வாள். திவ்யா இன்று ஏன் உம் என்றிருக்கிறள்? எனக்கு மனம் சோர்ந்து போனது.

எனக்குரிய இடத்தில் போய் அமர்ந்துக் கொண்டேன். இன்று வேலை அதிகம் போல் கதைக்க முடியாது. ஏன் மூச்சை கூட சுதந்திரமாய் அந்த தொழிற்சாலையில் விடமுடியாது. கையுறை. தலையை மூடி ஒரு தொப்பி. வாயை மூடி ஒரு வாயுறை... கண்கள் மட்டும் தான் தெரியும்......

எயர் கொண்டிஷன்ட் அறையென்பதால் சுதந்திரமான காற்று கூடயில்லை. ஒரேயிடத்தில் அமர்ந்திருந்து முதுகு வலித்தது. சற்று எழுந்து நின்றேன். பின் முழங்காலில் கொஞ்ச நேரம் இருந்தேன். ராம் என்னைப் பார்த்து சிரித்தான். பின்பு மூக்கிற்கும் வாயிற்கும் போட்டிருக்கும் உறையை கழற்றி விட்டு அந்த உலோகங்களுடன் போராடிக்கொண்டிருந்தேன்.

"பெருக வருதுலா" என்றான் ராம்.

சுப்பவைசர் வந்து கொண்டிருந்தான் உடனே வாயுறையை எடுத்து மாட்டிக்கொண்டேன்.... பதினெறு மணி பசியெடுத்தது.. காலையில் ஒன்றும் சாப்பிடும் பழக்கமில்லை— அவன் அக்குவி என்ற சீன கிழவனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

திவ்யாவின் பக்கம் திரும்பி பார்த்தேன் அவள் தானும் தன் வேலையுமாயிருந்தாள். ... ஏன் இவள் என்னுடன் கோபமாயிருக்கின்றளோ? நானும் இயந்திரங்களுடன் இயந்திரமாய் சுழன்றுக் கொண்டிருந்தேன்.—

"லஞ்ச் டைம்லா" அக்குவி கத்தினன். ஒரே சந்தோசம். சாப்பாட்டு நேரம் என்றால் கையுறைகளை கழற்றி எறிந்து விட்டு யூனிபோமையும் கழற்றி வைத்து விட்டு திவ்யாவும். நானும். ராமும் வெளியே வந்தோம்.

" என்ன இன்று சோகமயமாய்" என திவ்யாவிடம் கேட்டேன்.

"பசி லா! வா சாப்பிட போகலாம் " என்றாள்.

தொழிற்சாலையை தாண்டி மூவரும் நடந்த சென்ற போது கூட திவ்யா எதுவுமே பேசவில்லை. ராம் தான் "பெருசுடன் வேலைசெய்ய கஸ்டமாயிருக்குலா! சும்மா கத்துவான்லா!" என சொல்லுக்கு சொல் லா போட்டு சொல்லிக் கொண்டு வந்தான்.

" சிரித்தான் " அவன் அசப்பில் என் தம்பி போலிருப்பான்.

" நீ என் சகோதரன் மாதிரியே தானிருக்கின்றாய் " என்றேன்

"இப்படித்தான் எல்லா பொம்பிளைகளும் சொல்வாங்கள்" என்றான்

திவ்யா மெல்ல சிரித்தாள்..... கடையில் நிறைய பேர் சாப்பாட்டுக்காய் கியூவில் நின்றுக் கொண்டிருந்தார்கள்...

நாங்களும் நின்று கொண்டோம்...

மூவரும் சிக்கன் தான் சாப்பிட்டுவிட்டு ஓட்டமும் நடையுமாய் மீண்டும் அந்த இயந்திரங்களுடன்....

மைக் என்னருகே வந்தான்... "இன்று எல்லோருக்கும் ஓவர் டைம் விரும்பினால் செய்யலாம்" என்றான்.

தலையசைத்தேன்... ஓவர் டைம் செய்தாலும் டக்ஸ், வாடகை, போன் பில் என போக மிஞ்சுவது கொஞ்சம்தான். .. எதற்கும் இம்முறையாவது அம்மாவுக்கு காக அனுப்பவேண்டும். நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது.. களைப்பு, சோர்வு, மீண்டும் பசி, நேரம் இரவு எட்டு மணியை தாண்டிக் கொண்டிருந்தது. எட்டு முப்பதுக்கு வேலை முடிந்து வெளியே வந்த போது ராம் குருவியை போல் பறந்து விட்டான்.

அக்குவி முகம் கழுவி தலைசீவி வெளியே வந்தாள்..

என்னுடன் திவ்யா பஸ் ஸ்டான்டுக்கு நடந்து வந்தாள். இருவரும் செல்லவேண்டியது ஒரே பஸ்தான்...

"என்ன நடந்தது? " அவளிடம் மீண்டும் கேட்டேன்.

" நாளைக்கு சொல்றேன்" என்றாள்.

நான் வற்புறுத்தவில்லை... பஸ் வந்தது. ஏறிக்கொண்டோம்... களைப்புடன் முகம் வாடிப்போயிருந்தது... திவ்யாவிடம் விடைபெற்று இறங்கிக் கொண்டேன். அறைக்கு சென்ற எனக்கு அப்படியே படுத்து விடவேண்டும் போலிருந்தது. பசி இனி சமைத்து சாப்பிட ஏனோ பிடிக்கவில்லை, அறை எங்கும் புத்தகங்களாய் கிடந்தன.. குளித்து விட்டு ஈரத்தலையுடன் அப்படியே உறங்கிப் போனேன். பசி நடுநிசியில் ஒரு மணிக்கு எழுப்பிவிட்டது. றெபிரிஜிரேட்டரில் கிடந்த பாணையும், ஜாமையும் சாப்பிட்டு விட்டு சோபாவில் வந்து அமர்ந்து கொண்டேன். கூந்தல் ஈரமாயிருந்தது.. அம்மாயிருந்திருந்தால் இப்படி நித்திரை கொள்ள விடுவாளோ? இரவில் குளித்தாலே கத்துவாளே! பக்கத்து அறையை எட்டிப் பார்த்தேன், மீனு பாட்டி நித்திரையாயிருந்தாள். கிழவி இந்த வயதிலும் பேங்கில் பீரோ கிளீனராக வேலை செய்கிறது.

கிழவிக்கு மூன்று மகன்மார் திருமணம் புரிந்து விட்டார்கள், தனக்கு அங்கிருக்க பிடிக்கவில்லையாம், மருமகளின் தொல்லை என அடிக்கடி சொல்லும் போது எனக்கு பரிதாபமாகவிருக்கும். பெற்று வளர்த்து மகன்மாரை படிக்கவைத்து, பின்பு மீண்டும் இந்த தாயுள்ளம் தனித்து, ஒரு புதிய வாழ்வை தொடங்கியிருக்கின்றதே! இப்படி எத்தனை ஜீவன்கள் இந்த உலகில் என் அம்மாவை மட்டும் நான் இப்படி தனித்து இந்த வயதிலும் வேலை செய்ய விடமாட்டேன். அம்மா எப்படியிருப்பாளோ! அவளைப் பார்த்து

எனக்கு அழுகை வந்தது. அவளைப்பார்க்க வேண்டும் போலிருந்தது. தலையணையை இறுக அணைத்துக்கொண்டு அழுதேன்.. அந்த குமுறல் சத்தமாய் வெளிவந்தது.. கண்ணீர் கரை புரண்டோடியது. அம்மா உன்னை நான் எப்போது பார்க்க போகிறேன். . அழுத வண்ணமே உறங்கிப்போய்விட்டேன்.

நாட்களும் வேகமாய் ஓட இன்று சனிக்கிழமை திவ்யா வீடடே வருவதாய் சொல்லியிருந்தாள். அவளுக்கு என்ன பிரச்சனை மனதுக்கு சஞ்சலமாயிருந்தது. சிலநாட்களாகவே திவ்யா சந்தோஷமாகயில்லையே! ஏன்? அவளுக்கு தன் காதலனுடன் ஏதும் பிரச்சனையோ! சே! ரவி அப்படிப்பட்டவன் அல்லவே நல்ல பெடியன், அவள் எப்படி உயிருக்குயிராய் நேசிக்கின்றாளோ? அதேபோல்தான் அவனும் அவளை நேசிக்கின்றான். ஐந்து வருடமாய் அவள் ரவியைப்பற்றி என்னிடம் கதை கதையாய் சொல்வாள். எனக்கும் கேட்டு கேட்டு போதும் போதும் என்றாகிவிட்டது. தங்கைகள் ஒரு நிலைமைக்கு வந்தபின் தான் திருமணம் புரிந்து கொள்வதாக இருக்கின்றாள்.

ரவி, திவ்யா விடயம் அந்த ஊருக்கே தெரியும். திவ்யாவிடம் பலமுறை நான் சொல்லியிருக்கின்றேன். என்னதானிருந்தாலும் நீ திருமணம் புரியும் முன் கண்டமாதிரி சுற்றாதே! என அவள் சிரிப்பாள். இது என்ன உங்க சிலோன்னு நினைச்சியா? இங்க லைஃப்பே அப்படித்தான், ஒரு பெண்ணுக்கு போய் பிரண்ட்ஸ் மூன்று பேர் கூடயிருப்பார்கள் என்பாள்.

ஆனால் நானும் ரவியும் இந்த உலகத்தில் யாருமே வாழாத ஒரு வாழ்வை அமைப்போம் என்பாள். திவ்யா இதயம் ரவியைத் தவிர வேறு யாரையும் கனவிலும் நேசித்திருக்காது. திவ்யா நல்லவள், திவ்யாவின் தாய் அவள் மீது அளவிலா அன்பு ஏன் நான் கூட திவ்யா மீது எத்துணை அன்பு.

திவ்யா வந்தாள்... காலை தூக்கி சோபாவில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள்...

"பசியாறிட்டியா" என என்னைக் கேட்டாள்.

"ஆம் " என்றேன்.

சற்று நேரம் மௌனமாயிருந்தாள்...

"நீ பசியாறினியா" என நான் அவளிடம் கேட்டேன்.

"சாப்பிட புடிக்கல" என்றாள்.

நான் மௌனமாயிருந்தேன்.

தேனீர் போட்டு மேசைமீது கொண்டு வந்து வைத்தேன்.

"என்ன நடந்தது என சொல்றியா" என கத்தினேன்.

" ரவி " என்றாள்

"சொல்லு! ரவிக்கு என்ன" என்றேன் பரபரப்புடன்

"அவன் இன்னொருத்தியை கலியாணம் செய்திட்டான்"

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அதிர்ச்சியாயிருந்தது, கால்கள் நடுங்கின. திவ்யாவால் எப்படி இதை இத்தனை நாட்கள் தாங்கிக் கொள்ள முடிந்தது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"யார் பெண்" என கேட்டேன்.

" நவநீதா" என்றாள்

ஆச்சர்யத்தில் என் கண்கள் அகல விரிந்தன. நவநீதாவை அண்மையில் தான் இவள் ரவிக்கு அறிமுகம் செய்து வைத்தாள். நெடுநாளைய நண்பி நவநீதா இவளது நெருங்கிய நண்பிகளில் ஒருத்தி, அவளுக்கு தெரியுமே திவ்யா ரவியை திருமணம் முடிக்கப்போவது, அவனை நேசிப்பது எல்லாம் தெரியுமே! அவளால் எப்படி இந்த கொடுமையை செய்ய முடிந்தது. அன்பு எதிர்பாராமல் வருவதுதான். நிரந்தரமாக எப்படி அவளால் திவ்யாவின் வாழ்க்கையை பறிக்க முடிந்தது. எனக்கு நடுக்கமாயிருந்தது. திவ்யாவுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என எனக்கு தெரியவில்லை. .

திவ்யா இப்போதெல்லாம் யாருடனும் அவ்வளவாக கதைப்பதில்லை. திவ்யாவிற்காக என் மனம் அழும்...

# மெய் உள்

## சிவதாசன்

### ஊழிக்காலம்

உலகத்தாய்க்கு வயிற்றில் அழற்சி
இருமல் எரிமலையாய்
குக்கலும் குமுறலும்
மனிதக் கிருமிகள் உடல் முழுதும்
அரிப்பு வேறு
சொறிந்து சொறிந்து
தாவரவிலங்குகள் சவரமடைந்தன
பாரிச வாதம்
அலாஸ்கா முதல் அந்தீஸ் வரை
ஓசோன் குடையில் ஓட்டை விழுந்தது.
அமிலக்குளிப்பில் அனைத்தும் அழிந்தது
வாத பித்த சிலேத்துமம் என்று
நாடியனைத்தும் பார்த்தாயிற்று
இயற்கை வைத்தியம் எடுபடவில்லை
ரோக நிவாரணி ஒன்றே ஒன்று!
மனிதக் கிருமிகள் அழிய வேண்டும்.

### ஒரு உலக்கையின் சுய சரிதை

எனக்கு ஒய்வே இல்லை
சாடும் ஆணுக்கும் சரி
வாடும் பெண்ணுக்கும் சரி
நான் தேவை.
ஒன்றில் உரலை இடிப்பேன்
அல்லது உடலை முறிப்பேன்.

### அழு. பாகம்

உப்பு இல்லை என்றும்
உணவு பிரமாதமாயிருக்கிறதே?
நீ உதைப்பதை நினைத்தேன்
கண்கள் உப்பைக்
காணிக்கை செய்தன!

### அம்.மாசாஜ்

மது வெறியில்
விழுந்து முறித்த
அப்பா காலை,
அடித்து முறித்த
அம்மா கையினால்
பிடித்து விடட்டுமாம்!
சுகத்திற்காக!!

### அப மங்களா

எழுத்தாளர் மா நாட்டில்
'தாள்' பறக்கப் பேசியவர்
இலக்கிய மாமன்னர்
பி.கு.
இவருக்கு எழுத வராது

---

1993 ஆகஸ்ட் 14ம் திகதி
மனிதாபிமானத்திற்கு
நேரடி உத்தரவு

உந்தச் சொல் உங்கை
இன்னும் இருக்குதோ
என்றினி எவரும்
கேட்கேலாது

இன்னோர் கைதிக்கு
ஏலாமல் வந்து இது
இறைவருக் கருகில்
இருப்பவர்க் கெட்டி

மரணயோகம்
மற்றும் தவிர்த்து
மற்ற நேரத்தில்
மறத் தமிழ் தலைவன்
மனம் விருப்பமடைந்தால்

இன்னுமோர் தரம்
இன்னொரு 'தரம்' தப்பும்

இதுவுமில்லையேல்
மனிதர்களாயெம்மை
யாரோ கருதுவர் என்பதிருக்
தொடர்க.

**சுகன் (பிரான்ஸ்)**



வடக்கில்
தமிழினம்
ஆயுதம் எனும்
ஆணியில் தொங்கும்
வரைபடமே!
அந்த ஆணி
விழுந்துவிட்டால்
அந்த வரைபடம்.?
அதற்காக அந்த
ஆணியே அந்த தேசப்படத்தில்
ஓட்டைப்போடுவதை
நான் நேசிக்கவில்லை....
அந்த ஆணி எல்லைவரை
உறுதியாயிருக்க வேண்டும்
உடல்களில் ஓட்டைப் போடுவதை
நான் வெறுக்கின்றேன்.....
அந்த வரைபடத்தை நான்
நேசிக்கின்றேன் ஆனால்
அந்த ஆணியை மட்டும்
என்னால் நேசிக்கமுடியவில்லையே
இன்னும் நான்
குழந்தையாயிருக்கின்றேனோ?
அப்படியானால் அந்த குழந்தைகள்
மட்டும்
எப்படி
குருவிகளை கூட சுட அஞ்சும்
அவன் எப்படி
மனிதர்களை சுட்டு குவிக்க
போகிறான்?

**தாரிணி**

## கொழும்பில் தமிழ் கட்சிகள் கூட்டு முன்னணி

ஈ.பி.ஆர்.எல்.எஃப், தமிழ் காங்கிரஸ், கூட்டணி ஆகியன அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் கூட்டாகப் போட்டியிடப் போவதாக ஐலண்ட் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது. பொதுக் கூட்டணி ஒன்றை அமைத்து அதன் கீழ் போட்டியிட உள்ளன. குமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், கூட்டணித் தலைவர்கள் சந்தித்து இந்த முடிவுக்கு வந்ததாகவும் முஸ்லிம் காங்கிரசையும் இந்த முன்னணிக்குள் சேர்க்க அவர்கள் முயல்வதாகவும் கூறப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்கு இணைப்புக்கு சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் அதனையும் முன்னணிக்குள் இணைக்க தமிழ் கட்சிகள் விரும்புவதாகவும் இது குறித்து அஷ்ரப்புடன் பிரேமச்சந்திரன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் இவ்வாறான ஒரு அமைப்பு உருவாக்கப்படும் பட்சத்தில் தொழிலாளர் காங்கிரசும் இதனுடன் இணையக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

## கிழக்கு தேர்தலில் புலிகள் பெயர் பாவிப்பு

கிழக்கில் சில அமைப்புகள் புலிகளின் பெயரைப் பாவித்து வாக்குவேட்டையில் ஈடுபட்டிருந்தன. சில சுவரொட்டிகள் புலிகள் ஒட்டியது போன்று குறிப்பிட்ட குழுக்களை ஆதரிக்கும்படி கேட்டிருந்தன. சில சுயேச்சைக்குழுக்கள் புலிகளின் ஆதரவு தமக்குண்டு என்று கூறி பிரசாரம் செய்திருந்தன.

இது குறித்து புலிகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வதந்திகளைப் பரப்புவதன் மூலம் வாக்குச் சேர்க்க முயன்றதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிரான போக்கை வெளிக்காட்டியபடியே சகல தமிழ் அமைப்புகளும் போட்டியிட்டிருந்தன. சில இராணுவத்தினால் போட்டியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அந்தக் குழுக்களிலும் புலிகளின் உளவாளிகள் பங்கு கொண்டிருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது நிலவுகிறது.

# வடக்கு மீது புத்தாண்டின் பின்னர் தாக்குதல்

தென் மாகாணத் தேர்தல்கள் முடிந்த நிலையில் அரசாங்கம் வடக்கு மீது பாரிய யுத்தம் ஒன்றைத் தொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெற்கில் தோல்வியுற்றதால் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்காக வடக்கு மீது யுத்தம் ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் துணியக் கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. புது வருடத்தின் பின்பே தாக்குதல் நடத்தப்படும் என்று கொழும்புப் பத்திரிகைகள் ஹேஸ்யம் தெரிவித்துள்ளன.

யுத்த ஏற்பாடுகள் பல தற்போது நடைபெற்றுள்ளன. கிழக்கில் தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்க அனுப்பப்பட்ட இராணுவத்தினருடன் சேர்த்து மொத்தம் பத்தாயிரம் இராணுவத்தினர் வட பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதற்காக ஆயுதங்களும் தளபாடங்களும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. விமானப்படைக்கு விசேட விமானங்களும் தருவிக்கப்படுகின்றன. மூன்று ரஷ்ய விமானங்கள் சித்திரை மாதம் வந்து சேரவுள்ளன. சகல ஆயத்தங்களுடன் தயாரான நிலையில் இராணுவம் நிற்பதாக கருதப்படுகிறது. சீன இறக்குமதி ஆயுதங்கள், ரஷ்ய விமானங்கள் என்பன யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

சிங்கள புத்தாண்டு காலத்தில் தாக்குதல் நடத்துவதால் ஏற்படும் இழப்புகளால் மக்கள் அதிருப்தி அடையக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் சிங்கள தமிழ் புதுவருடத்திற்கு பின்னர் தாக்குதலை நடத்தக் கூடும் என்று இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. இந்த யுத்தம் நீடித்த காலத்திற்கு நடக்கும் என்ற எதிர்பார்ப்பில் அரசாங்கம் ஆயத்தங்களை செய்து வருகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் பலாலி, ஆனையிறவு, தீவுப்பகுதி முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இராணுவப் பேச்சாளர் இந்த தாக்குதல் பற்றி பாதுகாப்பு காரணங்களுக்காக விபரங்கள் தரமுடியாது என்று தெரிவித்துள்ளார். ஆயினும் முன்பு போலன்றி பல முனைகளிலிருந்தும் தாக்குதலை இராணுவம் நடத்தக் கூடும் என்றும் பேரழிவை உண்டாக்குவதில் தயக்கம் கொண்டிராது என்றுமே நம்பப்படுகிறது.

புலிகளும் இந்த யுத்தத்திற்கான தயாரிப்புகளில் ஈடுபடுவதாக யாழ்ப்பாணச் செய்திகள் கூறுகின்றன.

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் சர்வோதய செயற்பாடுகள்

சர்வோதயத் தலைவர் ஆரியரத்தின யாழ்ப்பாண விஜயம் செய்ததை அடுத்து சர்வோதய இயக்கத்தின் யாழ் கிளைக்கு உதவிப் பணம் அனுப்பப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள தலைமையகத்திலிருந்து 28 லட்சம் ரூபா அனுப்பப்பட்டுள்ளதாகவும் இந்த பணத்தின் உதவியுடன் சிறு வீடமைப்பு, குடிநீர் வசதிகள், குழந்தைகள் பாடசாலை அமைப்பு போன்றன நடத்தப்பட உள்ளன.

முன்பு பிரேமதாசா காலத்தில் யாழ்ப்பாணத்தில் சர்வோதயத் தலைவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

## சமாதான முயற்சியில் பிக்குமார் குழு யாழ் விஜயம்

புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தி நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் முயற்சியில் நூறு பிக்குமார் கொண்ட தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக மாதம்பகே அஸ்வஜி தேரோ தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்துக்கான ஏற்பாடுகளை இவர் செய்து வருகிறார். இந்த தூதுக்குழுவில் பல முக்கிய, பிரபல பிக்குகள் கலந்து கொள்வார்கள் என்றும் தமிழ் சிங்கள புதுவருடத்தின் பின்னர் இவர்கள் செல்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இது சம்பந்தமான கூட்டம் ஒன்றையும் அவர் ஏற்பாடு செய்துள்ளார்.

## தொண்டா தேர்தலில்..

தற்போது தொண்டமான் ஐ.தே. கட்சியுடனான தொடர்புகள் பலவீனமடைந்துள்ளன. தான் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்றும் ஆனால் அடுத்த தேர்தலில் ஐ.தே.கட்சியை ஆதரிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளதாக ஐ.தே.க தெரிவித்துள்ளது.

# சிவாஸ் ரேடிங் நிறுவனத்தினரின்
# மாபெரும் மலிவு விற்பனை

## மீன் வகைகள் அனைத்தும் மலிவு விலையில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரை | 1.49 | சீலா | 2.49 | சுறு | 1.99 |
| அறுக்குளா | 4,99 | முரல் | 1.99 | கணவாய் | 1.99 |
| விளைமீன் | 4.49 | நீல மீன் | 1.99 | திரலி ,கருந்திரலி | 2.49 |

| | |
|---|---|
| மைசூர் பருப்பு 4 றாத் | 2.99 |
| நல்லெண்ணெய் | 5.99 |
| சோயா இறைச்சி 200 கி | .99 |
| கோழி | 1.99 |
| ஐந்து கிலோ அரிசி மா | 6.99 |
| ஒரு கிலோ அரிசிமா | 1.49 |

| | |
|---|---|
| ஹோமோ பால் | 2.95 |
| 2% பால் | 2.95 |
| குடாஸ் 10 கிலோ கோதுமை மா | 4.99 |
| முட்டை முப்பது | 1.99 |
| வெங்காயம் 10 று | 2.99 |

| | |
|---|---|
| goat leg | 1.99 lbs |
| boneless | 1.99 lbs |
| chicken legs | .69 lbs |
| fresh chicken | 1.99 |
| Frozen Red Shnapper, King fish | 2.99 lbs |
| String Hopper mix | 1.99 |
| Pittu Mix | 1.99 |
| Small dictionary | 3.99 |

| | |
|---|---|
| நிரு கோப்பி பவுடர் | 3.49 |
| சன்யோ றைஸ் குக்கர் | 55.99 |
| 5 கிலோ உழுந்தம்பருப்பு | 6.99 |
| 5 கிலோ மைசூர் பருப்பு | 7.99 |
| தாய்லாந்து புளி 225 கி | .69 |
| 400கி தேங்காய்ப் பால் பவுடர் | 1.99 |
| தேங்காய்ப் பால் ரின் | .89 |
| தாய்லாந்து தேங்காய்ப் பால் பவுடர் | .99 |

| | |
|---|---|
| உள்ளி 1 றாத் | .99 |
| நிரு பிராண்ட் மிளகாய்த்தூள் 2 றாத் | 6.49 |
| பிரகாஷ் பிராண்ட்மிளகாய்த்தூள் 1 கிலோ | 5.99 |
| நிரு பிராண்ட் அரிசிமா 1 கிலோ | 1.69 |
| நிரு பிராண்ட் அரிசிமா ஐந்து கிலோ | 7.99 |
| இருபது கிலோ பஸ்மதி | 27.99 |
| 5 கிலோ பஸ்மதி | 7.99 |
| சீக்கான் பிராண்ட் அரிசிமா 1கிலோ | 1.59 |
| 1 கிலோ அரிசிமா பிரகாஷ் பிராண்ட் | 1.49 |

# Sivas Trading Co

**3852 Finch Ave E(Kennedy/Finch)**

**321 2739**

# பதிஊைந்து நிமிடப் புகழ்: ஒரு பிறவிப் பெரும்பயன்

அறிஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

கடந்த சில வாரங்களுக்கு முன்னதாக நான் அன்டி வோறேல் எனப்படும் அமெரிக்க ஓவியம்/ திரைப்பட ஆக்குனர் பற்றி எழுத வேண்டும் என்று நினைத்தேன். அப்படி நினைத்துக் கொண்டு வீதியால் சென்று கொண்டிருந்த போது. புத்தகக் கடை ஒன்றின் ஜன்னல் ஓரம்.... Holy Terror என்று ஒரு புத்தகம் இருந்தது. இதென்னடா, அயாத்துல்லா கொமேய்னி பற்றிய புத்தகமா என்று பார்த்தால் அன்டி வோறேலின் வாழ்க்கை வரலாறு. எனக்கு இவர் பற்றி அதிகம் தெரியாது. விசயம் தேவை என்றால் கௌந்தியிடம் கேட்டுப் பார்க் கலாம். ஆனால் காம்பெல் சூப் டின்னை வடிவம் அமைத்தது இவர் தான் என்பது தெரியும். சிவப்பும் வெள்ளையுமாக இருக்குமே அது. நான் சொல்ல வந்தது வோறேல் சொன்ன ஒரு பொன்மொழி தான்.

Everybody will be famous for at least 15 minutes in his lifetime. எல்லா மனிதர்களுக்கும் வாழ்நாளில் ஒரு தடவை குறைந்தது பதினைந்து நிமிடம் என்றாலும் புகழ் உண்டு. இதென்ன பலாய்டா என்பீர்கள்.

★ ★ ★

உங்களில் சிலர் இந்த வாரம் ஆஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டதைப் பார்த்திருப்பீர்கள். அதில் கனடாவைச் சேர்ந்த 11 வயதுப் பெண் த பியானோ என்ற படத்தில் நடித்ததற்காக பரிசு பெற்றிருக்கிறாள். இவள் நடித்த படத்தில் சில 'பச்சை இலக்கியக் காட்சி' உள்ளது என்பதற்காக இவளை இந்தப் படத்தின் சில பகுதிகளைப் பார்க்க பெற்றோர் விடவில்லை. தணிக்கை செய்த பின்பே விட்டார்கள். அனுபவம் வாய்ந்த நடிகைகளான எம்மா தொம்சன், சிறந்த நடிகைக்கான பரிசைப் பெற்ற ஹோலி ஹன்ரர் ஆகியோரை தோற்கடித்து சிறந்த குணசித்திர நடிகைக்கான பரிசை இவள் பெற்றிருக்கிறாள். பார்த்தீர்களா? இவளது பதினைந்து நிமிட புகழ் எப்படி வந்திருக்கிறது என்று. இவளது மாமனாரான டாக்டர் ஒருவரை பத்திரிகையாளர்கள் தொலைபேசி மூலம் பேட்டி கண்ட போது 'இவளது புண்ணியத்தால் பதினைந்து நிமிடப் புகழை நான் அடைந்திருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்.

ஆஸ்கார் விருதுகள் வழங்கப்படும் போது பார்த்தீர்கள் என்றால்— பரிசு பெற்றவர்கள் தங்கள் அம்மா, அப்பாவுக்கு நன்றி சொல்லும் போதும் அவர்களும் தங்கள் பங்கான பதினைந்து நிமிடப் புகழை அடைகிறார்கள். அதன் பின்னர் நீங்கள் அவர்களை மறந்து போவீர்கள். இதைத் தான் சொல்வது பிறவிப் பெரும் பயன்... இந்த பிறவியிலேயே ஒரு பதினைந்து நிமிடப் புகழை அடைவது.

★ ★ ★

உலகம் பூராவும் தமிழர்கள் புகழடைந்திருக்கிறார்கள். இமயமலையில் புலிக்கொடி பொறித்தவர்கள் தமிழகத் தமிழர்கள். ஆனால் நம்ம தமிழர்களோ ஒருபடி மேல் போய் 83ம் ஆண்டு முதல் உலகெங்கும் புலிக்கொடி பொறித்திருக்கிறார்கள். எங்கோ ஒருவராக இருந்த பிரபாகரன் 'இயற்கையே எனது வழிகாட்டி. இயற்கையே எனது நண்பன்' என்று ஒரு தத்துவஞானியாக, அனிதா பிரதாப்பின் கைங்கர்யத்தால் உலகெங்கும் காணப்பட்டது இந்த பதினைந்து நிமிடப் புகழினால் தான்.. இன்று இந்தப் புகழ் பதினைந்து வருடமாகியிருக்கிறதோ என்னவோ?

ஈழத் தமிழர் பெருமை உலகெங்கும் பரம்பியது இதனால் தான். இலங்கையில் இனப்பிரச்சனையில் பாதிக்கப்படுகிறார்கள் என்பது முதல் பிரான்சில் தூள் கடத்துகிறார்கள். ஜேர்மனியில் தலை மாற்றுகிறார்கள். கனடாவில் சுடுபடுகிறார்கள் என்றது வரை தமிழர் புகழ் இன்று வியாபித்திருக்கிறது. புகழ் பெற்றதற்கு ஆதாரம் என்ன? தலையங்கத்தில் செய்தி வரும். தொலைக்காட்சியில் தலை வரும். .. கப்பலில் வந்திறங்கிய நம்ம தமிழர்களுக்கு கிடைத்த பதி னைந்து நிமிடப் புகழ் எவ்வளவு? தொலைக்காட்சியைத் திருப்பிய பக்க மெல்லாம் அகதிகள்— இது ஒரு புகழ் தானே.

★ ★ ★

இது பற்றி இரு கொசுறுகள்.. என்னோடு வேலை செய்கிற எதியோப்பிய நண்பன் முன்பு இத்தாலியில் இருந்து கனடிய அரசினால் ஸ்பொன்சர் செய்யப்பட்டு நியு பவுண்ட்லாண்டிற்கு வந்திருந்தான். அங்கே வந்து கிராமம் ஒன்றில் இவனும் வேறு சிலரும் தங்கியிருந்தார்களாம். இவன் ஆள் தோற்றத்தில் எதியோப்பிய பஞ்சத்தில் அடிபட்ட அகதி மாதிரி— அசல் ஒமகுச்சி... (இப்போதும் தான்) இவனைக் கண்டதும் அங்குள்ள பத்திரிகை ஒன்று இவர்களது படத்தைப் போட்டு தனது தலையங்கத்தில் 'பட்டினியால் வாடிய எதியோப்பிய அகதிகள் அலை அலையாக கனடாவிற்கு வருகிறார்கள்' என்று எழுதியதாம். ஏதோ அவன் தன் பிறவிப் பெரும் பயனை அடைந்தான். ஆனால் பின்நாளில் நம்மவர்களும் அதே நியூ பவுண்ட்லாண்டிற்கு "அலையோடு அலையாக" வந்தது வேறு பிரச்சனை..

★ ★ ★

இந்த அலையோடு அலையாக வந்தவர்களோடு கியூறியஸும் வந்து தனது பதினைந்து நிமிடப் புகழை அனுபவித்திருக்க வேண்டியவன் இங்கு குறிப்பிடற்பாலது. கியூறியஸ் ஜேர்மனியில் இருந்த காலத்தில் தான் இந்தக் கப்பல் புறப்பட்டது. இதில் உள்ள ஆபத்துக்களை எடை போட்ட கியூறியஸ் எந்த ஏஜன்சியின் உதவியும் இன்றி கப்பல் புறப்பட்ட இரு நாட்களின் பின்னர் புறப்பட்டு கனடா வந்து சேர்ந்தான். கியூறியஸ் வந்து இரு வாரத்தில் கப்பல் வந்தது. ஒரே விளம்பரம்— இலங்கைத் தமிழர்கள் தலையங்கச் செய்திகளில்— இந்தக் கப்பலில் கியூறியஸ் வந்திருந்தால் கியூறியஸ்க்கும் அந்த பதினைந்து நிமிடப் புகழ் கிடைத்திருக்கும். கியூறியஸ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டானா? அல்லது நல்ல காலமோ யாரறிவார்? ஆனால் எனது பதினைந்து நிமிடப்

## அறு(சு)வை



'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'

புகழ் வந்ததால் நான் பட்ட அவலம் பற்றி இறுதியில் சொல்கிறேனே..

கியூறியஸ் கனடா புறப்படுவதாக ஜேர்மனியில் இருந்து ஊருக்கு செய்தி போன காலத்தில் தான் கப்பல் இங்கே வந்து சேர்ந்தது. இந்த விடயத்தை ரூபவாகினியில் போட்டுக் காட்ட... கியூறியஸின் சகோதரிகள் 'எங்கட ராசாவின்' முகத்தையும் அந்த முகங்களுக்கிடையில் அழுதழுது தேடிக் கொண்டதாகவும் 'உவன் நல்லா இங்கிலிஷ் கதைப்பான். அவன் முன்னுக்குத் தான் இருப்பான்' என்று கியூறியஸின் 'அவையத்து முந்தியிருப்பு' திறன் பற்றி புகழ்ந்து கொண்டதாகவும் பின்னர் ஓலை வந்தது.

★ ★ ★

அது சரி, இந்த புகழ் என்பது என்ன? மற்றவர்களுக்கு தெரிந்து அவர்களால் பேசப்படுகின்ற நிலை.. அதிலும் இதுவரை நேரே காணாதவர்கள், கேள்விப் படாதவர்கள் கேள்விப்படுதல்... இதை famous என்று கூறலாம். உதாரணத திற்கு ஐன்ஸ்டீன்.. செயற்கரிய செயலை செய்வதால் புகழ்ந்து கூறப்படுவது. இதை விட இன்னொன்று உண்டு. Notorious என்று. கூடாத ஒன்றிற்காக புகழ் பெறுதல்.. உதாரணத்திற்கு தனு. .. ராஜீவிற்கு குண்டு வைத்ததுடன் கண்டு, கேட்டறியாதவன் எல்லாம் அவர் பற்றி பேசினார்கள் தானே.

சிலருக்கு புகழ் தானாகவே திறமை காரணமாக வருகிறது. ஒருவரின் செய்தற்கரிய செயலைக் கண்டு மற்றவர்கள் வியந்து கொள்வது. வேறு சிலர் புகழுக்காகவே அலைவார்கள். இங்கே சங்கங்கள் தொடங்கினால் தலையைப் போட்டு தலைவர், செயலாளர், பொருளாளராக (இதன் நோக்கம் வேறு) வருவதற்கும் மேடைகளில் அனாவசியமாக வந்து முஞ்சியைக் காட்டுவதற்கும் அலைபவர்கள் இந்த ரகம். இது விளம்பரம். அதாவது பணம் கொடுத்து புகழை விலைக்கு வாங்க முயல்வது.

இந்த famous, notorious பற்றி தொடர்பு சாதனங்கள் அதிகம் பேசும். ஒருவருக்கு famous ஆக இருப்பவர் இன்னொருவருக்கு notorious ஆகவும் இருக்கலாம். உதாரணம் பிரபாகரன். தமிழர் சிலருக்கு இவர் விடுதலை வீரர், சிங்களவர் பலருக்கு, குறிப்பாக டிங்கிரிக்கு இவர் பயங்கரவாதி. (ஒருவேளை ப(ய)ங்கரவாசி என்பதைத் தான் மாறிச் சொல்கிறார்களோ.. பங்கர்வாசி என்பதை)

சமீபத்தில் பலஸ்தீனியர்கள் தொழுகையில் இருந்த போது சுட்டுக் கொண்டவர் முதல் கொண்டு கணவரின் ஆண் உறுப்பை அறுத்தெறிந்தவர் வரை இந்த தொடர்பு சாதனங்களுக்கு அவல்.. இதைக் கொண்டு பரபரப்பை ஏற்படுத்தி அதன் மூலம் வியாபாரம் செய்வதே நோக்கம். இது அசாதாரண செய்கைகள் செய்வதால் ஏற்படும்/ கிடைக்கும் விளம்பரம்.. புகழ்.

இதற்காக வேண்டுமென்றே காரியம் புரிபவர்களும் உண்டு. முன்பு ஊரில் ஆழிக்குமரன் ஆனந்தன் உலகசாதனை புரிந்தார். விளம்பரம். அதைப் பார்த்து நசீர் சாதனை புரிந்தார். இதன் பின்னர் சிறிஸ்கந்தராசா என்பவர் ஒற்றைக்காலில் நின்று சாதனை புரிந்தார். இப்போது பத்திரிகைகளில் அவர் பிரான்சில் திருமணத்தின் போது மனைவியின் தலைமுக்காடு விடயத்தில் சாதனை புரிந்ததாக இருந்தது. ("சிறிஸ்கந்த" பெயர்களுக்கும் கோளாறுகளுக்கும் அப்படி என்னதான் சம்பந்தமோ? எல்லாருமே புகழுக்காக அலைபவர்கள் போலிருக்கிறதே!)

★ ★ ★

ஒரே ஒரு சினிமாவில் பதினைந்து நிமிடத்திற்கு குறைவாக வந்தால் கூட உலகம் பூராவும் தமிழர்கள் மத்தியில் புகழ் கிடைத்து விடுகிறது. ரசிகப் பெருமக்களும் அவர்களை ஞாபகம் இருக்கிறது. இதை வைத்து இந்தியாவிலிருந்து இந்த 'கலைஞர்களை' இறக்குமதி செய்து பணம் சம்பாதிக்கின்ற 'கவுண்டமணிகளும்' உண்டு.

அட, இதென்ன மற்றவன் பத்திரிகையில் எங்களைப் பற்றி வாறது என்று தமிழர்களே ஆளுக்கொரு பத்திரிகை வெளியிட்டு தலையங்கம் போடுகிறார்கள். இதில் ஒரு சில சஞ்சிகைகள், பத்திரிகைகளுடன் பதினைந்து நிமிடப் புகழ் பெற்றவர்கள் எத்தனை பேர்? பதினைந்து நிமிடப் புகழால் ரொம்பவும் அவதிப்பட்ட ஒட்டக்கூத்தன், நக்கீரன் பற்றி அடுத்த வாரம்..

★ ★ ★

உலகத்தமிழரைப் புரட்டிப் பாருங்கள். .. கேணல் ரீகன், கப்டன் கடாபி, லெப்டினன்ட் காஸ்ட்ரோ, மேஜர் சங்கர் என்று எத்தனை நூற்றுக்கணக்கில் இளம் பாலகர்களின் உயிர்கள் பலியாக்கப்பட்டு, மாவீரர்களாக்கப்பட்டு பதினைந்து வயதாவதற்கு முன்னமே அவர்களுக்கு பதினைந்து நிமிடப் புகழும் கொடுக்கப்பட்டு மறக்கப்படுகிறது. இப்படி இதுவரையும் ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த பதினைந்து நிமிடப் புகழ் கிடைத்திருக்கிறது. யாரோ பாதுகாப்பாயும் சொகுசாயும் வாழ்வதற்கு யார் வாழ வேண்டிய வயதில் உயிரைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மாத்தயா போன்ற சிலர் தங்களது புகழின் தவணைக்காலம் முடிந்ததும் ஒதுக்கப்படுவதும் உண்டு. Time expired.

★ ★ ★

செயற்கரிய சாதனைகளைப் புரியாமலும் மோசமான செயல்களைச் செய்யாமலும் தங்கள் பங்கான பதினைந்து நிமிடப் புகழைப் பெறுபவர்கள் எத்தனை பேர்? தமிழ் பத்திரிகைகளைப் புரட்டிப் பாருங்கள்? இந்த பதினைந்து நிமிட புகழ் எங்கள் தமிழர்களில் எத்தனை பேருக்கு கிடைத்திருக்கின்றன? விடுதலைப் போராட்டத்தில் உயிரை ஈந்து மாவீரர் ஆகாமலேயே புகழ் பெறுபவர்கள் எத்தனை பேர்? வீரகேசரியைப் புரட்டிப் பாருங்கள். பணம் கொடுத்தே புகழை பெற முயற்சிக்கின்ற தமிழர்களின் சேஷ்டைகள்.

. யாழ்-இந்து உயர்வேளாள குலத்தைச் சேர்ந்த, பட்டதாரியான, தற்போது கனடாவில் நல்ல தொழில் புரியும் கனடிய பிரஜையான மணமகனுக்கு மணமகள் தேவை! இந்த பதினைந்து டொலர் புகழினால் (வரி விளம்பரத்திற்கான பணம்) முகம் தெரியாத இந்த 'அழகான வாலிபரை' நம்பி மகளையும் லட்சக்கணக்கில் பணத்தையும் கொடுக்க எத்தனை பேர் தயாராய் இருப்பார்கள்? புகழ் படுத்தும் பாடு அப்படி! முகம் தெரியாமலேயே இப்படி புகழ் என்றால்... முகம் தெரிந்திருந்தால்?

காணவில்லை: மாத்தளையில் சண்முகா ஸ்டோரில் பணி புரிந்த பாலு என்ற பதினான்கு வயது வாலிபரைக் காணவில்லை. (ஏய், பதினாலு வயதுச் சிறுவனா, வாலிபனா?). அந்தப் பையனுக்கு ஒரு பதினைந்து நிமிடப் புகழ். வேறொன்றுமில்லை. பையன் வேலைத் துன்பம் தாங்காமல் கல்லாவிற்குள் கைக்குள் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடி விட்டிருப்பான். இதனால் தான் சிறுவன் என்று சொல்லாமல் வாலிபன்! பாவம் பையன். . பதினைந்து வயதுக்குள் பதினைந்து வருட சர்வதேசப் புகழ்.. காணாமல் கேள்விப்படாமல் இருந்த நாங்கள் எல்லாம் அந்தப் பையன் பற்றிப் பேசுகிறோம்.

மரண அறிவித்தல்களைப் பாருங்கள்... இந்த வெளிநாடு சென்ற ஈழத்தமிழர்களின் புண்ணியத்தால் தான் வீரகேசரி ஓஃப் செட் அச்சு முறைக்கு மாறியது. முன்பு ஈயத்தில் உருக்கி வார்த்த அச்செழுத்து கொஞ்ச நாளில் தேய்ந்து போகும். 'ஜே.ஆர் சனியன் சிங்கப்பூர் பயணமானார்' என்று இருக்கும். சனியன்றுவில் உள்ள று தேய்ந்து

போய் உருத் தெரிந்திருக்காது. ஊரில் இருக்கும் போது மரண அறிவித்தல் வீரகேசரிக்கு கொடுப்பதாயிருந்தால் எக்கச்சக்கமான பணம்.. தமிழர்கள் புலம் பெயர ஆரம்பித்தார்கள். டொலர்கள், மார்க்குகள், பிராங்குகள் மாற்றப்படும் போது ருபா இழந்த மதிப்பினால்... தங்கள் பங்கான பதினைந்து நிமிட புகழை தமிழர்கள் விலை கொடுத்தே வாங்க ஆரம்பித்தார்கள். அரைப்பக்கத்தில் வண்ணப்படத்தில் மரண அறிவித்தல்கள் வரும். இந்த வருமானத்தை எதிர்பார்த்துத் தான் வீரகேசரி புதிய அச்சகம் அமைக்க நேர்ந்தது.

மரண அறிவித்தல்களில் இருப்பவர்களில் பலர் நீங்கள் கண்டு கேட்டறிந்திருக்க மாட்டீர்கள். "காலம் சென்ற உயர்திரு"க்களின் விளம்பரங்களில் படத்துடன் காட்சியளிப்பர் பலர். இவர்கள் காலம் செல்வதால் உயர்திரு ஆனார்களா? அல்லது வீரகேசரியில் படம் வெளிவந்ததால் உயர்திரு ஆனார்களா தெரியாது. எல்லாருமே உயர்திரு தான்.

இவர்களின் படங்களுக்கு பின்னால்... ஜேர்மனியிலிருக்கும் மூத்த மகன், மனைவி, பிள்ளைகள், பிரான்சிலிருக்கும் சித்தப்பா என்று எக்கச்சக்கமான பேருக்கு பதினைந்து நிமிடப் புகழ் கிடைக்கும். வாசித்து பதினைந்து நிமிடங்களில் நீங்களும் மறந்து விடுவீர்கள்.

சில நேரங்களில் இந்த மரண அறிவித்தல்களை வாசிக்கும் போது கண்ணீர் வரும். குடும்பமாக இறந்தோர், குழந்தைப் பருவத்தில் இறந்தோர் என்று இந்த யுத்தம் காரணமாக இறந்தவர்களைப் பார்க்கும் போது மனதில் வேதனை நிறையும். ஏன் இந்த யுத்தம் என்று மனம் கேட்கும். 'உயிரை விட மானம் பெரிதென்று வாழும் இந்த கவரிமான் தமிழர்களிடம் போய் இதை சொன்னால் கேட்கவா போகிறீர்கள்?'

ஜேர்மனியில் வாழும் ....... தம்பதிகளின் செல்வப்புதல்வி பாதுஷா (புதிய கலைச்சொல்லாக்கத்தில் தமிழர்களைக் கேட்டுத்தான். பிள்ளைகளின் பெயர்களை நியூமரோலஜி படியும் ஏதாவது ஒரு ஷன், ஷிகா, ஷா வில் முடியும்படியுமாக பெயர் வைப்பார்கள்)வின் காது குத்து வைபத்தை ஒட்டி அவரது அப்பா, அண்ணா, ஊரில் இருக்கும் கொள்ளுத்தாத்தா, முந்த நாள் பிறந்த தங்கை ரிக்ஷா, அப்பாவின் நண்பரான .... அங்கிள் ஆகியோருக்கு பதினைந்து நிமிடப் புகழ் கிடைக்கும். வெளிவந்த படத்தையும் விளம்பரத்தையும் பார்த்து பூரித்துப் போவார்கள். இவர்கள் யாரையுமே இவர்களின் உறவினர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியாது.

உலகத்தமிழரில் கெரில்லா உடையுடன் ஏ.கே தாங்கியபடி பிறந்த நாள் விளம்பரத்திற்கு போஸ் கொடுத்த பிள்ளைகளைப் பார்த்திருக்கிறேன். பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என்பது இதைத் தானா? அங்கே ஏகே தூக்கிய குழந்தைகள் எல்லாம் மாவீரர்களாக தியாகம் செய்து கொண்டிருக்கின்றன. இங்கே போஸ்..

பிரான்சில் வாழும் — தம்பதிகளின் ஏகபுதல்வி ...... யின் பூப்புனித நீராட்டு விழா விளம்பரம்.. அந்தப் பிள்ளை வாழ்வில் கடைசிக்கு முதல் தடவையாக தமிழ் பண்பாட்டில் கூறை உடுத்தி (அடுத்த கடைசித் தடவை திருமணத்தின் போது) மூக்குத்தி போட்டு இடுப்பில் ஒட்டியாணம், தலையில் நெற்றிப் பட்டம் போட்டு மங்களகரமாகக் காட்சியளிக்க வீரகேசரியில் விளம்பரம் வரும். இனியென்ன தம்பதிகளைக் காண்கின்ற இளசுகளெல்லாம் அங்கிள், அன்ரி என்று அலையும். இத்தால் சகலரும் அறிய என்னிடம் திருமண வயதில் ஒரு இளம் பெண் உள்ளாள், இவளுக்கு ஐந்து அண்ணன்மார் உள்ளனர் (அவர்களின் பெயரும் அந்த விளம்பரத்தில் வாழ்த்துவோர் பெயரில் இருக்கும்) எனவே சைட் அடிக்க விரும்புவோர் ஜாக்கிரதை என்ற ரீதியில் விளம்பரம் இருக்கும். பெண் வயசுக்கு வாறது ஏதோ ஆஸ்கார் விருது கிடைக்கிற மாதிரி.. உலகம் முழுக்க தண்டோராப் போடனுமாக்கும்.

கனடா, ஸ்காபரோ, ..... வீதி, அறை இல:13 ஐச் சேர்ந்த திருநிறைச் செல்வன் (இவர் உயர்திரு அல்ல) கோ தண்டராமனுக்கும் கொழும்பு 13, ... ரோட்டில் வசிக்கும் ... செல்வப்புதல்வி கோதையாண்டாளுக்கும் ஸ்காபரோவில் கோவில் கொண்டெழுந்தருள் பாலிக்கும் வைரவப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்ற திருமண விழாவில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் வாழ்த்துச் சொல்லியோருக்கும் (ஒரு விளம்பரத்தில் பாக்ஸ் மூலம் வாழ்த்துச் சொல்லியோருக்கும் என்றிருக்கிறது) இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பார்கள். (ஒரு விளம்பரத்தில் கொழும்பில் எந்த ஹோட்டலில், எத்தனையாம்மாடியில் எந்த அறையில் திருமணம் நடந்தது என்றெல்லாம் இருந்தது... சரி இது எதற்கு? விலாசம் காட்டத் தானே!) இங்க வா.. உன்ரை கலியாண வீட்டுக்கு எத்தனை சனம் வந்தது.. ஒரு இருநூறு சனம்! போன் அடிச்சது? ஒரு நூறு. ஒரு முன்னூறு பேருக்கு காட் போட எவ்வளவு காசு.. விளம்பரத்துக்கு எவ்வளவு காசு? உனக்கு உன்ரை கலியாணப் போட்டோவை பிரபு குஷ்பு எண்ட நினைப்பில் வீரகேசரியில் போட வேணும் எண்டு விருப்பம்.. ஒரு பதினைந்து நிமிடப் புகழ். பிறகென்ன.. இதயம் கனிந்த நன்றி?

சுவிஸில் நடைபெறும் திருமணத்திற்கு அழைப்பு.. கடைசியில் இன்ன புகையிரதம் எடுத்து எத்தனையாவது ஸ்டேஷனில் இறங்கவும் என்றெல்லாம் குறிப்பு இருக்கும். இவர்களுக்கு வேண்டப்பட்ட எத்தனை பேர் பேப்பர் வாசிக்கிறார்கள்? நேரே வீட்டை போய் சரியான ஆட்கள் கொடுக்கா விட்டால் சபை சந்திக்கு போகாத யாழ்ப்பாணத்தான் உங்க கலியாண வீட்டுக்கு வருவானா? பெரிய்ய தொழிலதிபர் வீட்டு கலியாணம்... ஜெயலலிதா, கருணாநிதி, கமல், ரஜனி எல்லாம் வரப் போகிறார்கள் என்ற மாதிரி... தெரிந்த நல்ல நண்பர்கள், உறவினர்கள்.. நேரே அழைப்பு அல்லது ஒரு காட் அல்லது போன் கோல்.. இந்த விளம்பரமும் எதற்கு? ஒரு பதினைந்து நிமிட திருப்திக்கு தானே..

★ ★ ★

இந்த மரண அறிவித்தல், திருமண அறிவித்தல் எல்லாம் உண்மையில் ஒரு தகவல் தருவதற்காக தரப்படுகின்ற விடயம்... எங்களுக்கு தெரிந்தவர், தெரிந்தவரின் உறவினர் திருமணம் செய்தால், இறந்தால் அறிவதற்கு பயன்படுகின்ற விடயம் இது. ஆனால் இது தற்போது புகழ் பெற விரும்பும் விளம்பரமாக, புலம் பெயர் பண்பாட்டு அம்சமாகத் தான் பயன்படுகிறது. கல்வியங்காட்டில் இறந்து போன கண்ணம்மாக் கிழவியின் கடைசி மகளுக்கு போன வாரம் பிறந்த குழந்தையின் பெயர் வந்தால்—

ஏய்.. என் காசு.. நான் விளம்பரம் போடுவேன், உனக்கென்னையா என்றால் நான் எதைச் சொல்ல முடியும்? ஆனால் என் காசு, நான் பேப்பர் வாங்குகிறேன். உன் முஞ்சியை அதில் பார்க்க சகிக்கலையே என்பேனே...

★ ★ ★

இன்னொரு ரகம் உண்டு. அறிவைப் பெருக்குவதற்காக சினிமா கேள்வி கேட்கின்ற ரகம்.. சுவிஸிலிருந்து பிரேம்காந்த் என்பவர் கேட்ட சினி கேள்வி.. மூன்று முடிச்சு எந்த ஆண்டு வெளிவந்தது? இங்க வா.. உனக்கு அதை தெரிஞ்சுக்காட்டி நித்திரை வராதோ. .. அப்படி தலை போகிற அவசரமா யிருந்தால்... வீடியோக் கடையில் வீடியோப் பிரதியை எடுத்துப் பார்த்தால்

அதில் முதல் சேர்ட்டிபிக்கேட்டில் இருக்கும். பிறகென்ன? கடிதம் போட்டு அது வரும் வரையில் நித்திரையில்லாமல்... பத்திரிகையில் அச்சில் பெயர் வர வேண்டும் என்ற விருப்பம். அதனால் ரொம்ப முக்கியமான கேள்வி..

இந்த அச்சில் பெயர் வருகின்ற விடயம் பலரை அடித்துப் போடுகின்ற விடயம்.. தங்கள் பெயரை அச்சில் கண்டதும் 'பதினைந்து வருடப் புகழ்' கிடைத்த மாதிரி... யாரோ ஒருவர் டெலிபோன் டிரெக்டரியில் தனது பெயரில் அச்சில் வந்திருப்பதைப் பார்த்து அதை வெட்டி ஊரில் வீட்டுக்கு அனுப்பி வைத்தாராம்... கனடிய புத்தகத்தில் தனது பெயரும் வந்திருக்கிறது என்று. . உண்மைச் சம்பவம் இது.

வெளிநாடு பயணமானூர்.. படத்துடன் வரும். இப்ப முழு யாழ்ப்பாணமுமே வெளிநாடு பயணித்து விட்டது. இதில்என்ன புதினம்! எங்களுக்கு முன் 'வெளிநாடு பயணமான வர்கள்' வெளிநாட்டில் என்ன செய்தார்கள் என்பது எங்களுக்கு பிறகு தானே தெரியவந்தது

★ ★

என் கணக்குப்படியும் எனக்கு ஒரு பதினைந்து நிமிடப் புகழ் கிடைத்தது. அதனால் வந்த தொல்லையே வேறு.. எனக்கும் என் மாஜிக் காதலி சூர்ப்பநகாவுக்கும் காதல். நானோ வாத்யார் (?).. கிராமவாசி! அவளோ பெரிய இடத்துப் பெண். நகரவாசி! நாங்கள் சந்தித்துக் கொண்ட இடத்தில் ஏதோ ஒரு வகையில் என் பெயர் பலருக்கு வாயில் புகாததாலோ என்னவோ வாயில் புகக்கூடியதான ஒரு பெயர் சூட்டப்பட்டது. இயக்கப் பெயர் மாதிரி. .. ரவீந்திரன் என்று நல்ல தமிழ் பெயர் இருந்தால் இயக்கப் பெயராக மேஜர் ஜெனரல் லெப்டினன்ட் கேணல் கியூறியஸ் என்ற மாதிரி... கியூறியஸும் அதே பெயரிலேயே காதல் பண்ணினன். சூர்ப்பநகா அதே பெயரிலேயே கடிதமும் எழுதிக் கொள்வாள்.

கியூறியஸ் காதலியைத் துறந்து ஐரோப்பா வந்த வேளையில் கியூறியஸின் தாயார் காலமாகி விட்டார். இந்தத் தகவலை ஈழநாட்டில் விளம்பரம் பண்ணி விட்டார்கள். (நம்ப மாட்டீர்கள்.. வீட்டில் எனக்கும் என் அண்ணன்மார் இருவருக்கும் தான் நண்பர்கள் அதிகம் என்பதால் எம் மூவரின் பெயர் மட்டுமே விளம்பரத்தில் இருந்தது. அதை விட முழுப் பிள்ளைகளின் பெயரும், பேரர்கள் விபரமும் போடுவதாயிருந்தால் (முழுப்பக்கம் வேண்டும்). எனக்கும் பதினைந்து நிமிடப் புகழ் கிடைத்தது. என் அம்மா இறந்த செய்தி தெரிந்த சூர்ப்பநகா ஈழநாட்டைப் பார்த்தால் அதில் இருக்கின்ற கியூறியஸின் உண்மைப் பெயர் கண்டதும் கொதித்துப் போனள். தன்னை ஏமாற்றிக் காதல் பண்ணியதன் நோக்கமே தன்னை ஏமாற்றுவது தான் என்பது அவளது தீர்க்கமான முடிவானது. பிறகென்ன, காசைக் காசென்று பாராமல் ஈழநாடு ஒன்று வாங்கி அந்த விளம்பரத்தை வெட்டி எனக்கு அனுப்பி ஒரு பாட்டம் திட்டிய பின்னர் தான் அவள் ஆன்மா சாந்தியடைந்தது. எனது பதினைந்து நிமிடப் புகழ் எங்கள் காதலுக்கே அள்ளி வைக்க காரணமானது. இந்த பதினைந்து நிமிடப் புகழ் இப்படி...

★ ★ ★

ஆசிரியரைக் கேட்டேன்.. ஏங்க. உங்களுக்கு இப்படி ஒரு பதினைந்து நிமிடப் புகழ் கிடைக்கலியா என்று. கிடைத்திருக்கிறது. அதுவும் எனது ஐந்து வயதில் என்றார். என்ன அந்த நேரமே உங்கள் பிறந்த நாளை ஈழநாட்டில் போட்டார்களோ? இல்லையடா.. இதோ...

சொந்த வீடு மோட்கேஜ் பிரச்சனை காரணமாக ஜப்தி ஆகி விட்டது. அதுதான்! ஈடு வைக்கப்பட்டதில் வட்டி முதலை விழுங்கி விட்டது. வீட்டை விட்டு நீதிமன்றக் கட்டளைப் பிரகாரம் பலவந்தமாக வெளியேற்றம். சமையல் பாத்திரங்கள் உட்பட்ட பொருட்கள் எல்லாம் றோட்டில் வீசப்பட்டதும் அதில் ஒரு இருதய ஆண்டவர் படம் றோட்டருகில் வேலியோடு சாத்தி வைக்கப்பட்டிருந்ததும் தனக்கு இப்போதும் மனதில் நிற்பவை.. இதனல் வேறு ஒரு உறவினரின் வளவில் தற்காலிக குடிசை அமைப்பு.. அவர்களோ கொஞ்ச நாளில் இவர்களை வெளியேற்றுவதற்காக அந்தக் குடிசைக்கு தீவைக்க... ஆடைகள், புத்தகங்கள், அக்காமார் ஆசையோடு வாங்கித் தந்த புத்தகப் பை எல்லாம் தீயில்... மீண்டும் நடுத்தெருவில்..

இதைப் பார்த்த ஒரு யுத்த முனை நிருபர் சஞ்சயன் மித்திரனில் செய்தி போட்டார். ஆசிரியருக்கு இரண்டு அண்ணன்மார் லெனின், ஸ்டாலின் பெயர்களில். ஆசிரியர் பெயர் வேறு ரஷ்யப் பெயர். சஞ்சயனுக்கு குஷி.. திடுக்கிடும் செய்தி மித்திரனில்... ஸ்டாலின், லெனின், குருஷ்சேவ் மூவரும் நடுத்தெருவில். தலையங்கத்துடன் செய்தி வந்தது. இதென்ன பலாய் என்று வாசகப் பெருமக்கள் உள்ளே வாசித்தால். .. வீடு எரிந்து உடைமைகளை இழந்த நிலையில் அவரது குடும்பம்..

This newspaper is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.
Editor: George R.Ckrhushchev
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.
Tel: (416) 920 9081
Fax: (416) 963 5738
E mail:71650.3216
@Compuserve.com

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

SIVA'S TRADING CO LTD
321-2739

# ஸ்காபரோ நகரின்
# தன்னிகரற்ற
# தமிழ் வியாபார நிலையம்

**அனைத்துப் பொருட்களும் மலிவுவிலையில்**

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

## சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

---

# P.S.T.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

Video Transfer
(Any system)
$8.99